
# திருக்கோயில்



ஜூலை - ஆகஸ்ட் 1985 விலை ரூ 4.00



மேதகு குடியரசுத் தலைவர் திருமிகு ஜெயில்சிங் அவர்கள் அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்திறகு வருகை தந்தபோது மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள் குடியரசுத் தலைவரை வரவேற்று ஆலயத்திற்கு அழைத்துச் செல்லும் காட்சி,

முகப்பு

திருமயிலை அருள்மிகு வெள்ளீஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீவள்ளி தெய்வயானையருடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிகளின் எழில்மிகு தோற்றம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 27

திருவள்ளுவர் ஆண்டு 2016 குரோதன ஆண்டு ஆடி & ஆவணி
ஜூலை, ஆகஸ்ட் 1985 விலை ரூ. 4-00

மணி : 7, 8

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள் !

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
**ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை-600034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம் சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா**
**உள்நாடு ரூ 24.00**
**வெளிநாடு ரூ 36.00**

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும். தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் **(Pin code)** எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

## பொருளடக்கம்

தஞ்சைப் பெரிய கோயிலில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுச் செயல்முறை துவக்க விழாவில் அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை.

உருவ வழிபாடும் தமிழ் மொழி வளர்ச்சியும்
—மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்

கோயில் திருத்தம்
—அமரர் மகாகவி பாரதியார்

திரைகள் அகல வேண்டும்
—டாக்டர் மின்னூர் சீனிவாசன்

திருவள்ளுவர் காட்டும் பகைமாட்சியும், பகைத் திறம் தெளிதலும்
—டாக்டர் பொற்கோ

உடையவர் போற்றிய உறங்காவில்லி
—டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு
—யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர்

விவேகானந்தர்
—கவிஞர் மதிவண்ணன்

கிருட்டிணன் தூதுச் சருக்கம்
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

இலக்கியத்தில் காவேரி
—டாக்டர் சொ. சிங்காரவேலன்

நெற்றிக் கண்ணனும் வெற்றிச் செல்வியும்
—திருமதி உமாபார்வதி

பகவான் இராமகிருஷ்ணரின் பொன்மொழிகள்

## தஞ்சைப்பெருவுடையார் கோயிலில் நடைபெற்ற

# ஆலய மேம்பாட்டுச் செயல்முறை துவக்க விழாவில்

### மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை....



தமிழக அரசினுடைய அறநிலையத்துறைச் செயலாளர் அவர்களே! வணக்கத்திற்குரிய சமயச்சான்றோர்களே! அறிஞர் பெருமக்களே! பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர்களே! முன்னாள் அறநிலையத்துறை ஆணையர் அவர்களே! பழநித் திருக்கோயிலினுடைய தக்கார் அவர்களே! இங்கே வருகை தந்திருக்கின்ற பெருமக்களே! தாய்மார்களே! அறநிலையத்துறையிலே ஆலயங்களிலே பணிபுரிகின்ற அர்ச்சகர் பெருமக்களே! அலுவலர்களே! அதிகாரிகளே!

### எதிர்காலத்தில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி

தமிழகத்தினுடைய சமய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்துக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவருடைய ஆட்சியில் எதிர்காலத்தில் குறிப்பிடப்படவேண்டிய ஒரு நிகழ்ச்சியை மாமன்னன் இராஜராஜன் எழுப்பிய இராஜராஜேஸ்வரத்தில் நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள், சமயபுரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆணைப்படி, தமிழகத்திலே ஒரு வேளை பூசை கூட நடத்த முடியாமல் மூடிக்கிடக்கின்ற ஆலயங்களிலே பூசைகள் நடத்தவும், ஆலயத்திலே பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு உதவிகள் வழங்கவும், கிராமங்களிலே ஏழை எளிய மக்கள் குறிப்பாக ஆதிதிராவிட மக்கள், தாங்கள் வாழ்கின்ற பகுதிகளிலே ஆலயங்களை எழுப்ப முடியாமல் உதவி வேண்டி நிற்கிற நேரத்திலே அவர்களுக்கு உதவி செய்யவும் 7 கோடி ரூபாய் வைப்புநிதியைத்தொடங்கி வைத்து, அதிலே இருந்து வருகின்ற வட்டியைக் கொண்டு, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சமயச் சான்றோர்கள் முன்னிலையில் சென்ற ஆண்டு இத் திட்டம் தொடங்கப் பெற்றது. ஆனால் ஆகஸ்ட் 15 ஆம் தேதி அந்தத் திட்டம் தொடங்கப்பட்டதே தவிர, 7 கோடி ரூபாய் அன்றைக்கு உருவாக்கப்படவில்லை. அதற்கான அரசாணையைப் பிறப்பித்து அந்த விழாவை நடத்தினோமே தவிர, அன்றைக்கு அந்த 7 கோடி ரூபாய் திரட்டப்படவில்லை. அதற்குப் பிறகு ஒரு நான்கு மாத காலத்தில் தமிழகத்தினுடைய ஆலயங்களிலே - அதிக வருமானம் வருகின்ற ஆலயங்களிலே - உபரிநிதியை வைத்துக் கொண்டிருக்கிற ஆலயங்களிலே இருந்து 7 கோடி ரூபாயைத் திரட்டினோம். அதில் பழநி ஆலயத்திலே இருந்து மாத்திரம் சுமார் 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அதனாலேதான் ஆலயங்களிலே நிர்வாகக் குழுவின் தலைவர்களாக-தக்கார்களாக இருக்கின்றவர்களின் சார்பில் இன்றைக்கு நம்முடைய அழகப்பா பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தராக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அன்பிற்குரிய அம்மையார் டாக்டர் இராதா தியாகராசன் அவர்கள் இந்த மேடையிலே பங்கு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 7 கோடி ரூபாய் அன்றைக்கு நான்கு மாத காலத்திலே திரட்டி, வங்கிகளிலே சேமித்ததற்குப் பிறகு இன்

றைக்கு ஆறுமாத காலத்திலே சுமார் 40 இலட்ச ரூபாயைத் தாண்டி வட்டியாகச் சேர்ந்திருக்கிறது.

## தூய்மையான உணர்வோடு எடுத்துக் கொண்ட ஒரு நடவடிக்கை

அப்படித் திட்டத்தை அறிவித்தோம். அந்தத் திட்டம் அறிவிப்போடு நின்றுவிட்டதா? அல்லது நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று கூட நாட்டிலே இருக்கிற நல்லவர்கள் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். எங்களுடைய மரியாதைக்குரிய ஒரு சமயச் சான்றோர் - பெரியவர் ஒருவர் கூட இந்த ஏழு கோடி ரூபாய் திட்டத்தைக் கேள்விப்பட்ட உடன் ''என்ன அரசுக்குப் பணம் தேவைப்படுகிறதோ? ஆலயத்திலே இருந்து நிதி திரட்டுகிறார்களோ?'' என்று கேட்டதாகக் கூட நான் கேள்விப்பட்டேன். இத்தனை ஆண்டுக் காலத்திற்குப் பிறகு அரசு ஒரு தூய்மையான உணர்வோடு எடுத்துக்கொண்ட ஒரு நடவடிக்கையைப் பற்றி, ஒரு சமயப் பெரியவர் இப்படி கேள்வி கேட்கிறாரே என்று நான் வருத்தப்படவில்லை. அவர்கள் ஐயப்படுகிற அளவிற்கு இந்த நாட்டினுடைய நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறதே என்றுதான் எண்ணிப் பார்த்தேனே தவிர, அவர்களுடைய சந்தேகத்தைப் போக்க வேண்டியது நம்முடைய கடமை என்று எண்ணினேனே தவிர, அவர்கள் அப்படிக் கேட்டு விட்டார்களே என்று நான் கோபப்படவில்லை; வருத்தப்படவில்லை. ஆகவே, தமிழ் நாடு முழுவதும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்தத் திட்டம் செயற்படுத்துகின்ற நாளாக இன்றைக்கு இதை அறிவித்து இங்கே நடத்திக் கொண்டிருக்கிறோம்.

## மனம் துடிதுடிக்க வைத்த ஒரு நிகழ்ச்சி

இந்தத் திட்டத்தை அறிவித்த சமயபுரத்திலே இதன் செயல்முறைத் துவக்க விழாவையும் நடத்தியிருக்கலாம். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கூட, ''நாங்கள் தானே இந்த விழாவை மிகச் சிறப்பாக நடத்தி முடித்தோம். அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்ற அந்த நிகழ்ச்சியையும் இங்கேயே வைத்துக்கொண்டால் இன்னும் சிறப்பாக நடத்தலாமே'' என்று கேட்டார்கள். தமிழகத்திலேயே 2 கோடியே 60 இலட்சம் தந்த பழநிக் கோயில் இருக்கிற பழநியிலேகூட இந்த விழாவை நடத்தலாமே என்று கூட சிலர் தெரிவித்தார்கள். ஆனால் நான்தான் தஞ்சையிலே இந்த விழா நடத்தப்படும் என்று 10 நாட்களுக்கு முன்பு இங்கே வந்திருந்தபோது பத்திரிகையாளர்களிடம் அறிவித்தேன். காரணம் தஞ்சையிலே இருக்கிற பத்திரிகையாளர்களுக்கு இந்த ஆலயங்களைப் பற்றி ஆர்வம் அதிகம். நான் இங்கே வருகிற நேரத்திலே எல்லாம், நான் பல துறைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாலும் அவர்கள் இந்த அறநிலையத்துறையைப் பற்றி-ஆலயங்களைப் பற்றித்தான் அதிகமாகக் கேட்பார்கள். அவர்கள் கேட்பதற்கும் காரணம் இருக்கிறது. கவலைப்படுவதற்கும் காரணம் இருக்கிறது. காரணம் 1000 ஆண்டுகளுக்கு முன்னாலே நம்முடைய பெருமையை உலகத்திற்கு அறிவிப்பதற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயத்தை எழுப்பிவிட்டுச் சென்றானே மாமன்னன் இராஜராஜன்! நம்முடைய அழகப்பா பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தர் அவர்கள் விவரமாகச் சொன்னார்களே இந்த ஆலய அமைப்பைப் பற்றி. இந்த ஆலயத்திற்காக எவ்வளவு நிவந்தங்கள் விடப்பட்டன. இந்த ஆலயம் ஆண்டாண்டுக் காலமாக எந்தவிதக் குறையும் இன்றி நடத்தப்பட வேண்டும் என்று எண்ணி, அவன் கட்டளைகளை எல்லாம் உருவாக்கிவிட்டுச் சென்றானே! இந்த ஆலயத்திலே தான் அர்ச்சகர்கள் ஒரு நாள் இந்த ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்ய மாட்டோம் என்று கதவைப் பூட்டிய சம்பவமும் நடந்தது. இந்தத் தஞ்சை மண்ணிலே தான் ஆலயத்திலே அர்ச்சனை செய்து கொண்டிருந்த ஒரு அர்ச்சகர் வறுமையாலே சம்பளம் கிடைக்கவில்லை; ஆகவே என்னுடைய குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை என்று தூக்கிட்டுக் கொண்ட அந்தத் துயரமான நிகழ்ச்சியும் நடந்தது. நாமெல்லாம் நமக்கு ஏதாவது கொஞ்சமாவது உணர்வு இருந்தால் இன்றைக்கு ஏதோ எல்லோருக்கும் உபதேசம் செய்து கொண்டிருக்கிறோமே! ''ஆலயங்களைக் காப்பாற்றவேண்டும். ஆலயத்தை அரசு எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆலயத்திற்குள்ளே அரசே நுழையாதே! ஆலயத்தை விட்டு அரசே வெளியேறு'' என்று குரல்கொடுக்க வருகிறார்களே! என்னுடைய அன்பிற்குரிய நண்பர்கள், அவர்கள் எல்லாம் வெட்கப்படவில்லை. வேதனைப்படவில்லை. துடிக்கவில்லை, துவளவில்லை, இந்த நாட்டிலே ஒரு ஆலயத்திலே ஒரு அர்ச்சகன் சம்பளம் கொடுக்க முடியாமல் தனக்குச் சேர வேண்டிய அந்த வருவாய் கிடைக்காமல் தூக்கிட்டுக் கொண்டானே! அப்படி துடிதுடிக்கின்ற நிகழ்ச்சி நம்மையெல்லாம் கேவலப்படுத்துகின்ற உணர்வுடையவர்களாக உலகிற்கு அறிவிக்கின்ற நிகழ்ச்சியும் இந்தத் தஞ்சை மண்ணிலே தான் நடந்தது. ஆணையர் அவர்கள் தெரிவித்தார்களே! இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற ஆலயங்களில் அதிக ஆலயங்கள் தஞ்சை மாவட்டத்திலேதான் இருக்கிறது என்று - அந்தப் பெருமையும் தஞ்சைக்குதான் இருக்கிறது. ஆலயத்திற்குச் சொத்துக்கள் இருக்கின்ற அந்தப் பெருமையும் தஞ்சைக்குத்தான் இருக்கிறது. ஆனால் ஆலயச் சொத்துக்களை அபகரித்துக் கொள்ளவில்லை. ஆனால் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறோம்; ஒரு காசு கூட ஆலயத்திற்குத் தரமாட்டோம் என்று சொல்லுகிற ஆத்திகர்களும் இந்தத் தஞ்சையில்தான் இருக்கிறார்கள்.

## நாத்திகம் சமுதாய தத்துவம் ஆக முடியாது

அவர்கள் எல்லாம் நாத்திகர்கள் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். நாத்திகர்கள் இந்த நாட்டிலே விரல்விட்டு எண்ணுகிறவர்கள் தான். நாத்திகம் என்பது ஒரு தனி மனிதனுடைய கொள்கையாக இருக்க முடியுமே தவிர,

ஒரு சமுதாயத்தினுடைய தத்துவமாக இருக்க முடியாது. அதை தயவுசெய்து தெரிந்து கொள்ளுங்கள். நாத்திகம் என்பது தனி மனிதனுடைய உணர்வாக இருக்க முடியுமே தவிர, ஒரு சமுதாயத்திற்கு வழிகாட்டுகிற தத்துவமாக மாற முடியாது. அது என்றைக்கும் நடைபெறாத ஒன்று. ஆனால் நாத்திகம் என்றைக்கும் இருந்து கொண்டு இருக்கும். இங்கே இருக்கிற சான்றோர்களுக்கே அது தெரியும். ஆகவே நாத்திகர்களாலே தான் இந்த நாடு கெட்டுவிட்டது என்று யாரும் எண்ணிக்கொண்டிருக்கத் தேவையில்லை. ஆத்திகர்கள் என்று அழைத்துக் கொள்கிறவர்கள் அல்லது ஆத்திகர்களுக்கு வழிநடத்துகிறவர்கள்; அவர்களுடைய பொறுப்பற்ற தன்மையினாலா அல்லது அக்கறையற்று அலட்சியப்படுத்திய காரணத்தினாலா என்ன காரணம் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால் தஞ்சை மாவட்டத்திலேதான் அது நடந்து கொண்டிருக்கிறது. இந்த மாவட்டத்திலே தான் ஆலயங்களுக்குச் சொத்துக்களும் அதிகம். இங்கே தான் மாமன்னன் இராஜராஜன் ஆயிரக்கணக்கான கலம் நெல் வருவதற்காக பல்லாயிரக்கணக்கான வேலி நிலங்களை எழுதி வைத்துவிட்டுச் சென்றான். வெளிநாடுகளிலே இருந்து கொண்டு வந்த தங்கங்களை எல்லாம் இதற்கு நிவந்தங்களாகத் தந்தான். அதைப்போல ஆயிரக்கணக்கான ஆலயங்கள் இங்கேதான் இருக்கின்றன. சொத்துக்களும் இருக்கின்றன. ஆனால் இந்தச் சொத்துக்கள் உள்ள ஆலயங்களிலேதான் வறுமை தாண்டவமாடுகிறது என்பது மாத்திரம் அல்ல. இங்கே பணியாற்றுகின்ற அர்ச்சகர்கள் - ஆலயப்பணியாளர்களுக்குச் சம்பளம் தர முடியாத துரதிர்ஷ்டமான நிலைமையும் இந்தத் தஞ்சை மாவட்டத்தில் தான் இருக்கிறது.

## 930 பேருக்கு சம்பள பாக்கி வழங்குகிறோம்

இன்றைக்கு இங்கே ஆலயங்களிலே பணியாற்றுகின்ற அலுவலர்கள் -நாம் அலுவலர்கள் என்று மரியாதையாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். சொல்லப் போனால் அர்ச்சகர்கள் 930 பேருக்கு இங்கே சம்பளபாக்கியை மாத்திரம் தரப்போகிறோம். பணமாக இருக்கிற பாக்கியை; அவர்களுக்கு நெல் பாக்கி இருக்கிறது. அதைத் தரப்போவதில்லை. அப்படி 930 பேருக்குத் தருகின்ற அந்த அதிகமான எண்ணிக்கை தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற அர்ச்சகர்கள் தான். அதற்கு அடுத்து நெல்லை மாவட்டம் வருகிறது. இந்த 2 மாவட்டங்கள் தான் தமிழகத்திலே பண்பாட்டைக் காப்பாற்றுவதற்கு - சமயத்தை வளர்ப்பதற்கு மிகச் சிறந்த சான்றோர்களை - தமிழகத்திற்கு இந்தியாவிற்கு வழங்கிய மாவட்டங்கள். இந்த 2 மாவட்டங்களிலே தான் இன்னறக்கு 930 அர்ச்சகர்கள் ; அநேகமாக அர்ச்சகர்கள் தான். மற்ற பிரிவினர்கள் இன்னும் குறைவாக இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்களுக்கு சுமார் 5,65,000 ரூபாய் சம்பள பாக்கியை மட்டும் தரப்போகின்றோம். மொத்தம் இங்கே கோயில்களுடைய உதவிக்காகவும் ஆலய அர்ச்சகர்களுக்கு-அலுவலர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்காகவும் இன்றைக்கு பதினைந்தேகால் இலட்ச ரூபாய் வழங்க இருக்கின்றோம்.

## வரலாறு படைத்துவிட்டு வாழ்ந்துகொண்டிருக்கிறான்

ஆகவேதான் இந்த நிகழ்ச்சியைத் தஞ்சையிலே நடத்த வேண்டும். அதைஇராஜராஜசோழன் எழுப்பிய இந்த இராஜராஜேஸ்வரத்தில் நடத்த வேண்டும் என்று நான் விரும்பினேன். இராஜராஜன் இன்றைக்கு இங்கே இல்லாமல் இருக்கலாம். அவன் வரலாறு படைத்து விட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் எழுப்பிய பெருவுடையார் இங்கே நம்முன்னாலே விளங்கிக்கொண்டு இருக்கிறார். அவர் முன்னாலே நம்முடைய பண்பாடுஎன்ன வளர்ந்திருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டாமா? 1000 ஆண்டுகளுக்கு முன்னாலேநீங்கள் இந்த நாட்டிலே எப்படிப்பட்ட பண்பாட்டை உருவாக்கி வளர்த்தீர்கள், வாழ வைத்தீர்கள்; 1000 ஆண்டுகளுக்குப் பின்னாலே நாங்கள் படித்தவர்கள் என்று மார்தட்டுகிறோம். விஞ்ஞானிகளாக மாறிவிட்டோம் என்று புகழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களை விட்டால் வேறு புத்திசாலிகள் இல்லை. இன்றைக்கு வாழ்கிறவர்கள்தான் புத்திசாலிகள், அன்றைக்கு வாழ்ந்தவர்கள் ஒன்றும் தெரியாத முட்டாள்கள் என்று நாங்கள் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறோம். அப்படி வாழ்ந்துகொண்டிருக்கிற எங்கள் காலத்திலே தான் நீங்கள் வைத்துவிட்டுப்போன அறக்கட்டளைகளையே நம்பிக்கை மோசடி செய்து அழித்துவிட்டு இருக்கிறார்கள். பணியாற்றுகிறவர்களுக்கு ஊதியம்கூடத் தர முடியாமல் மோசடி செய்து விட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன தண்டனையை இராஜராஜன் தருவானோ எனக்குத் தெரியாது. அரசனாக இருக்கிறவன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்று சொன்னார்களே! யார் எப்போது கொல்லப் போகிறார்கள் என்பதை எவரும் கண்டுகொண்டிருக்கவில்லை. ஆனால் இந்த நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குத்தான் அந்தப் பெருவுடையார் சந்நிதியிலே இராஜராஜேஸ்வரத்திலே இந்த நிகழ்ச்சி நடத்தப்படவேண்டும் என்று நான் விரும்பினேன். அதை இன்றைக்கு நடத்திக் கொண்டு இருக்கிறோம். இது பலருடைய சிந்தனையைக் கிளற வேண்டும். பலருக்குப் புதியநோக்கத்தை உருவாக்கவேண்டும்; புதிய சிந்தனைகளை உருவாக்க வேண்டும். அதுதான் எங்களுடைய கோரிக்கையே தவிர, நாங்கள் வேறு யாரையும் விமர்சிக்க விரும்பவில்லை.

## சந்நிதியில் நின்று கேட்கலாமே!

இன்றைக்கு இவ்வளவு கஷ்டத்தை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆலயங்கள் இருக்கின்றன. வழிகாட்டுகிற பெரியவர்கள், சான்றோர்கள் இருக்கிறார்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வந்த அந்த தத்துவங்கள் எல்

லாம் இருக்கின்றன. ஆனால் இன்றைக்கு நாம் படித்தவர்களாக - வளர்ந்தவர்களாக— அறிவு பெற்றவர்களாக, விஞ்ஞான உணர்வு பெற்றவர்களாக - சந்திரமண்டலத்திலே கால் வைக்கிறவர்களாக - இந்த உலகத்தையே விண் வெளியில் சுற்றி வருகிறவர்களாக நாம் பெரு மைப்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே மனிதன் பண்பாட்டைப் பெற்றுக்கொண்டிருக் கிறானா? மனிதன் மனிதனாக வாழ்ந்துகொண் டிருக்கிறானா? நாம் எண்ணிப் பார்ப்பதற்காக இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக் கிறோம். இன்றைக்கு பலபேர் அர்ச்சகர் களுக்குச் சங்கத்தை உருவாக்க வருகிறார்கள். அதற்குத் தலைமையேற்க வருகிறார்கள். ஆலயப் பணியாளர்களுக்குச் சங்கத்தை உரு வாக்குகிறார்கள். தலைமையேற்க வரு கிறார்கள். அவர்களை எல்லாம் அரசு ஊழி யர்களாக ஆக்குங்கள் என்றுசொல்லுகிறார்கள். கோரிக்கை வைப்பதற்குப் பலபேர் கிளம்பு கிறார்கள். ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்துவது எப்படி? எங்கே தவறு நிகழ்கிறது என்பதை எடுத்துச் சொல்லுவதற்கோ, அந்தத் தவறைத் திருத்துவதற்கோ யாருமே வர வில்லையே. அதை ராஜராஜன் எழுப்பிய இராஜாராஜேஸ்வரத்து ஆவுடையார் சந்நிதி யிலே நின்று கேட்கலாமே என்பதற்காகத் தான் இந்த நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக் கிறோம்.

## புரட்சித்தலைவரின் தெளிவான கொள்கை

இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, சமயத்துறையிலே மிகத்தெளிவான கொள்கையை மேற் கொண்டார்கள். மிகத் தெளிவான வழிகாட்டுதலை அவர்கள் எங் களுக்கு அறிவுறுத்தினார்கள். அதனுடைய விளைவாகத்தான் நான் இன்றைக்குப் பேசு கிறேன் என்றால் புரட்சித் தலைவரின் தெளி வான கொள்கை எங்களுக்கு வழிகாட்டுகிறது. அதனாலே நான் பேசிக்கொண்டிருக்கிறேன். ஒரு காலத்திலே நாம் எந்தக் கொள்கையைச் சார்ந்தவர்களாக இருந்தோம் என்பதல்ல. அந்தக் கொள்கையைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாதவர்களாக இருந்தோம் என்பது வேண்டுமானால் சரியாக இருக்கலாம். அதனாலே தான் நான் சொன்னேன். எதைப் பற்றியுமே சரியாகத் தெரிந்து கொள்ளாமல் இந்த நாட்டிலே நாம் வாழ்ந்துகொண்டிருக் கிறோம். இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். அது நாத்திகர்களுக்கு மாத்திரம் அல்ல. ஆத்திகர்களுக்கும் பொருந்தும். அத னாலேதான் இங்கே இருக்கிற சான்றோர்களை நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. வணக்கத் திற்குரிய திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர்கள் இவ்வளவு அக்கறையோடு உரிமையோடு சில கருத்துக்களை எடுத்துச் சொன்னதைப்பார்த்து நான் மகிழ்ந்தேன். அவர்களை வாழ்த்து கிறேன். வணங்குகிறேன். ஆனால் இவை களை எல்லாம் நீங்கள் யாருக்குச் சொல்லு கிறீர்கள் என்பது தான் எங்களுக்குத் தெரிய வேண்டிய ஒரு விஷயம். நீங்கள் இத்தனை ஆண்டுக்காலம் அந்தப் பொறுப்பிலேயே இருக் கிறீர்களே! "ஆர். எம். வீரப்பன் பேசுகிறார். அவர் ஆதீனகர்த்தர்போல் பேசுகிறார்" என்று நம்முடைய அன்பிற்குரிய அ.வெ.ரா. கிருஷ்ண சாமி ரெட்டியார் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் உள்ளத்திலே எண்ணுவதை அப் படியே சொல்லிவிட்டார்கள். காரணம் எங்கேயோ ஆதீனகர்த்தர்கள் எல்லாம் சொல் லாமல் இருக்கிறார்களே என்று அவர் எண்ணி னாரோ என்னவோ! ஆதீனகர்த்தர்கள் சொல் லாமல் இருக்கிறார்கள் என்பதனாலே நாங்கள் அந்த வேலையை எடுத்துக் கொள்ளவில்லை. இந்த வேலையைச் செய்ய வேண்டியவர்கள் பல பேர் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அத னாலே அந்த வேலையை எடுத்துக்கொண்டிருக் கிறோம். பொறுப்பிலே இருக்கிற காரணத்தி னாலே எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டா யம் எங்களுக்கு வருகிறது.

## மாலைபோட்டு வரவேற்றுக் கால்தொட்டு வணங்குகிறேன்

இப்படியெல்லாம் எடுத்துச் சொல்லி நாட்டிலே எழுச்சி உண்டானதற்குப் பிறகு தான் கரையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிபுகும் என்பார்களே! அதைப்போல இன் றைக்கு முழக்கத்தை எழுப்பிக்கொண்டிருக் கிறார்கள்! 'அரசே ஆலயத்தை விட்டு வெளி யேறு' என்று. அரசும் ஆலயத்தை விட்டு வெளியேறி விட்டால் என்ன நடக்கும் என் பதை இந்த நாட்டு மக்கள் தெரிந்துதான் வைத்திருக்கிறார்கள். அரசு வெளியேற வேண்டுமா வேண்டாமா என்பது பிரச்சினை அல்ல. ஆலயம் எப்படி நடக்க வேண்டும்? அந்த ஆலயத்தினுடைய சொத்துக்களை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் எப்படி அந்த பண்போடு - அந்த உணர்வோடு கடமையை நிறைவேற்றவேண்டும். இதைச் சொல்வதற்கு யாராவது வருகிறார்களா? நான் உங்களை மாலை போட்டு வரவேற்று உங்கள் கால் தொட்டு வணங்குகிறேன். அந்த வேலைக்கு வாருங்கள். இன்றைக்கு அவர்கள் சொன் னார்கள். அரசாங்கத்திற்கு நாம் உதவியாக இருக்க வேண்டும். இந்த ஆலய நிலங்களுக்குக் குத்தகை சட்டத்திலே இருந்து விதிவிலக்கு வருவதற்கு நாமெல்லாம் ஒரு அமைதிப்பேரணி ஒன்று நடத்த வேண்டும் என்று தெரிவித் தார்கள். அதை எதிர்க்கிறவர்கள் பேரணி நடத்துகிறார்கள். அந்த குரலை அரசாங்கம் செவிமடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே நாமும் நம்முடைய கடமையைச் செய்யவேண் டும் என்று சொன்னார்கள். நான் அதற்கு என்னுடைய மிகப்பெரிய மகிழ்ச்சியை — என்னுடைய நன்றியை - வாழ்த்துக்களை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட பேரணிக்கு நம்முடைய திருப் பனந்தாள் ஆதீனகர்த்தர் அவர்கள் நானும் வருவேன் என்று சொன்னார்களே! அதைத் தான் நான் எண்ணி எண்ணிப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். இந்த உணர்வு இந்தநாட்டிலே

சமயத்தலைவர்களுக்கு வந்தாகவேண்டும். சமயச் சான்றோர்களுக்கு வந்தாகவேண்டும். ஆனால் நீங்கள் அமைதிப் பேரணியை அரசிற்காக நடத்த வேண்டியதில்லை. உங்களுடைய பேரணிக்குப் பிறகு தான் அரசு இந்த முடிவை எடுக்கும் என்று நீங்கள் எண்ணவேண்டிய தில்லை. அரசு முடிவு எடுத்து விட்டது. அதை நீங்கள் தயவுசெய்து தெரிந்து கொள்ள வேண்டும்.

## பாக்கி கட்டவில்லையானால் வெளியேற்றலாம்

நீங்கள் விதி விலக்குத் தாருங்கள், விதி விலக்கு தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறீர்களே! அது விதிவிலக்கு தரவேண்டிய அவசியமே இன்றைக்கு இல்லாமல் இருக்கிறது! அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கடந்த 8 ஆண்டுகளாக ஒரு சட்டம் அமுலிலே இருந்தது. அந்தச் சட்டம் குத்தகைதாரர்கள் யாராவது குத்தகை பாக்கித் தரவில்லையானால் அவர்களை எதிர்த்து வழக்கு மன்றத்திற்கும் போக முடியாது. அவர்களை வெளியேற்றவும் முடியாது என்கின்ற மோரடோரியம் ( Moratorium ) என்ற பாதுகாப்புச் சட்டம் இருந்தது. அந்தச் சட்டம் வெளியிலே தெரியாமல் இன்றைக்குப் புதுப்பிக்கப்படவில்லை என்பதை - அந்த உண்மையை நான் உங்களுக்கு சொல்லுகிறேன். நீங்கள் கவனித்துக் கொண்டிருக்கவில்லை என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடிகிறது. இந்த ஆண்டு சனவரி மாதத்தோடு அந்தச்சட்டம் காலாவதியாகிவிட்டது. இன்றைக்கு யாராவது குத்தகைதாரர் பாக்கி வைத்திருந்தால், நீங்கள் உடனடியாக ரெவின்யூ கோர்ட்டிலே வழக்கு போடலாம். அவன் பாக்கியைத் தரவில்லையானால் அவனை வெளியேற்றலாம். நீங்கள் சுதந்திரமாக விடப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் ஒரே ஒரு பாதுகாப்பை இந்தக் குத்தகைதாரர்களுக்காக அரசாங்கம் வழங்கியிருக்கிறது. 83-ஆம் ஆண்டுவரை குத்தகை பாக்கியாக 7 ஆண்டுகள் 8 ஆண்டுகள் சேர்த்து வைத்திருக்கிறார்களே! அப்படிச் சேர்த்து வைத்து இருக்கிற பாக்கியை ஒரே நேரத்திலேயே கட்டு. இல்லையானால் உன்னை வெளியேற்றுவேன் என்று சொல்லுவது, அது சரியாக இருக்காது. நிலச்சீர்திருத்தத்துக்கும் உதவாது. உகந்ததாக இருக்காது. ஏழை எளிய மக்களை வாட்டுவதாக அமையும் என்கிற காரணத்தினாலே அரசாங்கம் இந்தச் செப்டம்பர் மாதத்திலே தொடங்கி 5 தவணைகளிலே அந்த பாக்கியைக் கட்ட வேண்டும் என்று ஒரு Relief Act என்று நேற்று முன் தினம் தான் அந்தச் சட்டத்தையே நிறைவேற்றி இருக்கிறோம். அந்தச் சட்டத்தின் மூலம் 83ஆம் ஆண்டு வரை அவர்கள் சேர்த்து வைத்திருக்கிற குத்தகை பாக்கியை 5 தவணைகளிலே 87 மார்ச் முடிவதற்குள்ளே அவர்கள் தந்தாக வேண்டும். அதிலேயும் ஒவ்வொரு தவணை குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட தவணைகளிலே பாக்கியைச் செலுத்தவில்லையானால் நீங்கள் உடனடியாகவும் நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே இன்றைக்கே உங்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஏமாற்றிக் கொண்டிருக்கிறவனை - கொடுக்காமல் இருக்கிறவனை நீங்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தலாம்.

## யாருக்கோ வந்த விருந்தென இருக்க வேண்டாம்

இதை நான் உங்களுக்கு மாத்திரம்சொல்லவில்லை. இங்கே இருக்கிற அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கிறேன். இங்கே அறநிலையத்துறையினுடைய உயர் அதிகாரிகள் அனைவரும் வரவேண்டும் என்று நான்கேட்டுக் கொண்டபடி அனைவரும் இங்கே வந்திருக்கின்றார்கள். அவர்களை நான் இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்வேன். அதிகாரிகள் என்றால் மாதமானால் சம்பளத்தை அரசாங்கம் தந்து விடுகிறது. அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லாமல் இருக்கிறது. சம்பளம் கிடைக்காமல் இருக்கிறவன் ஆலயத்தையே நம்பிக்கொண்டிருக்கிற ஓதுவாராக இருக்கலாம். அர்ச்சகராக இருக்கலாம். நாயனம் வாசிப்பவராக இருக்கலாம். தயவுசெய்து அந்த நிலைமாற நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். நான் ஆணையர் அவர்கள் இடத்திலேயும் கேட்டுக் கொள்வேன். இனிமேல் அந்த உயர் அதிகாரிகளுக்கு ஒரு Tar et இலக்கை நிர்ணயிக்க வேண்டும். துணை ஆணையர் ஆனாலும் சரி. உதவி ஆணையர் ஆனாலும் சரி, அல்லது நிர்வாக அதிகாரிகள் ஆனாலும் சரி. அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற ஆலயங்களிலே பாக்கிகளை இவ்வளவு வசூலித்தாக வேண்டும் என ஒரு குறியீட்டை நிர்ணயிக்க வேண்டும். இன்றைக்கு வணிகவரித்துறையில் அப்படி இருக்கிறது. வருவாய்த்துறையிலும் அப்படி இருக்கிறது. அதைப்போல நம்முடைய ஆலய நிர்வாக அதிகாரிகள், அவர்களுக்கு மேலே இருக்கிற அதிகாரிகள் அவர்கள் பொறுப்பிலே இருக்கிற ஆலயங்களில் குத்தகை பாக்கியில் இத்தனை சதவீதம் குத்தகை பாக்கியை வசூலித்தாக வேண்டும் என்கிற விதிமுறைகளை இனிமேல் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும் என்று நம்முடைய ஆணையர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இல்லையானால் யாருக்கோ வந்த விருந்து என்று அவரவர்கள் போய்க் கொண்டிருந்தால் யார்மீது பழியைப் போட்டு விட்டு, கடைசியில் நம்முடைய பத்திரிகையாளர்கள் வந்து அங்கே புகைப்படத்தையும் எடுத்துப் போட்டு, உலகம் புகழ்கிற பத்திரிகையாக விளங்குகின்ற பெரிய பத்திரிகையிலே இருந்து ஊருக்குள்ளே பரபரப்பை மூட்டிக் கொண்டிருக்கின்ற சாதாரண பத்திரிகை வரை ''தஞ்சைப் பெரிய கோயிலை மூடிவிட்டார்கள். அர்ச்சனை நடக்கவில்லை. தஞ்சைப் பெரிய கோயில் தொடர்பான ஒரு ஆலயத்திலே ஒரு அர்ச்சகர் தூக்குப் போட்டுக்கொண்டு செத்து விட்டார். இதை அரசாங்கம் கவனிக்கவில்லை'' என்று சொல்லுவதற்குக் காரணமாக யாரும் அமைந்து விடக்கூடாது என்பதாக நான் அன்போடு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய கடமையிலே கண்ணும் கருத்துமாக இருங்கள்.

## குட்டையிலே மீன்பிடிக்க வரவேண்டாம்

இன்றைக்கு இந்த ஏழுகோடி திட்டம் ஆண்டொன்றுக்கு 70 இலட்சம் அல்லது 75 இலட்சம் வட்டியாக தரலாம். ''இந்த 75 இலட்சத்தில் மாத்திரம் நாம் தீர்த்து விடப் போகிறோமா? எத்தனைகோடி இருந்தாலும் போதாதே!'' என்று நம்முடைய வணக்கத்திற்குரிய சான்றோர்கள் இங்கே தெரிவித்தார்கள். அதற்கு நீங்கள் வழிகாட்டுங்கள். எல்லோரும் ஒத்துழையுங்கள். இந்த நாட்டு மக்கள் திருந்த வேண்டும் என்று சொல்லுங்கள். அவர்கள் முறையாகக் குத்தகையைத் தந்துவிட்டால், இந்த 7 கோடியை மாத்திரம் ஏன் நாம் நம்பியிருக்க வேண்டும்? ஆகவே தான் நான் உங்கள் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இன்றைக்கு எழுச்சியோடு உணர்ச்சியோடு இன்னும் சொல்லப் போனால் மக்கள் மன்றத்திலே வந்து நின்று நாமெல்லாம் தைரியமாக இந்தக் கருத்தைப் பேசுவதற்கு இன்றைக்கு நமக்கு ஒரு துணிவு வந்திருக்கிறது என்றே நான் சொல்லுகிறேன். இதற்கு முன்னாலே இந்தத் துணிவு யாருக்காவது இருந்ததா?இன்றைக்கு அந்தத் துணிவை ஏற்படுத்திய காரணத்தினால்தானே இந்த அரசையே பார்த்து நீ வெளியே போ என்று கேட்கின்ற அந்தத் துணிவும் வந்திருக்கிறது. நான் அப்படிக் கேட்கிறவர்கள் யார் என்பதை அடையாளம் காட்ட விரும்பவில்லை. அவர்கள் கலங்கிய குட்டையிலே மீன் பிடிக்க வரவேண்டாம். இங்கே குழப்ப வேண்டாம் என்பதை மாத்திரம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆன்மீக நெறி என்பதும், ஆன்மீக வளர்ச்சி என்பதும் அறநிலையப் பாதுகாப்பு என்பதும் தெளிந்த நீரோடையாக இருக்க வேண்டிய ஒன்று. இதற்குள்ளே குட்டையைக் குழப்பிக் கலவரத்தை உண்டாக்கலாம் என்று யாரும் எண்ண வேண்டாம். அதை அரசாங்கம் அனுமதிக்காது என்பதையும் நான் தெளிவாகவே திட்டவட்டமாகத் தெரிவிக்கவிரும்புகிறேன்.

## இரட்டை வேடம் போட வேண்டாம்

நீங்கள் எங்களுக்கு எந்தக் கட்டளை வேண்டுமானாலும் இடுங்கள். என்னை எங்கள் கட்சிக்காரர்கள் அல்லது பங்காளிகள் எப்படி வேண்டுமானாலும் தூற்றட்டும். அவற்றைச் சந்திப்பதற்கு வேண்டிய திராணி எங்களுக்கு இருக்கிறது. அதற்கான ஆற்றல் எங்களுக்கு இருக்கிறது. அதற்கான தெளிவும் எங்களுக்கு இருக்கிறது. இதிலே சந்தேகம் எங்களுக்குக் கிடையாது. ஆலயங்கள் வேண்டுமா?வேண்டும். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பது தான் அறிஞர் அண்ணா அவர்கள் திருமூலர் திருமந்திரத்திலே இருந்து எங்களுக்குத் தந்திருக்கிற தத்துவம். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று சொல்லி விட்ட பிறகு ஆலயம் வேண்டாம் என்று சொல்ல எவன் முன் வருவான்? தேர்தல் நேரத்திலே கேட்டுப் பாருங்களேன் வருகின்றவனை; ''நீ என்ன ஆலயம் வேண்டும் என்கிறவனா? வேண்டாம் என்கிறவனா?'' ஒரு கேள்வியைக் கேளுங்கள். வருகிற வேட்பாளர்கள் எல்லாம் என்ன வாக்குறுதி தருகிறார்கள்? போகிற இடத்தில் எல்லாம் ''இங்கே ஆலயத்தைக் கட்டித்தா'' ''கட்டித் தருகிறேன்'' ஆமாம் சாமி போடுகிறீர்கள்! சாமியே சரணம் ஐயப்பா என்கிறீர்கள்! ஆகவே வாக்குகளைப் பெறுகிற நேரத்திலே அவர்கள் கேட்கிற ஆலயங்கள் எல்லாம் வேண்டும். வாக்குகளைப் பெற்று ஆட்சியை அமைத்து விட்டால் ஆலயத்திற்குச் செல்லுகிறவன் முட்டாளா? ஆலயத்திற்குச் சென்று வணங்குகிறவன் எல்லாம் அறிவற்றனா? என்ன தத்துவம்? இந்த இரட்டை வாழ்க்கை; இந்த இரட்டை நடைமுறை இந்த நாட்டிலேசெல்லுபடியாகாது என்பதைத்தான் பேரறிஞர் அண்ணா கற்றுத்தந்தார். அதைத்தான் புரட்சி தலைவர் தம்முடைய ஆட்சிக் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். இதிலே ஒளிவில்லை மறைவில்லை.

## எந்த ஆலயங்களைப் பாதுகாப்பது?

ஆலயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் எந்த ஆலயங்களைப் பாதுகாப்பது? தலைமை ஏற்றிருக்கின்ற நம்முடைய அரசுச் செயலாளர் சொன்னார். தொன்மையான ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டும். புதிய ஆலயங்களை நாம் ஊக்குவிக்கக்கூடாது என்று சொன்னார்கள். காலையிலே கூட நம்முடைய மேதகு இந்தியக் குடியரசினுடைய துணைத் தலைவர் திரு ஆர். வீ. அவர்கள் பட்டுக் கோட்டை நாடியம்மன் ஆலயத்தினுடைய திருப்பணியைத் தொடங்கி வைக்கிற நேரத்திலே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இதே கருத்தைச் சொன்னார். நீங்கள் இந்தக் கருத்தைச் சொல்லுகிற பொழுது இந்தக் கருத்து பொதுவாக வரவேற்கக் கூடிய ஒன்று. ஆனால் புதிய ஆலயங்கள் வரக்கூடாது என்று நாம் தடுக்க முடியாது. காரணம் நம்முடைய சான்றோர்கள் சொல்லியதைப்போல,எத்தனை இலட்சம் மக்கள் இருந்தபோது இந்த ஆலயங்கள் எழுப்பப்பட்டன. இன்றைக்குஎத்தனை கோடி மக்களாக வளர்ந்திருக்கிறார்கள். ஆகவே புதிய ஆலயம் தேவைப்படுமா?தேவைப்படாதா? அதனாலேதான் நாம் ஆதிதிராவிட மக்கள் வாழ்கிற பகுதிகளுக்குப் போகிற பொழுது, ஆலயங்கள் வேண்டும் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தனைப் பகுதிகள் அன்றைக்கு இருந்ததா? இத்தனை நகரங்கள் அன்றைக்கு இருந்ததா? இத்தனைத் தெருக்கள் அன்றைக்கு இருந்ததா? இத்தனை கோடி மக்கள் அன்றைக்கு இருந்தார்களா? ஆகவே வளர்ந்து கொண்டிருக்கிற மக்கள் தொகைக்கு ஏற்பவாவது ஆலயங்கள் வேண்டும். ஆனால் திட்டமிட்டு அவை உருவாக்கப்பட வேண்டும். புதிய காலனிகள் தோன்றுகின்றன. அந்தப் பகுதியிலே ஆலயங்கள் வேண்டும். அதைப்போல புதிய நகரங்கள் உருவாகின்றன. அங்கே ஆலயங்கள் வேண்டும். ஆனால் ''தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வேன்'' என்றுமகாகவி பாரதி பாடினானே! அதைப் போல தெருவெல்லாம்—பிளாட்பாரம் எல்லாம் ஆல

யத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறார்களே அதையும் தடுத்தாகவேண்டும். அதைப் பல பேர் வியாபார நோக்கத்தோடும், மக்களை ஏமாற்றுகிற உணர்வோடும் இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அறநிலையத் துறை முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. தேவையானால் ஒரு சட்டமே நிறைவேற்றுவதற்கும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே புதிய ஆலயங்கள் தோன்ற வேண்டிய இடத்திலே தோன்றியாக வேண்டும். ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்று அன்றைக்குச் சொன்னார்கள். ஆகவே கோயில் இல்லாத ஊர் இன்றைக்குத் தோன்றுகிறபோது அங்கே கோயில் வந்துதானே ஆக வேண்டும்.

## கிராமங்கள்தோறும் கோயில்கள் கட்டுவோம்

கோயில் இல்லாத குடியிருப்புப்பகுதிகள் அதிலும் ஆதி திராவிடக் குடியிருப்புப்பகுதிகள் அதிகமாகத் தோன்றியிருக்கிற இந்தக் காலத்திலே அவர்கள் அங்கே ஆலயம் வேண்டும் என்றுதானே கேட்கிறார்கள். அவர்கள் வாழுகின்ற பகுதி ஒரு தனிப்பகுதியாக இருக்கிற காரணத்தினாலே அவர்கள் அந்தப்பகுதியிலே ஒரு ஆலயம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதுதான் இந்தக் கிராமக்கோயில்களுக்கு நாம் உதவி செய்கிற அந்தத் திட்டம். 10,000 ரூபாய் வழங்குகிற அந்தத் திட்டத்தை நாம் உருவாக்கி இருக்கிறோம். அதற்கு ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதியை நாம் வைத்து இருக்கிறோம். அந்த ஒரு கோடி ரூபாய் மாத்திரம் போதாது. காரணம் எந்த கிராமத்திற்குள்ளே நுழைந்தாலும் கிராமத்திலே இருக்கிற கிராம தேவதைக்கு ஆலயத்தை எழுப்புகிறார்கள். பணம் இல்லாமல் பாதியிலே நின்றுவிடுகிறது. ஆதிதிராவிட மக்கள் வாழுகிற பகுதிகளுக்குள்ளே போனால் இங்கே எங்களுக்கு ஆலயத்தைக் கட்டித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே அப்படி கேட்கிற மக்களுக்கு 10,000 ரூபாயாவது நாம் கொடுத்தால்தான் அவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலேயும் பணத்தைத் திரட்டி அந்த ஆலயத்தை அங்கே உருவாக்குவார்கள். ஆகவே இந்த ஒரு கோடி ரூபாய் என்பது குறைந்த பட்சம் ஒரு 5 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேலும் எடுக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்த பட்சம் 16,000 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன தமிழகத்திலே. 16,000 ரெவின்யூ கிராமங்களிலே குறைந்தபட்சம் ஒரு 15,000ரெவின்யூ கிராமங்களிலேயாவது ஆலயங்கள் இருந்தாக வேண்டும். இப்போது இருக்கிற ஆலயங்கள் போக தேவைப்படுகிற ஆலயங்களை புதிதாக எழுப்ப வேண்டும் என்று கிராம மக்கள்விரும்புகிறார்கள். ஆகவே 10 கோடி அல்லது 15 கோடி கூட அதற்காகத் தேவைப்படலாம். அவ்வளவு திரட்ட முடியாவிட்டாலும்குறைந்த பட்சம் 5 கோடி ரூபாயாவது ஒரு மூன்றாண்டுக் கால திட்டமாக வைத்து அவர்களுக்கு நிதி வழங்குகிற அந்த முயற்சியை அறநிலையத் துறை மேற்கொள்ளும்; அதற்கான திட்டங்களை வகுக்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## கலைகளை வளர்ப்பதற்காகவே ஆலயங்கள் இருக்கின்றன

நம்முடைய தமிழ்ப்பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். இன்றைக்கு ஆலயங்களினுடைய மதிப்பு எவ்வளவு? அதனால் ஏற்படக்கூடிய சங்கடங்கள் - வறுமைச் சூழல்கள் எவ்வளவு என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். காலையிலே மணி ஒலிக்கவும் நம்முடைய தேவாரத் திருமுறைகள் மக்களுக்குக் கேட்கவும், கேரளாவிலே அவர்கள் ஒலிப்பதிவு செய்து ஒலிக்கச் செய்வதைப் போல நம்முடைய தமிழகத்திலே உள்ள திருக்கோயில்களிலும் செய்யலாம் என்ற யோசனையை அவர்கள் தெரிவித்தார்கள். அவ்வாறு செய்தால் ஆலயங்களையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான ஓதுவார்கள் ஒழிந்து போய் விடுவார்கள். அதைப்போலவே இன்னொரு யோசனையையும் துணைவேந்தர் அவர்கள் தெரிவித்தார்கள். செயற்கைப் பூக்களை தெய்வங்களுக்குச் சூட்டலாம் என்று அவர்கள் தெரிவித்தார்கள். இந்த நாட்டிலே நம்முடைய தமிழ்நாட்டுக்கென்றே சிறப்புப் பெற்ற பூத்தைக்கிற கலை இருக்கிறதே— அந்தக் கலையை கண்டு வெளிநாட்டிலே இருந்து வருகிறவர்கள் எல்லாம் ஆச்சரியப் படுகிறார்கள். பல்வேறு வண்ண அலங்காரம் பூக்களிலே செய்கிற அந்த அற்புதமான கலை இருக்கிறதே! அந்த தெய்வீகக்கலை அழிந்து போய்விடும்! அழிப்பதற்காகவா ஆலயங்கள் இருக்கின்றன. கலைகளை வளர்ப்பதற்காக ஆலயங்கள் இருக்கின்றன. நம்மாலே முடியவில்லை என்கிற கையாலாகாத்தனம் வேண்டுமானால், நம்மிடம் இருக்கலாம். நம்மாலே முடியவில்லை என்று ஏற்றுக் கொள்ளலாமே தவிர அந்த முறைகளையே ஒழித்துவிடுவது என்று சொன்னால் அதற்குப் பிறகு ஆலயங்கள் எப்படி வணங்குகின்ற இடங்களாக இருக்கும்? அதற்குப் பதிலாக ஆலயங்களை எல்லாம் தொல்பொருள் இடங்களாக மாற்றி, அதற்கென்று இருக்கிற துறையினிடத்திலே ஒப்படைத்து விடலாம். இந்த ஆலயத்தை அப்படி ஒப்படைத்த அந்தத் துர்பாக்கியத்தையும் நாம் அனுபவித்துக்கொண்டுதானே இருக்கிறோம்.

## உயிருள்ள இடங்களாகக் காத்தாக வேண்டும்

இன்றைக்குக்கூட இந்த நிகழ்ச்சியைஇந்த ஆலயத்திலே நடத்தக் கூடாது என்று மத்திய அரசினுடைய தொல்பொருள் ஆய்வுத்துறையினுடைய ஒரு அலுவலர், அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு எதிராகக் காவல் துறைக்குப் போய் புகார் கொடுக்கிற அளவிற்கு தைரியம்

வந்திருக்கிறது. அறநிலையத்துறையின் சார்பில் இரண்டரை இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து விளக்குகள் போட்டோம். அந்த விளக்குகளைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அந்தத் தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலருக்கு முடியவில்லை. அவர்கள் பொறுப்பிலே தான் இந்த வளாகமே இருக்கிறது. இந்தப் பெரிய கோயிலே இருக்கிறது. அதைப் பாதுகாப்பதற்கு அவர்களால் முடியவில்லை. ஆனால் இந்த ஆலயத்திலே வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்ச்சியை தமிழக அரசின் சார்பில் அறநிலையத்துறை இங்கே நடத்த இருக்கிறது. அந்த அதிகாரிக்கு நம்முடைய துணை ஆணையர் போய், அவர்களிடத்திலே தெரிவிக்கிறார்கள். நாங்கள் இந்த நிகழ்ச்சியை நடத்தப் போகிறோம் என்று. அறநிலையத்துறையின் அமைச்சர் வருகிறார். சான்றோர்கள் எல்லாம் வருகிறார்கள் என்று தெரிவித்தும்கூட இங்கே இந்தக் கூட்டம் நடத்தக்கூடாது என்பதற்காகப் போலீசிலே போய் புகார் கொடுக்கிற அளவுக்கு இங்கே தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால், இவர்களை நம்பி இந்த ஆலயங்களை எல்லாம் ஒப்படைத்தால் என்ன கதி ஆகும் என்று பார்த்துக் கொள்ளுங்கள். ஆலயங்கள் வழிபாட்டிற்குரிய இடங்களாக விளங்கவேண்டுமானால் அவை ஜீவனுள்ள இடங்களாக இருந்தாக வேண்டும். உயிருள்ள இடங்களாக இருந்தாக வேண்டும்.

## இறைவனைப் பற்றிய ஆராய்ச்சி

இறைவன் கல்லாகத்தானே இருக்கிறான் என்று சிலர் எண்ணலாம்; சொல்லலாம். கல்லாகத் தங்கள் உள்ளத்தை ஆக்கிக் கொண்டவர்கள் வேண்டுமானால் அப்படி எண்ணலாம்; பேசலாம். ஆனால் ஆண்டவன் உயிரற்ற பொருள் அல்ல. தன்னை உயிரற்ற பொருளாக அறிவற்ற பொருளாக ஆக்கிக்கொண்டிருப்பவன் தான் இறைவனை உயிரற்ற பொருளாகக் கூறுவான். ''சுவாமி உலகத்தை காப்பாற்றுகிறாரே! ஏன் அவரைப்போய் நீ காப்பாற்றுகிறாய், அந்த சாமியை நேரிலே பார்த்திருக்கிறாயா?'' என்று கூட கேட்கிறார்கள். இதற்கு யாரும் சுலபமாக பதில் சொல்லி விட முடியும். கேட்கிறார்கள் எப்படிப் பிறந்தாய் என்று? என்னைப் பெற்றவர்கள் ஒரு தாயும் தந்தையும் என்று சொல்லுகிறேன். எங்கே அவர்களைக் காட்டு என்கிறார்கள். இல்லைஅவர்கள் இறந்து விட்டார்கள் என்கிறேன். அவர்களுடைய படம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்கள் படம் எடுக்கவில்லை. யாரும் இப்படிக் கேட்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. ஆகவே படம் எடுத்து வைத்துக் கொள்ளவில்லை என்று சொல்லுகிறேன். ஆகவே உனக்குத் தடயம் காட்ட படமும் இல்லை. சுட்டிக்காட்ட ஆட்களும் இல்லை. ஆகவே உனக்குத் தாயும் கிடையாது. தந்தையும் கிடையாது என்று சொன்னால் எவ்வளவு புத்திசாலித்தனம் இருக்குமோ அவ்வளவு புத்திசாலித்தனம் நிறைந்ததுதான் இறைவனைப் பற்றிய ஆராய்ச்சி. ''கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று கூட நீ கேட்காதே! கடவுள் வேண்டுமா வேண்டாமா என்று கேள்'' என்று சொன்னான் ஓர் அறிஞன். இன்றைக்கு இந்தச் சமுதாயத்திற்கு அறநெறி, இறைநெறி, இறை உணர்வு வேண்டுமா வேண்டாமா என்பது தான். கடவுள் இருக்கிறாரா? இல்லையா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு நமக்கு அறிவும் போதாது, ஆயுளும் போதாது. ஆகவே அந்த முயற்சியிலே ஈடுபடுவது என்னுடைய சொந்தக் கடமையாக இருக்கலாம். நான் வேண்டுமானால் சொல்லலாம். நான் என்னுடைய தாயை, தந்தையைப் பார்க்கவில்லை. ஆகவே என்னை எந்தத் தாயும் பெறவில்லை. நான் அந்தரத்திலே இருந்து குதித்துவிட்டேன் என்று சொல்லுகிற அறிஞனாக நான் வேண்டுமானால் விளங்கலாம். ஆனால் அது ஒரு சமுதாயத் தத்துவமாக மாறாது. சமுதாயத்திற்குச் சில நெறிமுறைகள் வேண்டும். அதற்காக வகுக்கப்பட்டதுதான் ஆன்மீக நெறி - இந்த ஆன்மீகத்தத்துவம். அது இறைவன் பெயராலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்குச் சான்றுகளாக ஆலயங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

## பண்பு குறைந்தமைக்கு என்ன காரணம்?

இந்த ஆலயங்களைக் காப்பாற்ற தவறியதனால்தான் தாயும் தெரியவில்லை. தாரமும் தெரியவில்லை. சகோதரியும் தெரியவில்லை. மனிதன் முன்னாலே பார்ப்பது எல்லாமேபெண் தான். ஆனால் இந்த மனிதனுக்கு அறிவு, சிந்தனை இருக்கிற காரணத்தினாலே தான் தாய் வேறாகவும், தாரம் வேறாகவும், சகோதரி வேறாகவும் தெரிகிறாள். இப்படி வேறுபடுத்திப் பார்க்கிற அந்தப் பண்பினைத் தருவதுதான் ஆன்மீகம். நேற்று முன் தினம் ரயிலிலே நடந்ததாக ஒரு செய்தியைப் படித்திருப்பீர்களே! ஒரு படித்தவன் - ஆசிரியர் வேலை பார்க்கிறவன். இன்னொருவன்மனைவி உறங்கிக் கொண்டிருக்கிறபோது தாயாகக் கருதவேண்டியவளை, சகோதரியாக கருத வேண்டியவளைப்போய் கற்பழிக்க முயன்றிருக்கிறான். அவன் என்ன அறிவற்றவன்என்றா கருதுகிறீர்கள்? அவன் ஆசிரியன் அல்லவா? பகுத்தறிவு கிடையாதா? இன்னொருவன் மனைவியைத் தன்னுடைய உடன்பிறப்பாக கருத வேண்டும் என்பது கூடவா தெரியாமல் போய்விட்டது? அங்கே அவனிடத்தில் பண்பு இல்லை. மனிதன் ஆன்மீக உணர்வை அறநெறியை இழந்துவிட்டான். அதனால் தாயும் தெரியவில்லை. தாரமும் தெரியவில்லை. அந்தத் தாய் எது? தாரம் எது? என்று காட்டுகிற பண்புதான் ஆன்மீக நெறி - இறைதத்துவம். அதைத் தெரிந்து கொள்ளாத காரணத்தினாலேதான்-அதை இழந்துவிட்ட காரணத்தினாலேதான் நாம் மிருகங்களைவிட கேவலமாக மாறிக்கொண்டிருக்கிறோம்.

## மழை பொழிவது நல்ல அறிகுறி

ஆகவே அந்தத் தத்துவங்களை வாழ வைப்பதற்கு ஆலயங்கள் இருந்தாகவேண்டும்.

அந்த ஆலயங்களை உயிருள்ள ஆலயங்களாக நாம் போற்றியாக வேண்டும். நம்மாலே முடியவில்லை என்பது ஒரு பிரச்சினை. அதை எப்படி முடிவதாக மாற்ற வேண்டும் என்பது நம் கடமை. அந்தக் கடமையைத் தொடங்குகிற நிகழ்ச்சிதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி. ஆகவே தான் இன்றைக்கு இந்தத் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இங்கே நம்முடைய அர்ச்சகர்களுக்கும், மற்ற ஆலய அலுவலர்களுக்கும் வழங்குகின்ற நிதியை உங்கள் சார்பிலே நான் வழங்கி...மழை பெய்துகொண்டிருக்கிறது. இந்த மழைக்காகத்தான் தஞ்சை மாவட்டமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆகவே ஆண்டவன் பெயரைச் சொன்னாலே மழை ஒழுங்காக வரும் என்று தெரிகிறது. நாம் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தம் கேட்டதனாலே மழையைப் பொழிக என்று பெருவுடையாரே இந்த மழையை அனுப்பியிருக்கிறார் என்று தெரிகிறது. எந்தக்காரியம் தொடங்கும்போதும் மழை பெய்தால் அந்தக் காரியம் நன்கு சிறப்படையும் என்று சொல்லுவார்கள். ஆகவே, தஞ்சைமண் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அந்த மழையை இறைவன் வழங்கியிருக்கிறான். அந்த மழையின்கொடையுள்ளம் போன்ற புரட்சித் தலைவருடைய கருணை உள்ளத்தினாலே இங்கே அர்ச்சகர் பெருமக்கள், ஆலயப் பணியாளர்கள், விளக்கேற்றவும் வசதியின்றி உள்ள ஆலயங்கள்-அனைத்தும் பயன்பெறப் போகின்றன. புரட்சி தலைவரின் சார்பிலே இந்தப்பணியை நான் நிறைவேற்றி வைத்து, இந்தத்திட்டம் தொடங்கிய சென்ற ஆகஸ்ட் 15ஆம் தேதி நம்முடைய வாளமர்கோட்டை சாந்தையா சுவாமிகள் ரூபாய் 10,000 வழங்கினார்கள். இன்றைக்கும் அவர்கள் 1000 ரூபாயை இந்தத் திட்டத்திற்காக வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து இந்த 1000 ரூபாயை **ஆணையர்** அவர்களிடத்திலே வழங்குகிறேன் என்று சொல்லி, நிதி வழங்குகிற அந்த நிகழ்ச்சிகள் மழை பெய்தாலும் தொடர்ந்து நடைபெறும். அதை இருந்து மகிழ்ந்துபார்த்து வாழ்த்திவிட்டுச் செல்ல வேண்டும் எனக் கேட்டு, கொஞ்சம்மழை பெய்தாலும்-நனைந்து கொண்டிருந்தாலும் உயிருக்கு ஒன்றும் ஆபத்து வந்துவிடாது. காரணம் உயிரை விட்டவர்களுக்காக நாம் உதவி செய்துகொண்டு இருக்கிறோம். இந்த உதவியைப் பார்த்து வாழ்த்திவிட்டுச் செல்லுங்கள் என்று கேட்டு விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

—o—

## ஏற்றமிகு ஏழுகோடித் திட்டம்

ஆற்றல்மிகு சமயபுரத் தன்னை ஆசி
அன்பினிலே நல்கியுமை அருளால் வாழ்த்த
வீறார்ந்த கிராமங்கள் கோயில் கொள்ள
விளக்கில்லாக் கோயில்களும் பூசை கொள்ள

மாறாமல் இறையவனார் கோயில் தொண்டில்
மனம்பற்றி நிற்கின்ற தொழிலார் ஓங்க
ஏற்றமிகு ஏழுகோடித் திட்டம் அந்நாள்
எழிலுறவே தொடங்கிவைத்த அமைச்சர் வாழ்க!

தொடங்கிவைத்த திட்டமது செயலும்கொள்ள
தொய்வின்றி முயற்சியிலே துணிந்தே வென்று
மடத்தலைவர், மகான்கள் வாழ்த்தும் கூற
மாதஞ்சைப் பெருங்கோயில் மன்றில் நீரே

விடமுண்ட கண்டத்தான் ஈசன் வாழ்த்த
வான்மழையும் நன்றாகப் பெய்தே வாழ்த்த
கொடைக்கையால் கொடுத்தேநீர் மகிழ்ந்தீர் இந்நாள்
கோவேந்தர் வீரப்பர் வாழ்க! வாழ்க!

டாக்டர் த. அமிர்தலிங்கம்

# உருவ வழிபாடும் தமிழ் மொழி வளர்ச்சியும்

சட்டமன்ற மேலவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள்

R. RAJU
Dy Commissioner HR&CE (Retired)
HR&CE Administration Dept

தமிழகத்திலே சிலர் தாங்கள் மதங்களிலே நம்பிக்கையற்றவர்கள் என்று சொல்லிக்கொண்டே, இந்து மதத்தை மட்டும் எதிர்க்கின்றனர். அவர்கள் தங்கள் தாய்மொழியான தமிழை நேசிக்கின்றனர். அதை நான் நம்புகிறேன். அதற்காக அவர்களோடு உறவு கொள்ளவும் விரும்புகிறேன். ஆனால், இந்து மதத்தவர் கடைப்பிடிக்கும் உருவ வழிபாடு இல்லையென்றால், தமிழ்மொழி இன்றுள்ள அளவுக்கு வளர்ந்திருக்க முடியுமா? முடியவே முடியாது. இந்துக்கள் செய்யும் உருவ வழிபாடு காரணமாக, தமிழிலே இலக்கியங்கள் குவிந்தன. தெய்வங்களின் அவதாரங்களை நம்பவில்லையென்றால், கம்பனுடைய ராமாயணம் ஏது? வில்லியினுடைய மாபாரதம் தான் ஏது? மக்கள் கடைப்பிடித்து வரும் உருவ வழிபாடு காரணமாகத்தான் ஊர்தோறும் திருக்கோயில்கள் தோன்றின. ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்'' என்ற பழமொழியும் பிறந்தது.

**கலைகள் வளர்ந்தன:**

பண்டை நாளிலே ஊர்தோறும் திருக்கோயில் அமைத்து அவற்றின் மூலம் தான் ஊர் மக்களுக்கு குடிநீர் கிடைக்கவும், வீதிகளிலே பொது விளக்குகள் எரியவும், திருக்கோயில்களிலே ஊர் பஞ்சாயத்து நடக்கவும் நம்முன்னோர்கள் வழி செய்து வந்தனர்.

திருக்கோயில்களை எழுப்பியதால் அக்காலத்தில் ஊர் மக்களுக்கு வேலை கிடைத்தது. உழவர்களுக்கு ஆண்டில் சில மாதங்களிலே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவது உண்டு. அதைத் தீர்க்கவும் திருக்கோயில் எழுப்பும் பணி பயன்பட்டது. சிற்பக்கலையிலே, சித்திரக்கலையிலே, கட்டிடக் கலையிலே வல்லவர்களுக்கு வேலை கொடுத்து, அந்தக்கலைகளை வாழ வைக்கவும் திருக்கோயில்களே பயன்பட்டன.

**கல்லணை கட்டியது யார்?**

ராசராச சோழன் கட்டிய பிரகதீசுவரர் திருக்கோயிலின் மூலஸ்தானத்தையும் கோபுரத்தையும் கோயிலுக்கு வெளியேயுள்ள நந்தியையும் கோயிலின் உட்பிரகாரத்தையும் கண்டு கண்டு அயல் நாடுகளிலிருந்தும் வரும் அறிஞர்கள் எல்லாம் வியக்கின்றனர். பெருமன்னன் ராசராசன் தஞ்சைக்கோயிலை நிர்மாணித்தில்லையானால், தமிழகத்திலே கட்டிடக் கலைக்கு வாழ்வு ஏது? வாழவைக்கத்தான் சமயமற்ற சமுதாயத்திலே வேறு வழி ஏது? சிலர் கேட்கின்றனர். ''திருக்கோயில்களை எழுப்பிய மன்னர்கள், அணைக்கட்டுகளை எழுப்பியிருக்கக்கூடாதா?'' என்று; அதையுந்தான் செய்தான் சோழ மன்னன் கரிகால் வளவன். அவன் எழுப்பியதுதானே திருச்சி நகருக்கு அருகிலுள்ள கல்லணை என்னும் அணைக்கட்டு. ஆனால், அந்தக் காலத்திலே அணைக்கட்டுகளை விடவும் ஊர்தோறும் ஆலயங்களே அவசியமாகத் தேவைப்பட்டன.

**சுற்றுலாக் கலை:**

இன்று தமிழக அரசிலேயும் சரி, மத்திய அரசிலேயும் சரி; சுற்றுலாத்துறை என்பதாக ஒரு துறையே இருந்து வருகிறது. சுற்றுலா துறையை நிர்வகிக்கும் அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் சுற்றுலாக் கலையை வளர்த்து அரசின் வருவாயைப் பெருக்குவதில் எல்லையற்ற ஆர்வம் காட்டுகிறார். பண்டை நாளிலே சுற்றுலாக்கலையை வளர்க்கவும் தான் திருக்கோயில்களை எழுப்பினர். அந்தக் கோயில்களைப் பற்றிப் பல புராணங்களைப் படைத்தனர். உண்மையாகவும் கற்பனையாகவும் பல அற்புதங்களைச் சொல்லி வைத்தனர். அதனால், மக்கள் தலயாத்திரை செய்தனர். அதைத் தான் இன்று ''சுற்றுலா'' என்கின்றனர்.

பணமானது சில தனிமனிதர்களிடத்திலே தேங்கிக்கிடப்பது நாட்டிற்கு நல்லதல்ல என்று

நம் முன்னோர்கள் நம்பினர். அன்று வங்கிகள் இருக்கவில்லை. இன்று வங்கிகளிலே பணத்தை போட்டு வைத்தால், அது நாட்டைச் சுற்றி வருவதற்கு-தொழிலை வளர்ப்பதற்கு-வாணி பத்தைப் பெருக்குவதற்கு வழி வகைகள் வகுக் கப்பட்டுள்ளன. அதன் பெயர் ''பேங்கிங்'' என்று சொல்லப்படுகிறது. ''பேங்க்'' என்பதன் பொருள் வேறு; ''பேங்கிங்'' என்பதன் பொருள் வேறு. பண்டைப் புலவர்களுக்கு இதெல்லாம் தெரியாது என்று இன்றுள்ள பகுத் தறிவாளர்கள் சொல்லுகின்றனர்.

**ஔவை சொன்னதென்ன?**

நம்முடைய ஔவைப்பெருமாட்டியார் ''பாடுபட்டுத்தேடி பணத்தைப் புதைத்து வைக் கும் கேடுகெட்ட மானிடரே'' என்று கூறி, பணத்தைப் பதுக்குவோரை பழித்தாள். இன்று வருமான வரித்துறையை ஏய்ப்பதற்காக பணத் தைப் பதுக்குகிறார்கள். அது, "கறுப்புப்பணம்'' என்றும் பெயர் பெற்றுவிட்டது. ஔவையா ரும், சுற்றிவரவேண்டிய பணத்தை ஒரு சிலர் பதுக்கிவைத்தால், சமுதாயத்தின் வாழ்வு பாழ்பட்டு விடும் என்று நம்பினார். அப்படிப் பட்டவர்களை ''கேடுகெட்ட மானிடர்காள்'' என்றும் ''பாவிகள்'' என்றும் சொல்லிப் பழித் தார்.

நம்முடைய முன்னோர்கள் பணம் சுற்றி வரவேண்டும் என்பதற்காகவும் தல யாத்திரை செய்வதற்கும், ''தீர்த்த யாத்திரை'' செய் வதற்கும் வழி வகுத்தனர்.

**பண்டிகைகளும் பணப்பரவலும்:**

சிலரிடம் பதுங்கிக்கிடக்கும் பணத்தை வெளிப்படுத்துவதற்காகவே ''தீபாவளி'' போன்ற பண்டிகைகளைப் படைத்தனர். இன் னும் ஆண்டுதோறும் திருக்கோயில்களிலே ''பிரம்மோற்சவம்'' என்னும் பெயரிலே திரு விழாக்களை நடத்தவும் வழி செய்தனர்.

இந்தக்காரியங்களுக்கான காரணங்களைச் சொன்னார்களே, அவை உண்மையல்ல; கங்கை யிலே, காவிரியிலே, குமரியிலே தீர்த்தமாடி னால், பாவம் தொலையும்; புண்ணியம் சேரும் என்று சொன்னார்கள். பாவத்திற்குப்பயந்து புண்ணியத்தின்மேல் ஆசைகொண்டு, பணம் படைத்தவர்கள் தல யாத்திரையும் தீர்த்த யாத்திரையும் செய்தார்கள். காரணம் கற் பனையாயினும், காரியத்திலே சமுதாயத் தின் பொருளாதார வாழ்வு இருந்தது. தமிழ் மொழியையே எடுத்துக்கொள்ளுங்கள் . உயிர்க் குலம் அனைத்திற்கும் தெய்வம் ஒன்று தான். வைணவ ஆழ்வார்களும் தெய்வம் ஒன்றேஎன்று சொல்லி யிருக்கின்றனர். வேறு வேறு பெய ரிட்டு வழிபாடுகளிலும் வேறுபாடுகளைப் புகுத் தினர். அதனாற்றான் கோயில்கள் பெருகின. இந்திய மொழிகளோடு தமிழ்மொழியை ஒப் பிட்டுப்பார்த்தால், இலக்கியக் களஞ்சியம் பெருகியிருப்பது தமிழிலே தான். பக்தி நெறி காரணமாக கல்மனத்தையும் கரைக்கும் திறன் தமிழ்மொழிக்கு உண்டு என்பதனை தேவார திரு வாசக ஆசிரியர்களும்-திவ்வியப்பிரபந்த ஆசிரி யர்களும், காட்டியிருக்கிறார்கள். ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத பரம்பொருளுக்குச் சொல்லியுள்ள திரு நாமங்களிலே முருகன் என் பதும் ஒன்று. ஆறு முகங்களும் பன்னிரு கரங் களும் கொண்டு காட்சியளிக்கிறார் முருகப் பெருமான். அந்தப் பெருமானையொட்டி எவ்வளவோ இலக்கியங்கள் தமிழில் குவிந்து விட்டன. அருணகிரியார் பாடியுள்ள ''திருப் புகழ்'' என்னும் இலக்கியம் இல்லையானால்- மூவர் பாடிய தேவாரப்பாடல்கள் கிடைத் தில்லையானால், வள்ளற்பெருமான் புனைந் தருளிய திருவருட்பா இருந்தில்லையானால் தமிழுக்கு இசைப்பாடல்கள் ஏது?

**முருகன் வளர்த்த தமிழ்:**

தமிழகத்திலே பாட்டையும் கூத்தையும் வளர்த்தது ஊர்தோறும் உள்ள திருக்கோயில் கள் தானே! நாதசுரக்கலையானது தமிழகத் திற்கே சொந்தம். அந்தக்கலையைக் காத்ததும் வளர்த்ததும் திருக்கோயில்கள் தானே! முருக வழிபாட்டை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த் தால், எண்ணற்ற இலக்கியங்களைத் தமிழ் மொழி சுமந்துகொண்டிருப்பதைப் பார்க்கி றோம். ''பிள்ளைத்தமிழ்'' என்னும் பெயரிலே முருகனைப்பற்றி எத்தனையோ பிரபந்தங்கள். சக்தி வழிபாடு என்னும் பெயரிலும் எண்ணற்ற பிள்ளைப் பிரபந்தங்கள். பிள்ளையாரைப்பற் றிய பிரபந்தங்கள் தான் எத்தனை எத்தனை!

**வாழ்த்தினால் போதுமா?**

திருத்தொண்டர் புராணம், திருவிளை யாடற்புராணம், கந்த புராணம், கம்பராமா யணம் ஆகியவற்றைப்பட்டி தொட்டிகளில் எல் லாம் பரப்பி, நம்முடைய பௌராணிக அறி ஞர்கள் தமிழ்ச்சமுதாயத்தினரிடையே பக் தியை மட்டுமா வளர்த்தார்கள்? அன்றாட வாழ்க்கையிலே கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக் கத்தையும் தான் சேர்த்து வளர்த்தார்கள். ''இன்பத்தமிழே நீ வாழ்க'' என்று வாழ்த்தி விட்டு, ''ஆரியம் போல் உலக வழக்கு அழிந் தொழிந்து - சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்து துமே'' என்று தமிழ்த் தாயை வாழ்த்திப்பாடி விட்டு, அவர்களே நாத்திகப்பிரச்சாரம் செய்வ தென்றால் அதுதான் தமிழ் வளர்க்கும் முறையா? நம்முடைய முன்னோர் சமயத்தின் மூலமும் விக்கிரக வழிபாடு மூலமும்தானே தமிழை வளர்த்தார்கள்? இற்றைத்தலைமுறை யினராகிய நாம் புதிதாக ஏதையும் படைக்கா விட்டாலும் நம்முடைய முன்னோர்கள்படைத்

தவற்றைப் பழிக்காமல் இருப்போமானால், அதுவே நாம் தமிழுக்குச்செய்யும் சிறந்த தொண்டாக இருக்கும்.

**சித்தாந்த சாத்திரங்கள்:**

சிவஞான போதம் உள்ளிட்ட 14 சைவசமய சாத்திரங்கள் 'மெய்கண்டசாத்திரங்கள்' என்று பெயர்பெற்றுள்ளன. பன்னிரண்டு செய்யுட்களை நாற்பது வரிகளில் மட்டுமே படைத்தருளிய சிவஞான போதம் தெய்வத்தைப் பற்றிய இலக்கணம் ஆகும். அதனையொட்டித் தான் 13 சாத்திரங்கள் தோன்றி . அவை ''சித்தாந்த சாத்திரங்கள்'' எனப்படுகின்றன. இந்நாளிலே தமிழ் இலக்கியத்திற்காக எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் கூட சித்தாந்த சாத்திரங்களை படிப்பதில்லை. பல்கலைக் கழகங்களிலே அவை பாடமாக்கப்படவில்லை. சித்தாந்த சாத்திரங்களைப் படிப்பதால் என்ன பயன்? அதை ஏன்படிக்க வேண்டும்?என்று கேட்கும் ''புத்திசாலிகளும்'' இருக்கிறார்கள். இங்கிலாந்தில் தோன்றி அரசு புரிந்த முதலாம் சார்லசையும் இரண்டாம் சார்லசையும் பற்றிப் படிக்கிறார்களே, அதனால் என்ன பயனோ?

**சார்லஸ்கள் சாதித்ததென்ன?**

சரித்திரம் என்ற பெயரிலே பல்கலைக் கழகப்பாடங்களாக வைக்கப்பட்டுள்ள நூல்களை நானும் படித்திருக்கிறேன். சரித்திரத்தில் வரும் இந்திய மன்னர்களையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுடைய வரலாற்றிலேயே ஏதேனும் ஒரு தெளிவு கிடைக்கிறதா? இங்கொருவனையும் அங்கொருவனையும் செங்கோலன் என்னும் பெயரால் சரித்திரம் நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அவர்களுடைய செங்கோன்மையைப்பற்றிக் கருத்து வேற்றுமையும் உண்டு.

தென்புல மன்னர்களுக்கும் வடபுல மன்னர்களுக்கும் பகைமை இருந்ததாம்! தமிழ் மூவேந்தர்கள் எந்த நேரத்தில் படையெடுத்து வந்து விடுவார்களோ என்ற அச்சத்தால் துஞ்சாக்கண்ணினராக அதாவது, உறக்கமின்றி விழித்துக் கொண்டிருந்தார்களாம் வடவேந்தர்கள். இந்தத்தமிழ் வேந்தர்களேனும் தங்களுக்குள் பகை இல்லாமல் இருந்ததுண்டா? சேரனைச் சோழன் வீழ்த்தினான்; சோழனைப் பாண்டியன் வீழ்த்தினான்-இப்படி ஒருவரையொருவர் வீழ்த்தி வெற்றி பெற வடபுலத்து வேந்தர்களின் ஒத்துழைப்பையும் பெற்றதுண்டு. இதிலே என்ன பெருமை இருக்கிறதோ?

ஒரு ராசராசனோ, ஒரு கரிகால்வளவனோ ஒரு பாண்டியன் நெடுஞ்செழியனோ நம்முடைய பாராட்டுக்குரியவர்களாக இருக்கலாம். மற்றவர்கள் நிலை என்ன?

**குழப்பம்! குழப்பம்!**

வடபுல வேந்தர்கள் நிலையும் இதுதானே! இஸ்லாமிய மன்னர்களுக்கும் இந்து மன்னர்களுக்கும் அடிக்கடி போர் நடந்திருக்கிறது. அதோடு நின்றதா? ஒருவரையொருவர் கொன்றதும் உண்டு. வென்றதும் உண்டு. முஸ்லீம் மன்னர்களின் வரலாறும் இந்தக் கொடுமைக்கு விலக்கு அல்லவே! அவர்களுக்குள்ளேயும் போர்! போர்! போர்! வெற்றியும் வீழ்ச்சியும் மாறி மாறி வந்திருக்கின்றன. ஒரு முஸ்லீம் மன்னன் தன் தந்தையையே சிறை வைத்தான்.

சரித்திர வகுப்புகளிலே இந்திய மன்னர்களைப்பற்றிய வரலாற்றைச் சொல்லும் பேராசிரியர்களுக்கு அந்தப்பாடங்களையே திருப்பித் திருப்பிச் சொல்லி வந்தும் அவர்களுக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறதே, அது தான் வியப்பு! குழப்பம் நிறைந்த இந்திய மன்னர்களின் வரலாற்றைப் படித்து நம்முடைய மாணவர்கள் எப்படியோபி.ஏ., எம்.ஏ பட்டங்களைப்பெற்று விடுகிறார்களே! இவையெல்லாம் படிப்பதில் தவறில்லையானால், தமிழ்மொழியின் வளத்தைப்புரிந்து கொள்வதற்கேனும் சைவ-சித்தாந்த சாத்திரங்களைப் படிப்பதிலே தவறு என்னவோ! உயர் ஆரியத்திற்கு நிகர் எனத் தமிழ்மொழி பண்டை நாளில் வாழ்ந்ததாகப் பாரதி கூறுகிறாரே, சைவ சித்தாந்த சாத்திரங்களையும் நினைவில் வைத்துத்தான்.

சமயத்திலே நம்பிக்கையற்றவர்கள்-விக்கிரக வழிபாட்டை வெறுத்தும் பழித்தும் பேசுபவர்கள், தமிழ்மொழியை வளர்ப்பதற்கோ, வாழ்விப்பதற்கோ பயன்படமாட்டார்கள். அவர்களுடைய தமிழ்ப்பற்று வேர் விடாதசெடி போன்றது!

# கோயில் திருத்தம்

அமரர் மகாகவி பாரதியார்

காலத்திற்குத் தக்கபடி எல்லா விஷயங்களும் மாறுவதுபோல ஜனக்கட்டுப்பாடுகளும் மாறிக்கொண்டு போக வேண்டும். ''நாங்கள் மாறாத ஆசாரங்களுடன் இருக்கிறோம்'' என்று நினைப்பவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிவேகமாக மாறிக்கொண்டு போகிறார்கள். ஆனால் இதைத்தாங்கள் உணர்வதில்லை. அறிவுடன் தனது காரியங்களைத் தனக்கு அனுகூலமான வழியில் மாற்றிக்கொண்டு போகும் வியாபாரி, நாளுக்கு நாள் அதிக லாபம் அடைகிறான். தனது பூர்வ ஐசுவரியத்தை யாதொரு மாறுதலுமில்லாமல் அப்படியே வைத்துக் கொண்டிருப்பதாக நினைத்துக்கொண்டு வெறுமேயிருக்கும் சோம்பேறி, நாளுக்கு நாள் ஏழையாகிறான். ஓடுகிற நதி உலகத்துக்கெல்லாம் நன்மை செய்கிறது. புது நீர் வரவும், பழநீர் கழிவுமில்லாமல் தங்கிக் கிடக்கும் குளம், அழுகியழுகிப் புழுக்கள் பிடிக்கிறது. மாறுதலில்லாமல் இந்த உலகத்தில் இருக்கமுடியாது.

மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி. மாறுதல் என்றால் எல்லாவற்றையும் ஒரேயடியாக மாற்றிவிடுவது என்று அர்த்தமில்லை. நல்ல அர்த்தமுள்ள அம்சங்களை வைத்துக்கொண்டு பயனில்லாத கெட்ட அம்சங்களை மாற்ற வேண்டும். நமது பூர்வீகர்களுடைய வழிகளில் இந்தக் காலத்திலே நமக்கு உதவக்கூடிய அம்சங்கள் மாத்திரம் வைத்துக்கொண்டு பயனில்லாதவைகளை மாற்றுவதானால், நமக்கு முன்னோர்களிடம் பக்திக்குறைவு ஏற்பட்டதாக அர்த்தமில்லை. ஒருவன் தனது பூர்வீக ஆஸ்தியிலே நல்ல கழனிகளையும் தோட்டங்களையும் வைத்துக்கொண்டு முள்ளும் புதருமாக இருக்கும் காட்டுவெளியை நன்றாக வெட்டித் திருத்தினால் அவன் பிதுர்த்துரோகியாவானா? இது நிற்க.

உழவுத்தொழில் வைசிய குலத்துக்கு உரியதென்று மனுஸ்மிருதி சொல்லுகிறது. அப்படியிருக்க இப்போது நமது தேசத்தில் அந்த உழவுத்தொழில் செய்யும் குலத்தார்களிலே பலரைப் பஞ்சமர்களென்று இகழ்ச்சியாக ஒதுக்கி வைத்து அவர்கள் கோமாமிசம் தின்னும்படி விட்டிருக்கிறோம். நாம் அவர்களைத் தக்க ஸ்தானத்தில் வைத்திருந்தால், அவர்கள் எல்லாவித அனாசாரங்களையும் விட்டுவிடுவார்கள்.

இது வேண்டுமென்றாலும் போகட்டும். இன்னுமொரு பெரிய அநீதி நாம் செய்து வருகிறோம். இந்தப் பஞ்சமர்கள் நம்மைப்போல் ஹிந்துக்கள். கிறிஸ்தவர்கள் அல்ல! மகமதியர்கள் அல்ல; இவர்களை நாம் கோயில்களுக்குள் பிரவேசிக்க இடம் கொடாமலிருப்பது என்ன நியாயம்? தேவ சந்நிதியிலேகூட ஜாதி பேதமா? அப்படியானால், பெருமாள் கோயிலில் பிராமணர்கள் சூத்திரர் பார்க்க நைவேத்தியம் வாங்கித் தின்கிறார்களே அதற்கென்ன அர்த்தம்? ஜகந்நாதத்தில் நாவிதர் கொடுக்கும் நைவேத்தியத்தை நமது பக்கத்துப் பன்னிரண்டு திருமண் ஆசாரிய ஸ்வாமிகளெல்லாம் வாங்கித் தின்றுவிட்டு வருகிறார்களே! அதற்கென்ன அர்த்தம்? காசியில் விசுவநாத லிங்கத்தை எல்லா ஜாதியரும் போய்த்தொட்டு பூஜை செய்கிறார்கள். தேவசந்நிதியிலே செல்வன், ஏழை, படித்தவன், மூடன் என்ற பேதங்களையெல்லாம் நாம் கவனிப்பதில்லையே. அப்படியிருக்க, குல வேற்றுமைகளை மாத்திரம் ஏன் பார்க்க வேண்டும்?

நமது தேசத்தில் ஆயிரக்கணக்கான ஜாதி பேதங்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று விவாகம், பந்தி போஜனம் எதுவுமே செய்து கொள்வதில்லை. பெரும்பான்மையான ஜாதியார் ஒருவருக்கொருவர் தீண்டுவதில்லை. பிராமணர் மற்றெல்லா ஜாதியார்களையும் தீண்டாத ஜாதியாகத்தான் நடத்துகிறார்கள்.

ஒருவருக்கொருவர் தீண்டாத இக்கூட்டத்தார்களெல்லாம் ஊர்ப்பொதுவாகிய தேவாலயத்திலே மாத்திரம் தங்களுக்குள் ஒருவித சமத்துவம் ஏற்படுத்திக்கொண்டு, பொது ஆராதனை விஷயத்தில் எல்லோர்க்கும் உரிமையிருப்பதாகக் காட்டி வரும்போது, சில குலத்தாரை மட்டும் விலக்குவது விரோதமல்லவா? பஞ்சமர்களென்று நாம் இவர்களைக்கோயிலுக்குள் நுழையாதபடி தடுக்கிறோம். திருநாராயணபுரத்துக் கோயிலில் பஞ்சமர் பிரவேசிக்கலாமென்று நமது ஆசாரியரான ராமாநுஜர் ஏற்படுத்தினாரே, அவர் செய்தது பிழையா?

மேலும், திருப்பாணாழ்வார் என்ன ஜாதி? திருநாளைப்போவார் என்ன ஜாதி? இவர்களுடைய திருஉருவங்களை இன்னும் கோயில்களில் வைத்துப் பிராமணர் பூஜை செய்யவில்லையா? ஸ்ரீரங்கத்துக்கோயில் பிராமணன்,

திருப்பாணாழ்வாரை முதுகில் சுமந்துகொண்டு ஊரைச்சுற்றி வரும்படி பெருமாள் கட்டளை இட்டதாக நமக்குள் கதை இல்லையா?

இப்போது அந்தப் பிராமணனைப் போலவே இக்குலத்தாரை அவமதிக்கும் பிராமணர்களுக்கெல்லாம் அதேசிஷை விதிக்க ஒரு பெருமாள் இல்லையா? பெருமாள் இருக்கத்தான் செய்கிறார். அவர் முன்போலவே தனக்கு பக்தி செய்பவர்களுக்கெல்லாம் தமது சந்நிதியில் இடமுண்டு என்று சொல்லத்தானே செய்கிறார்! நம்மவர்களின் காதிலேதான் விழவில்லை. நாம் கர்வத்தால் தெய்வவாக்கைக் கேட்க முடியாத செவிடர்களாய்விட்டோம்.

சுத்தமாக ஸ்நானம் முதலியன செய்துவிட்டுத்தான் கோயிலுக்குள் வரலாமென்று ஏற்படுத்தினால், அது நியாயம். அப்படியில்லாமல், நிஷ்காரணமாகப் பதினாயிரக்கணக்கான நமது சகோதரர்களை நாம் கோயிலுக்குள் வராமல் தடுத்து வைத்தால், அவர்கள் கிருஸ்தவம், மகமதீயம் முதலிய அந்நிய மதங்களில் சேர்ந்துவிடுவார்கள்.

அதிக விரோதங்களுக்கிடங்கொடாமல் சமாதானமாகவே எல்லா ஹிந்துக்களும் நமது கோயில்களுக்குள் பிரவேசிக்கலாம் என்ற நல்ல வழக்கத்தை அனுஷ்டானத்துக்குக்கொண்டு வரும்படியாக ஆரிய தேசத்திலேயும் நமது சநாதன வைதிக தர்மத்திலேயும் பற்றுள்ள எனது தேச சகோதரர்களெல்லோரையும் வணக்கத்துடன் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

---

## வள்ளலார் வாழ்த்துப் பதிகம்

-டாக்டர் த. அமிர்தலிங்கம்

சிதம்பர மன்றில் ஆடும்
சிவனருள் வழங்கி வாழ்த்த
பதியதன் மேற்கே ஆன்றோர்
போற்றிடும் மருதூ ரின்கண்
மதிமுக சின்னம் மாவின்
மாண்புடை கருவில் தோன்றிக்
சுதிமிகப் பெற்றே வையம்
களித்திட வந்த லிங்கம் 1

பள்ளியும் சென்று பாடம்
பகர்வதைக் கேட்டல் இன்றி
தள்ளியுட் கதவைச் சாற்றித்
தனிமையில் ஞானம் கற்று
அள்ளியே மாந்தர் உண்ண
அகவையோர் எட்டின் போதே
தெள்ளிய அமுதாய் தெய்வத்
தூமறை சொன்ன லிங்கம் 2

குமரவேள் வாழும் கந்தக்
கோட்டமும் மகிழ்ந்து பாடி
அமரர்கள் நாளும் போற்றும்
திருத்தணிக் குன்றும் பாடி
அமையவே அறையில் வைத்த
ஆடியில் முருகன் தோன்றி
தமதுரு வழங்கக் கண்ட
தவமுடை குருவாம் லிங்கம் 3

பணமெனில் பேயாய் நாயாய்
பறந்திடும் கீழோர் தந்த
மணமிலாச் செல்வம் சற்றும்
மதித்திடல் இன்றி வீசி
குணமுளார் அன்பில் தந்த
குறையிலாச் செல்வம் ஏற்று
உணவிலார் உண்ணச் செய்த
உத்தமர் இராம லிங்கம். 4

ஒற்றியூர் சாலை யொன்றில்
ஒருடை யில்லா ஆண்டி
மற்றுவாழ் மாந்தர் தம்மை
மாசுடை விலங்காய் தூற்றி
உற்றிவர் நோக்கி வாழ்த்தி
உத்தம மனிதன் என்றான்
கற்றுளார் போற்ற வந்த
கவியர சான லிங்கம் 5

அருளினால் பிறந்த பாக்கள்
அவனருள் போற்றும் பாக்கள்
திருவருட் பாக்கள் என்ற
திருப்பெயர் கொள்ளத் தேரா
மருளினார் வழக்கும் ஆட
மங்கல முகத்தைக் காட்டி
அருளினால் வெற்றி கொண்ட
அருட்பெருஞ் சோதி லிங்கம் 6

ஆறிரு முகங்கள் கண்டு
அம்பலக் கூத்தும் கண்டு
போற்றியே நாளும் தெய்வப்
படிமையைத் தொழுத பின்னும்
வேற்றுமை களையும் நல்ல
வேட்கையால் ஓங்கும் தீபம்
ஏற்றியே வணங்கச் சொல்லும்
என்னரும் ஞான லிங்கம் 7

சத்திய ஞான மார்க்கம்
சத்திய ஞான மன்றம்
சத்திய வேத சாலை
சாதிகள் இன்றி மாந்தர்
நித்தியம் வாழ மண்ணில்
நிறுவிய நல்ல தொண்டால்
பத்தியும் வளர்த்து மேன்மை
புத்தியும் வளர்த்த லிங்கம் 8

வைத்தநற் பண்டம் கொள்ள
வருபவர் யாரும் இன்றிக்
கைத்ததால் நெஞ்சம் இன்றே
கடையினை மூடி விட்டேன்
மெய்த்தவ ஞானி யாக
மீண்டுமே வருவேன் என்று
கத்திய வாரில் தோன்றி
காந்தியாய் சிறந்த லிங்கம் 9

முருகனை அறைக்குள் முன்னம்
முகமெதிர் கண்டார் அன்றே
முருகனோ டறையில் ஒன்றி
முத்தியில் கலந்தார் நன்றே
அருவினை என்ப துண்டோ?
அடியவர்க் கென்று சொல்லிப்
பருவுடல் மறைத்துக் கொண்ட
பரம்பொருள் இராம லிங்கம்

# திரைகள் அகல வேண்டும்

டாக்டர் மின்னூர் சீனிவாசன், எம்.ஏ.,பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், அரசினர் கலைக்கல்லூரி, செங்கற்பட்டு

மனத்தின் இயல்பும் ஆற்றலும் வியப்பானவை. ''மனத்தைப் பொறுத்தது உலகம்; மனத்தின் கற்பிதமே உலகம்'' என்பது மறைமொழி. விவேகானந்தர் சிந்தனையில் மனத்தூய்மையே. மதத்தின் பெருநோக்கமெனத் திகழ்கின்றது. விவேகானந்தர் கூறுகின்றார்; ''செயல் செய்வதன் மூலம் - பற்றில்லாது செய்வதன் மூலம் மனத்தைத் தூய்மைப்படுத்துவதே கரும யோகமாகும்.'' ''மனம்வெளுக்க வழியில்லை'' என்று முத்துமாரியம்மனை அழைத்து முறையிடும் பாரதியார் பக்திக்கருத்தாக-சக்தி வழிபாடாக வினவுவது கவனத்திற்குரியது. மனத்தூய்மை சத்தியத்தால் வரும். உடம்பின் தூய்மை நீரால் வருவது போல் மனத்துக்கு தூய்மை சத்தியத்தால் வாய்க்கும் என்றார் விவேகானந்தர். இதையே, ''புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்'' என்று வள்ளுவர் (குறள் 198) மறைபேசியுள்ளது. பாரதியார் மனம் வெளுக்கப்படல் வேண்டும் என விரும்பியதில் ஆசாரம் காட்டப்பட்டது என்பதைவிட அனுபூதியே விளக்கப்பெற்றது எனலாம்.

ஆசாரம் வலியுறுத்துவது ஒரு புறம் என்றும் அனுபூதி நிலை வற்புறுத்துவது ஒரு பாங்கு என்றும் விலகி நில்லாமல் உள்ளீடில்லாத ஆசாரம் வீண்படும் என்ற தெளிவையே இங்கே காணவேண்டும். விவேகானந்தர் விரித்துரைக்கும் கருமயோகம் இப்படி வெளிப்படுகின்றது; ''கல்லூரி விரிவுரையாளர் ஒருவர் குழப்பமாக பாடம் சொல்வாரானால் அதே பொழுதில் செருப்பைப் பழுதுபார்க்கும்தொழிலாளி திருத்தமாகத் தன் கடமையைச் செய்தால் அஃதே கருமயோகமாகும்'' கீதையின் சாரமும் இதில் அடங்கும். கீதை இந்நோக்கில், ஞானநூல் என்பதோடு யோக சாத்திரமுமாகும்.

மனத்தூய்மையை நினைத்துப்பார்க்கும் நாம் மனத்தின் எல்லையைச் குறித்தும் கருத வேண்டும். உயிர்ப்புடைய பிறவிகட்கெல்லாம் இயல்பூக்கம் ( Instinct )உண்டு. மனிதர்க்கு அறிவு (reason) உண்டு; மேலும் அகத்தெழுச்சி (Inspiration) உண்டு. இப்பாகுபாடு விவேகானந்தர் காட்டும் சிந்தனையில் வாய்ப்பது.

இயல்பூக்கத்தில் ( Instinct ) பசி, தாகம் போலும் உணர்ச்சிகள் வழக்கமாக உள்ளவை. மனிதர் உயர்தலும் கருமயோகத்தில் நிலைத்தலும் வேண்டுமானால் அறிவு வளர்ந்து அறிவின் வரம்பைக்கடந்த அருள் நிலையாம் அகத்தெழுச்சி ( Inspiration ) வேண்டும். அகத்தெழுச்சியாவது - சான்றாக, ஒரு கவி மாலை வானின் அழகைக்கண்டு திளைத்துப் பாடல் புனைவதற்கான அனுபவத்தின் வயமாகி விடுவது. வழிபாட்டின் போதும் (அன்றாடம் வழிபடுவது வழக்கமாயினும்) சொற்களை அடுக்கி வாய்ப்பாடாகச் சொல்வதை விட்டு உணர்ந்து சொல்லி நிறைவு காண்பதும் அகத்தெழுச்சி நிலையே. விவேகானந்தர் இயல்பூக்கம், அறிவு, அகத்தெழுச்சி ஆகிய மூன்று நிலைகளை விளம்பியுள்ளார்.

மனம் அறிவின் வரம்பிலும் அகத்தெழுச்சியின் எல்லையிலும் இயற்கையாய் இயங்குவது தேவையானதே. ஆனால்எப்படியாயினும்இயல்பூக்கத்தோடு நிற்பது மனத்துக்குப்பொருந்தாது; வளர்ச்சியுமாகாது. விலங்கினத்துக்கான இயல்பூக்கத்தோடு நின்றுவிடும் மாந்தர் மனத்தூய்மை எய்தவேண்டும். அருளறிவு பெற வேண்டும். அதன் மூலம் அகத்தெழுச்சியும் ஆன்மத்தேட்டமும் பெற முயலவேண்டும் என்று விவேகானந்தர் விரும்பினார். ஏனெனில் ஒவ்வொருவரும் உள்ளவாறே சிந்தித்தால் உள்ளுறையும் சாரமாகப் பெற்றிருப்பது இறைமையைத்தான் .தம்முள்ளுரையும் இறைமையோடு ஒன்ற முனைதல் - ஒன்றியிருத்தல் ஒவ்வொருவரின் பிறவிப்பேறு, பிறப்புரிமையாகும். இனி, இயல்பூக்கம் உயிர் வாழ்தல் என்னும் அளவில் நிற்பதோடு சிறு வரம்புக்குட்பட்டதாவதை இவ்வாறு உணர்ந்துகொள்ளலாம்.

காட்டில் ஒரு மயில் மேய்ந்துவருகிறது. மரத்திலிருந்து இறங்கி நிற்கிறது. அதன்எதிரே தூரத்தில் ஒரு புலி பசுமையான சூழலில் கம்பீரமாக நடந்துவருகிறது. அது கண்ட மயில் இயல்பூக்கமாக மரத்தின் மேலேறித் தப்பித்து பறக்க விரும்புகின்றது. ஆனால், புலியின் கனலெரிக்கும் கண்களின் அழகில் மயங்கிக்கிரங்கி நிற்கும் இயல்பூக்கம் காரணமாக 'அசந்து' நிற்கிறது. தூரத்துப்புலி நெருங்கி வந்து மயிலை அறைந்து அடித்து இரையாக்கிக்கொள்கிறது., இயல்பூக்கமே வாழ்வானால் உயர்தலுமில்லை. வாழ்தலுமில்லை. மயில் தன் வண்ணப்பொலிவையும் மறந்து, புலியின் கண்களில் ஒளிரும் கனலில் ஈடுபட்டு மயங்கிப்பலியாவதுபோல் ஆன்மத்தேட்டத்தில் தம் நிலையுணராவிடில் புன் மயக்கத்திற்கு இரையாகி மனிதரும் மாய்ந்திட நேரும். அறிவு, அகத்தெழுச்சி வரம்புகளை நாடாமலே போகலாம். கருமயோகி தன்னிலை யுணர்ந்திருப்பது போல ஒவ்வொரு மனிதனும் தன்னையறிய முயலவேண்டும். அம்முயற்சியில் முன் நிற்கும் திரைகள் அகலவேண்டும்.

# திருவள்ளுவர் காட்டும் பகைமாட்சியும் பகைத்திறம் தெளிதலும்

டாக்டர் பொற்கோ,

தமிழ்ப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

**பகைமாட்சி :**

பொதுவாக யாரும் யாரோடும் பகை கொள்ளாமல் இருப்பது நல்லது. பெரும் பொறுப்புக்களில் இருப்பவர்கள் எல்லோருடனும் பொது நோக்கில் நடந்துகொள்ள முடியுமே தவிர நெருங்கிய நட்பு பாராட்ட முடியாது. அளவுக்கு மீறிய சுயநலக்காரர்களுடைய நட்பும் அறிவில்லாதவர்களுடைய நட்பும் கோழைகளுடைய நட்பும் நமக்குச்சுமையாகவும் தொல்லையாகவும் முடிவதை நாமே பல நேரங்களில் நேரடியாக உணர்ந்திருப்போம். பெரும் பொறுப்பில் இருப்பவர்கள் மிகத்திறமையாகவும் தந்திரமாகவும் இத்தகைய தொல்லை நட்புகளை விலக்கத்தான்வேண்டும். தேவைப்பட்டால் அத்தகைய தொல்லையாளர்களைப் பகைவர்களாக வைத்திருப்பது கூட நல்லது தான்.

கயவர்கள் வாயால் நாம் பழித்துப்பேசப்படுவதும் நமக்குப் பெருமைதான். அவர்களும் நம்மைப் புகழவேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமை ஆகாது. பேராசைக்காரர்களுக்கும், சுயநலக்காரர்களுக்கும், கூட இருந்து கொண்டே நமக்குக்கேடு செய்யும் இயல்பினை உடையவர்களுக்கும் நாம் பகைவர்களாக இருப்பதுதான் நமக்கும் நல்லது-அறத்துக்கும் நல்லது.

துறவிகளைத்தவிர மற்ற எந்த மனிதனும் எல்லோருக்கும் நல்லவனாக விளங்க முடியாது. அப்படி விளங்கவேண்டும் என்று ஆசைப்படுவதும் ஒரு பொருளற்ற ஆசைதான். சுருக்கமாகச்சொன்னால் நாம் சிலருக்குப் பகைவராக இருப்பதே நமக்குச்சிறப்பு. பகையிலேயே ஒரு மாட்சி இருக்கிறது.

பகை என்ற சொல்லின் நுட்பமான பொருளை இங்கே தெளிவாக விளங்கிக்கொள்ளுவது நல்லது.

நம்மில் இருந்து பொருத்தமில்லாத சிலரைப்பகுத்துவைப்பது அல்லது பிரித்துவைப்பது பகை. அப்படிப்பகுத்து வைக்கப்பட்டவர்களை பகைவர் என்கிறோம். சமுதாய வளர்ச்சிக்கு முரணான கேடர்களைத்தம்மில் இருந்து பகுத்துத் தொலைவில் வைப்பதுதான் தலைவர்களுக்கும் அரசர்களுக்கும் நல்லது.

அரசன் தன்னுடைய வலிமையைப் பெருக்கிக்கொள்ளவேண்டுமானால் திறமுள்ளவர்களையும் உயர்ந்த இயல்பு உடையவர்களையும் சிறந்த அறிஞர்களையும், தன்னோடு எப்படியாவது இணைத்துக்கொள்ளவேண்டும். தன்னைவிட ஆற்றல் மிக்க அரசர்களைப் பகைவர்களாக ஆக்கிக்கொள்ளக் கூடாது. தன்னைவிட வல்லவர்களிடம் பகைகொண்டால் அதனால் தன்னுடைய படைவலிமையும் பொருள் வலிமையும் குறைந்து தேய்ந்து போகும். அதனால்தான் தன்னைவிட வலிமை உடையவர்களோடு பகை கொள்ளுவதைக் கூடியவரை விலக்குக என்கிறார் வள்ளுவர். ஒரு அரசன் தன்னைவிட வலிமை குறைந்தவர்களோடு பகை கொள்ள நேர்ந்தால் பகை கொள்ளலாம் என்றும் அவர்களை வென்று தன்னோடு சேர்த்துக்கொண்டு தன் வலிமையைப் பெருக்கிக்கொள்ளலாம் என்றும் அரசனுக்கு அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.

எப்படிப்பட்டவர்களை எளிதில் வெல்லலாம் என்று தெரிந்துகொண்டு அவர்களை வென்று தன் வலிமையைப் பிறர்க்குக் காட்டுவதோடு தன்னிடம் தோற்றவர்களைத் தன் பக்கம் சேர்த்துக்கொண்டு ஒரு அரசன் தன் வலிமையைப் பெருக்கிக்கொள்ளுவது அரசர்களுக்கு உரிய அறம். தலைவர்களுக்கும் இது பொருந்தும். எளிதில் தோல்வியைத் தழுவிக் கொள்ளக்கூடியவர்களின் இயல்பு எப்ப இருக்கும் என்பதை வள்ளுவர் மிக ஆழ ஆராய்ந்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்

எடுத்ததற்கெல்லாம் அஞ்சுபவன், காரண காரிய நோக்கில் செயல்களையும், விளைவு களையும் கண்டுகொள்ளும் அறிவு இல்லாதவன், பிறரோடு இணங்கி நடந்து வினை முடிக்கத் தெரியாதவன், யாருக்கும் எதையும் கொடுக்க மனம் இல்லாதவன், காரணமில்லாமலே அடிக் கடிப்பிறர்மேல் கோபப்படுபவன், சுகபோகங் களில் அளவு கடந்த நாட்டம் உடையவன்-இப் படிப்பட்டவர்கள் எல்லாம் தாக்குதலைத் தாங்கமாட்டார்கள். விரைவில் எளிதாகத் தோல்வி அடைவார்கள். இவர்களை வெல்வது எளிது. அறிவுடைய அரசன் தன்னுடைய வலி மைக்குக்கேடு வராமல் இவர்களை வென்று தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளலாம்.

தன்னோடு நட்பு போலக் கூட இருந்து கொண்டே தனக்குக் கேடான காரியங்களைச் செய்யும் ஒருவனைத் தன்னில் இருந்து பிரித்து பகைவனாக நடத்துவதே அறிவுடைய அரச னுக்கு அழகு. இந்தக்கருத்து அரசனுக்கு மட்டும் அல்ல. நம் எல்லோருக்குமே தேவையான கருத்து. அடுத்துக்கெடுக்கும் ஒரு னுடைய பகையை நாம் ஏதாவது அவனுக்குக் கொடுத் துக்கூடப் பெற்றுக்கொள்ளலாம்.

கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற
அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

சமுதாயத்துக்குப் பொதுவான உயர்ந்த நீதி களைக் கற்று உணர்ந்து கொள்ளாதவனை அறி வுடைய அரசன் பகையாகக்கொண்டு ஒழுகு வதே நல்லது என்று வள்ளுவர் நன்கு வலியுறுத் திக்கூறுகிறார்.

ஒரு அரசன் அல்லது தலைவன் நல்ல துணைகளை உடையவனாக இருக்கவேண்டும். காரணமில்லாமல் தன்னைச்சுற்றி இருப்பவர்க ளோடு கோபம் கொள்ளக்கூடாது. அவன் மக்கள் நலனுக்கு உகந்த நல்ல நீதிகளையும் நெறிமுறைகளையும் நன்கு உணர்ந்தவனாக இருக்கவேண்டும். அவனுடைய பண்பு நலன் களும், வினைத்திறமும் அவனுடைய நண்பர் களும் அவனைச்சுற்றிஇருப்பவர்களும் உணர்ந்து பாராட்டிப்பின்பற்றத் தக்கவையாக இருக்க வேண்டும். அப்போது தான் அவனுடைய நண் பர்களும், சுற்றத்தார்களும் அவன் பால் கவர்ந் திழுக்கப்படுவார்கள். அப்படி அவர்கள் உள் ளத்தால் கவரப்பட்டு அவனோடு மனம் ஒன்றி இணைந்து நிற்கும்போது அவனுடைய ஆற்றல் இயல்பாகவே மலையளவாய்க் கடலலளவாய்ப் பெருகி நிற்கிறது. அப்போது அவனுடைய பகைவர்கள் அவனை நெருங்கவும் அஞ்சுவார் கள்.

அப்படியில்லாமல், ஒரு அரசன் அல்லது தலைவன் அன்பில்லாதவனாகவும், எடுத்ததற் கெல்லாம் அஞ்சுபவனாகவும் தன்னுடைய நண் பர்களும் சுற்றத்தார்களும் துன்பப்படும்போது கூட உதவி செய்யாதவனாகவும் எடுத்ததற் கெல்லாம் கோபப்படுபவனாகவும் அளவிறந்த சுகபோகங்களில் ஆசை உடையவனாகவும் பழி அஞ்சாதவனாகவும் தனக்கு மேலே இருப்பவர் களோடு கூட அடிக்கடிப் பகை பாராட்டுபவ னாகவும் இருந்துவிட்டால் அவனுடைய நண்பர் களும் அவனைச்சுற்றி இருக்கும் சுற்றத்தார் களும் பணியாளர்களும் அவன்மேல் வெறுப்புக் கொண்டு விரைவில் அவனை விட்டு விலக விரும் புவார்கள். இது உலக இயல்பு. அப்படி அவர் கள் விலக விரும்பும்போது அரசுக்கு அல்லது தலைவனுக்கு வலிமை நாளுக்கு நாள் குறைந்து தேய்கிறது. இந்தச் சூழல் தோன்றியவுடன் அவன் அவனுடைய பகைவர்களுக்கு எளியவ னாகிவிடுகிறான். பகைவர்கள் அவனை எளிதில் வென்று விடுவார்கள்.

ஒரு அரசன் அல்லது தலைவன் தனது இனிய இயல்புகளாலும் செயல் திறத்தாலும் தன்னைச்சார்ந்தவர்களின் மனதைக் கவர்ந்து கட்டுக்கோப்பைப் காப்பாற்றுகின்ற அதே நேரத்தில் பொறாமையினாலும் அளவிறந்த சுயநலத்தாலும் தன்னோடு கூட இருந்து கொண்டே கீழறுப்பு வேலை செய்யும் கயவர் களைச் சரியாகப் புரிந்துகொண்டு அவர்களைத் தன் கூடாரத்தில் இருந்து விலக்கவும் வேண்டும். அப்படி விலக்காமல் இருந்தால் அந்தக்கயவர் கள் தன் அணியில் உள்ள எல்லோரையும் குழப் பத்துக்கு உள்ளாக்கித் தன் வலிமையைக் குறைத்துவிடுவார்கள் என்பதை ஒரு அரசன் எப்போதும் மனதில்கொண்டு கவனமாகச் செயல்படவேண்டும்.

தன் அணியில் உள்ளவர்களைத்தன் இயல் புகளாலும் செயல் திறத்தாலும் ஒரு அரசன் கவர்ந்து தன் பால் இழுத்துத் தன் வலிமையை திரட்டிக்கொள்ளவேண்டும். அத்தோடு அப்படி வலிமையைத்திரட்டிக் கொள்வதோடு வலி சிதைந்து கிடக்கின்ற அரசர்களோடு போரிட்டு வென்று தன் தலைமைக்கு அவர்களையும் கொண்டு வந்து தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளவும் வேண்டும்.

பகைமாட்சி என்ற தலைப்பில் வள்ளுவர் கூறும் அரிய செய்திகளைச் சுருக்கமாக இங்கே குறிப்பிடுவது நல்லது. ஒரு அரசன் அல்லது தலைவன் தன்னுடைய பண்பு நலன்களாலும் அறிவாலும் செயலாலும் தன் அணியில் இருப்ப வர்களைக் கவர்ந்து தன் மயமாக்கிக் கொள்ள வேண்டும். கீழறுப்பு வேலை செய்யும் கயவர் களைத்தன் அணியில் இருந்துவிலக்கிக் களை எடுக்கவேண்டும். பண்புநலன்களாலும், அறி வாலும், செயலாலும் தலைமை பெறாமல் உள்ள பிறவலி குன்றியஅணிகளையும் வென்று தானே தலைமை ஏற்கவேண்டும்.

### பகைத்திறம் தெளிதல்:

பகையினது தன்மைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ப ஆவனசெய்து ஒழுகுவது அரசனுக்கும் தலைவனுக்கும் இன்றியமையாத கடமைகளுள் ஒன்று. இன்றைய சூழலில் தனி மனிதனுக்கும் இங்கே கூறும் செய்திகள் பொருந்தும்.

பொதுவாகச் சொன்னால் பகைமை என்பதே விலக்கத்தக்க ஒன்று. விளையாட்டுக்குக் கூட நாம் பகைமையை விரும்பக்கூடாது. இதை வள்ளுவர் 'நகையேயும்வேண்டற்பாற்று அன்று' என்று சொல்லுவார். சொற்களை ஏராகக் கொண்டு புலன் உழுது உண்ணும் புலவர் பெருமக்களுடைய பகைமை அரசனுக்குக் கூடவே கூடாது என்கிறார் வள்ளுவர். வில்லேந்திப் போர் செய்யும் வீரர்களுடைய பகைவந்தாலுங் கூட எளிதில் தப்பலாம். ஆனால் உலகியல் உணர்ந்து மெய்யறிவு பெற்ற புலவர்களிடம் பகைமை கொண்டவன் தப்ப முடியாது. இதை வள்ளுவர் நம் மனதில் எளிதாகப்பதியும்படி

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

என்று கூறுகிறார். இருவகைப்பகையுமே இல்லாதிருப்பது நல்லது. ஒருகால் வில்லேர் உழவர் பகையைக் கொண்டாலும் சொல்லேர் உழவர் பகையைக் கொள்ளக்கூடாது என்ற குறிப்பையும் இந்தக் குறளில் பார்க்கிறோம்.

ஒரு அரசன் அல்லது தலைவன்தான் தனிப்பட்டு நின்று பலரோடும் பகைமை தேடிக் கொண்டான் என்று வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட அரசனுடைய நிலைமை அறிவு திரிந்து பைத்தியம் பிடித்த ஒருவனுடைய நிலைமையைவிட மிகவும் பரிதாபத்துக்குரியதாகும். பைத்தியம் பிடித்த ஒருவனைப் பார்த்தவுடன் அவன் எப்போது கல்லெடுத்து எறிவானோ, அவன் பக்கம் பார்த்தால் மேலே வந்து விழுவானோ, வேறு என்னென்ன செய்வானோ-என்றெல்லாம் பல வழியில் நினைத்து அஞ்சி மற்றவர்கள் அவனைவிட்டு ஓசைப்படாமல் ஒதுங்கி நெடுந்தூரம் விலகிப்போய் விடுவார்கள். அவனுடைய சுற்றத்தார்கள் கூட இது தீராத பைத்தியம் என்று முடிவு செய்து விட்டால் இது எப்படியாவது தொலைந்தால் சரி என்று நினைக்கத்தொடங்கி விடுவார்கள். இது மனித இயல்பு. இதே போலத்தான் எல்லோருடனும் பகை பாராட்டுகின்ற அரசிடமிருந்தும் மற்றவர்கள் ஓசைப்படாமல் விலகிவிட விரும்புவார்கள். வாய்ப்பு கிடைத்தால் அவனுடைய தலைமையை தொலைத்துவிடவும் முயலுவார்கள். ஆகவே ஒரு அரசன் அல்லது தலைவன் ஒரே நேரத்தில் பலரோடு பகை கொள்ளுவதைத் தவிர்ப்பது தான் அறிவுடைமை. இவற்றையெல்லாம் நாம் நுட்பமாக உணர்ந்து கொள்ளத்தக்க வகையில்

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

என்று சொல்லுகிறார் வள்ளுவர். ஏமுற்றவர் என்பது பைத்தியம் பிடித்தவரை. ஏழை என்றது பரிதாபத்திற்கு உரியவரை.

பகைவர்களைக் கூட நண்பர்களாகக் கொண்டு ஒழுகுவதற்கு விரிந்த மனமும் சிறந்த அறிவும் நிறைந்த செயல் திறமும் வேண்டும். அப்படிப்பட்ட பண்பு நலன் ஒரு அரசனுக்கு அமையப்பெற்றால் அவன் பெருந்தன்மையின் கீழ் உலகமெல்லாம் ஒடுங்கி நிற்கும். அப்படிப்பட்ட பண்பு நலன் எல்லோருக்கும் எப்போதும் அமைவதில்லை. எப்போதாவது சில காலத்தில் யாராவது ஒரு சிலருக்கு அரிதில் அந்தப்பண்பு நலன் அமைகிறது. அப்படிப்பட்ட உயர்பண்பினரை நன்கு உணர்ந்து கொண்டவர்கள் அவரோடு சேர்ந்து கொள்ள விரும்புவார்களே அன்றி பகைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். அந்தப்பெருந்தன்மையை அடைய அரசர்களும் தலைவர்களும் இடைவிடாது முயலவேண்டும். அந்தப்பண்பு நினைத்த மாத்திரத்தில் ஒரு நாளில் வந்து சேராது.

எதிர்பாராத வகையில் ஒருவன் தனக்கு நல்ல துணையில்லாமல் தனிப்பட்டு நிற்கிறான்; எதிரிகளோ இருவர், அப்போது அவன் என்ன செய்யவேண்டும்? இரண்டு எதிரிகளில் ஒருவனை எப்படியாவது தனக்கு நண்பனாக மாற்றிக்கொள்ளவேண்டும் என்கிறார் வள்ளுவர். தன்னுடைய வலிமை குறைந்து ஒரு தலைவன் தான் துன்பத்தில் இருக்கும் போது வேறொரு தலைவன் தனக்கு நண்பனா பகைவனா என்று தெரியாத நிலையில் அவனை வெறுத்துப்பகைவனாகவும் ஆக்கிவிடக்கூடாது. வலிந்து நட்பு பாராட்டமுயன்று தன்னுடைய நிலைமையைத் தாழ்த்திக் கொள்ளவும் கூடாது. உறவும் இல்லை. பகையும் இல்லை என்ற நிலையில் அவனை நொதுமலாக விட்டுவைப்பதே நல்லது.

நமக்குத்துன்பம் நேர்ந்தபோது நண்பனாக இருப்பவன் தானே உணர்ந்து கொண்டு முன் வந்து நமக்கு உதவுவான். அப்படி உணர்ந்து உதவாத ஒரு நண்பனிடம் நம்முடைய துன்பத்தைப்போய் எடுத்துச்சொல்லுவது விரும்பத்தக்கது அல்ல. நம்முடைய துன்பத்தை நம் பகைவரிடம் எடுத்துச் சொல்வது நம்மை மேலும் பலவீனப்படுத்தும். இதனால் தான் நம்முடைய முன்னோர்கள் 'தோழனோடும் ஏழமைபேசேல்' என்று நமக்கு அறிவுரை வழங்கினார்கள். இந்த அறிவுரை தலைவர்களுக்கும் அரசர்களுக்கும் மிகவும் தேவை. இதைத்தான் வள்ளுவர்

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

என்ற குறளில் எடுத்துக்கூறித் தெளிவுபடுத்து கிறார்.

நமக்கு வலிமை குறையக்குறைய நமது பகைவர்களுக்குக் களிப்பு பெருகும். நாம் வலிமைகுன்றி இருக்கிறோம் என்பதை ஆராய்ந்து கண்டுபிடித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய வலிமைக்குறைவைத் தெரிந்து கொண்டு பகைவர்கள் நம்மைத்தாக்க வரும் போது முதலாவதாக நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பகைவர்களின் தாக்குத லுக்கு அஞ்சி அழியாமல் நாம் நம்மைப் பாது காத்துக்கொண்டதைக் கண்டவுடனே எதிரிகள் ஏமாற்றம் அடைகிறார்கள். அவர்களின் செருக்கு இருந்த இடம் தெரியாமல் மறை கிறது.

பகைவர்கள் நம்மை எளிதில் வென்று வீழ்த்திவிடலாம் என்ற முடிவோடு வந்து நம்மை வீழ்த்த முடியாமல் தவிக்கும்பொழுது அவர்களுடைய கணிப்பு தப்பியதால் அவர் களுக்கு ஏமாற்றம் ஏற்படுகிறது. அந்த ஏமாற் றத்தோடு அவர்களுடைய செருக்கும் மாய் கிறது. ஒரு அரசன் அல்லது தலைவன் வலிமை குறைந்து நிற்கும் பொழுது மிக விரைவாக தன்னை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். எதிரிகள் தாக்கும்போது அவர்களைத்திருப்பித் தாக்க முடியாவிட்டாலும் தன்னை அவர்களி டம் இருந்து பாதுகாத்துக் கொள்ளவாவது வேண்டும்.

பகைவர்கள் தன்னைத்தாக்குவதற்கு ஏற் பாடுகளைச் செய்கிறார்கள் என்று உணர்ந்த உடனே சிறந்த தலைமைப்பண்புகளைப்பெற்ற அரசன் பகைவர்களை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும். தன்னுடைய வலிமையைப் பெரிதாக நினைத்துத்தன் எதிரிகளைக் கவனி யாது இருக்கும் அரசன், எதிரி முள்மரம்போல் வளர்ந்த பிறகு எதிரியை அழிக்க முடியாமல் துன்புறுவான். முள்மரம் பெரியதாக வளர்ந்த பிறகு அதை வெட்டுவார்க்கு எவ்வளவோ துன் பம் நேரும். அதைப்போலவே எதிரியை நன்கு வளர்கிற அளவுக்கு விட்டு வைத்த அரசனும் துன்பப்படுவான். இந்தச் செய்தியை வள்ளுவப் பெருந்தகை

இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

என்று இலக்கிய நயம் தோன்ற அழகாகக் கூறுகிறார்.

பகைவர்களுடைய செருக்கை அழிக்காமல் அவர்களை மேலும் மேலும் வளர விடுகின்ற அரசன் ஒரு நேரத்தில் அந்தப் பகைவர்கள் மூச்சு விட்டாலே எதிர்த்து நிற்க முடியாமல் அஞ்சி அழிந்துபோவான். பகைவர்களை அவ் வப்போது ஒற்றர்கள் மூலம் கண்காணிப்பதும் பகைவர்கள் தம் வலிமையைப் பெருக்கும் போது அதைத் தொடக்கத்திலேயே தடுத்து முறியடிப்பதும் பகைவர்களுடைய செருக்கை அழிப்பதும் அரசனது இன்றியமையாத கடமை கள் எனலாம். இந்தக்கடமைகளை அவன் புறக் கணித்தால் எதிரிகள் மூச்சுவிட்ட அளவிலேயே அவன் நிலை குலைந்து அழிந்துபோவான் என் கிறார் வள்ளுவர்.

---

# இராமபக்தர் தியாகய்யர்

திருவாரூர் திருத்தலத்தில் தான் சங்கீத மும்மணிகளான ஸ்ரீசியாமா சாஸ்திரிகள், தியாகையர், ஸ்ரீமுத்துசாமி தீட்சிதர் ஆகி யோர் தோன்றினர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இவர்களில் தியாகையர் சிறந்த இராம பக்தர். இராம நாமத்தை 96கோடி தடவைகள் அவர் உச்சரித்திருக்கிறார் என்றால் அவரு டைய இராமபக்தியை என்னவென்று வியப்பது?

தம்முடைய காலத்தை இராம கீர்த் தனைகள் இயற்றுவதிலும், இசைப்பதிலுமே கழித்த அவர், பல நாட்கள் பட்டினி கிடக்க நேர்ந்திருக்கிறது. ஒருநாள் இரவு 11 மணி, தியாகையரோ முழு பட்டினி. ஆனாலும் இராம நாமத்தை ஜெபித்தபடியே பசி மறந்து இருந்தார் அவர்.

வாசல் கதவை யாரோ தட்டுகிற சப்தம் கேட்டு, தியாகையர் கதவைத் திறந்தார். ஒரு கிழவரும் அவர் மனைவியும், அவர்களுடன் மூட்டை முடிச்சுகளுடன் வேலைக்காரனும் நின்றுகொண்டிருக்க, அவர்களை வரவேற்ற தியாகையர் ''உங்களை உபசரிக்க என்னிடம் உணவு இல்லையே'' என்று கூறி வருந்தினார்.

''கவலைப்படாதே அப்பா! நாங்களே நிறைய சமையல் சாமான்களோடு தான் வந்தி ருக்கிறோம்'' என்ற கிழவர், தம் வேலைக் காரனை சீக்கிரம் சமைக்குமாறு ஆணையிட் டார். சுவாமிக்கு நிவேதனம் செய்த பிறகு கிழவர், தங்களுடன் தியாகராஜரையும்இருத்தி உணவினை உண்ணுமாறு செய்து, அவருடைய பசியைத் தணிவித்தார்.

விடிந்த பிறகு பார்த்தால் விருந்தாளி களாகவந்த மூவரில் ஒருவரும் வீட்டில் இல்லை. அவர்கள் கொண்டு வந்த சமையல் சாமான் களோ அப்படி அப்படியே இருந்தன.

தியாகையரின் பசியைத் தணிவிக்க அவர் சதா வணங்கிக் கொண்டிருக்கும் இராமபெரு மானே சீதையுடனும், அனுமனுடனும் வந்தி ருக்கின்றார் என்றால் தியாகையரின் இராம பக்தியை வியப்பதா? இறைவன் தானே தேடி வந்து அடியவர்க்கு அமுது ஊட்டிப் பசி தணி வித்த அருள் அற்புதத்தை வியப்பதா?



தஞ்சையில் நடந்த ஆலய மேம்பாட்டுத் திட்டச் செயல்முறை துவக்கவிழாவிற்கு வருகை புரிந்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஆலய மரியாதைகளோடு வரவேற்கப்படுகிறார்.





கலைமாமணி தருமபுரம் ப. சுவாமிநாதன் அவர்களின் இறைவாழ்த்துடன் விழா தொடங்கும் காட்சி.



அறநிலையத்துறை ஆணையர் திரு கு. ஆளுடையபிள்ளை, ஐ.ஏ.எஸ். அவர்கள் வரவேற்புரையாற்றுதல்.




அறநிலையத்துறை மற்றும் வணிகவரித்துறையின் ஆணையர், அரசுச் செயலாளர் திரு சுகவனேசுவரர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் தொடக்கவுரையாற்றுதல்.




ஆலயப் பாதுகாப்புக் கமிட்டித் தலைவர் கவிதாமணி அ. வெ ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் வாழ்த்துரை வழங்குகிறார்.




தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் வாழ்த்துரை வழங்குகிறார்.



தவத்திரு ஊரன் அடிகள் வாழ்த்துரை வழங்குகிறார்.



தமிழ்நாடு அர்ச்சகர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் திரு சாம்பசிவசிவாச்சாரியார் மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி மடல் வாசித்தளிக்கிறார்.




மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் ஆலயப் பணியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் கல்விநிதி வழங்குகிறார்.



திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர் தவத்திரு முத்துக்குமாரசாமித் தம்பிரான் அவர்கள் ஆசியுரை வழங்குகிறார்.



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருமதி டாக்டர் இராதா தியாகராஜன் வாழ்த்துரை வழங்குகிறார்.



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பரம்பரை தருமகர்த்தாக்களின் முறையற்ற நிர்வாகத்தால் சம்பளம் பெறாமல் வாடிய 930 அர்ச்சகர்கள் மற்றும் ஆலயப் பணியாளர்களின் சம்பளப்பாக்கியைக் காசோலையாக வழங்குகிறார்.





மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் ஆலய மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்முறை துவக்க விழா சிறப்புரையாற்றுகிறார்.

உ

# உடையவர் போற்றிய உறங்காவில்லி

டாக்டர் பருத்தியூர் சந்தானராமன், M.A., D.Litt. Ph.D.,

சென்னை

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

இராமனின் இளவலாகிய இலக்குவனை 'இளையவில்லி' என்று குறிப்பிடுவர். உறங்காவில்லி என்ற பெயரும் அவனுடையதேயாகும்.

அல்லையாண்டு அமைந்த மேனி
அழகனும் அவளும் துஞ்ச,
வில்லையூன்றிய கையோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண்டு அமைந்த தோளாய்
கண்கள் நீர்சொரியக் கங்குல்
எல்லைக்காண்பளவும் நின்றான்
இமைப்பிலன் நயனம் என்றான்.

காட்டில் இராமனும் சீதையும் உறங்கிய பொழுது அவர்களின் நிலைகண்டு வெதும்பிக் கண்ணீர்விட்டபடி, இரவு முழுவதும் உறங்காது வில்லுடன் காவலாய் நின்ற இலக்குவனை குகனது வாய்மொழி மூலம் கம்பன் மேற்கண்டவாறு காட்டுகிறான்.

அவ்வாறே உறங்காது எப்போதும் வில்லுடன் காவல் புரியும் பணியில் ஈடுபட்டிருந்தவன் தான் இராமானுஜர் காலத்தில் வாழ்ந்திருந்த உறங்காவில்லி. அகளங்கன் என்னும் சோழச்சிற்றரசன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். உறங்காவில்லி அவனது மெய்க்காவல் பணியில் அமர்ந்திருந்தான். தன் மனைவி பொன்னாச்சியின் பால் உறங்காவில்லிக்கு அளவு கடந்த அன்பும் பற்றும் இருந்தது. அவள் கால் நோக நடப்பதையும் அவள் மீது வெய்யில் படுவதையும் கூட அவன் வேதனையாகக் கருதினான். தான் எங்குச் சென்றாலும் அவளைப் பிரிய மனமின்றி அவளையும்உடன் அழைத்துச்செல்வான்.

திருவரங்கநாதப் பெருமானுக்கு வசந்தப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகிறதென அறிந்து அதனைக் காணப்புறப்பட்ட உறங்காவில்லியுடன் மனைவி பொன்னாச்சியும் சென்றாள். வழியில் கரடுமுரடான தரையில் நடக்கும்பொழுது பொன்னாச்சியின் கால்கள் நொந்துவிடக் கூடாதென எண்ணினான் உறங்காவில்லி. தான் சிறிதும் வெட்கமின்றி பலர்பார்க்க அவளுக்கு நடைபாவாடை அமைத்து அழைத்துச் சென்றான். அவளது அழகில் அவனுக்கு அவ்வளவு மயக்கம்!

அச்சமயம், தற்செயலாக அவ்வழியே சென்றுகொண்டிருந்த உடையவர் என்னும் இராமானுஜர் அதனைக்கண்டார். அழியும் மானுடவழகில் அவனுக்கிருந்த மையலைக் கண்டு வருந்தினார். அதனை விலக்கி அவனைப் பெருமான் திருப்பணியில் ஈடுபடுத்த எண்ணியது அவரது திருவுள்ளம். அவனிடம் சிறிது சிறிதாகப் பேச்சுக்கொடுத்து, அழியும் மானுடவழகில் அவனுக்கிருந்த மையலை மாற்ற முனைந்தார். இறுதியில் வசந்த விழாவில் சர்வாலங்காரங்களுடன் எழுந்தருளிக் காட்சி தந்த திருவரங்கனைச் சுட்டிக்காட்டினார். ''வில்லியாரே! இதுவன்றோ என்றும் அழியாத பேரழகு!'' என்றார். அரங்கனின் அழகில் சொக்கிநின்ற உறங்காவில்லியும் அதுமுதல் தனது மையலிலிருந்து விடுபட்டான். மனைவி பொன்னாச்சியையும் அரங்கனது அழகைக் காண ஆற்றுப்படுத்தினான். தங்களுக்குத் தக்க வழிகாட்ட வேண்டுமென்று உடையவரிடம் விண்ணப்பித்தான்.

உடையவரும் அவர்களை முறைப்படி வைணவர்கள் ஆக்கினார். உறங்காவில்லியை ''உறங்காவில்லி தாஸர்' என்ற தாஸ்ய நாமத்துடன் அழைத்து மகிழ்ந்தார். திருவரங்கத்து திருக்கோயிலில் முக்கியப் பொறுப்பில் பணியாற்ற அமர்த்தினார். கணவனும் மனைவியுமாக உடையவர்பால் பெரும்பக்திகொண்டு பணியாற்றினர். மனம்மாறித் திருவரங்கன் பணிக்கும், திருமடத்தின் சேவைக்கும்தங்களை அர்ப்பணித்துக்கொண்ட தம்பதிகளை, உடையவரும் பெரிதும் போற்றினார்.

காவிரிக்குச் சென்று நீராடித்திரும்பும் பொழுது, உறங்காவில்லிதாஸரின் கையைப் பிடித்தபடி நடந்துவருவது உடையவரின் வழக்கம். வேட்டுவக்குலத்தில் தோன்றிய உறங்காவில்லியின் கரம்பற்றி நடந்து வருவதைக் கண்ட மற்ற சீடர்கள் 'யதிராஜராகிய' இராமானுஜரின் ஆசாரம் கெட்டுவிடுவதாக எண்ணினர். அவரிடமே, அது குறித்துச் சிலர் பேசியும்விட்டனர்.

''உயர்வு என்பது குணத்தால் வருவது; குலத்தால் அல்ல'' என உணர்த்தத்திருவுள்ளம் கொண்டார் உடையவர். தமது நம்பிக்கைக்கு உரிய ஒரு சீடனை அழைத்தார். மற்ற சீடர்கள் அனைவரின் ஆடைகளிலிருந்தும் ஒரு சிறு பகுதியினை அவர்கள் அறியாதபடி வெட்டி எடுத்து வரப்பணித்தார். அச்சீடரும் அவ்வாறே செய்தார். ஆடைகளில் சிறு பகுதி வெட்டப்பட்டிருப்பதைக் கண்ட சீடர்கள் தங்களுக்குள் குற்றம் சாட்டிக்கொண்டு சண்டையிடத்தொடங்கிவிட்டனர்.

''ஆடையில் சிறு துண்டு வெட்டப்பட்ட இச்சிறு காரணத்திற்காக ஏன் இங்ஙனம் சண்டையிடுகிறீர்கள்?'' என வினவி, அவர்களைச் சமாதானப்படுத்தியபின் உறங்காவில்லியின் உயர்ந்த பண்பையும் மனோபாவத்தையும் வெளிப்படுத்தும் ஏற்பாட்டினை மேற்கொண்டார்.

தம்மடத்துச் சீடர்கள் சிலரை அழைத்து ''உறங்காவில்லி இரவு திருமடக் காவலுக்கு வந்தபிறகு, அவரது வீடு சென்று பொன்னாச்சியின் நகைகளைத் திருடி வாருங்கள்'' என்றார். முதலில் திடுக்கிட்ட சீடர்கள் பின் குருநாதரின் ஆணைக்குப்பணிந்து அவ்வாறே திருடச் சென்றனர்.

உறக்கம் பிடிக்காமல் ஒரு பக்கமாகப் படுத்திருந்த பொன்னாச்சியின் நகைகளைச் சீடர்கள் கழற்றினர். திருமடத்தைச் சேர்ந்த பாகவதர்கள் தனது அணிகலன்களை எடுத்துச் செல்லும் பேறு கிட்டியதே என்று மனம் மகிழ்ந்த பொன்னாச்சி வாளாவிருந்து விட்டாள். ஒரு பக்கத்து நகைகள் முழுவதும் கழற்றி முடிந்தவுடன், மறு பக்கத்து நகைகளையும் எடுத்துச் சென்று பாகவதர்கள் பயன்படுத்தட்டும்'' என எண்ணினாள் பொன்னாச்சி. மறு பக்கமாகப் புரண்டு படுத்தாள். அதுவரை உறங்கிக் கொண்டிருந்தவள் விழித்து விட்டாள் எனக்கருதிய சீடர்கள் வேகமாக அங்கிருந்து ஓடிவிட்டனர். மற்றொரு பக்கத்து அணிகலன்கள் பாகவதர்களுக்குப் பயன்படாமல் போய் விட்டதே என மிகவும் வருந்தினாள் பொன்னாச்சி.

வீடு திரும்பிய உறங்காவில்லியிடம் பொன்னாச்சி நடந்தவற்றைக் கூறினாள். அவனும் வருந்தி, விட்டுச்சென்ற ஒரு பக்க நகைகளை உடனே எடுத்துச் சென்று உடையவர் திருமடத்தில் கொடுத்துவரும்படி கூறினான். பொன்னாச்சியும் அவ்வாறே திருமடம் சென்று சீடர்கள் சூழ வீற்றிருந்த இராமானுஜர் முன் மற்றொரு பக்க நகைகளை வைத்து வணங்கி, அவற்றையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினாள். உடையவர் நடத்திய இந்த நாடகத்தின் மூலம் உறங்காவில்லியின் உயர்வு சீடர்களுக்கு விளங்கியது.

''எனது நகைகளைத் திருமடத்துப் பாகவதர்களுக்கு அளித்து விட்டேன்' என்று பொன்னாச்சி கூறியது கூட உறங்காவில்லியை மிகவும் சினம்கொள்ளச் செய்துவிட்டது. ''யான், எனது, என்று கூறும் அகங்கார மமகார நினைவு உனக்கு எப்படி வந்தது? யதிராஜரைச் சரணடைந்த பின்பு, 'நமது' என்று யாதுளது? இப்படிப் பேசும் உன்னுடன் இனி வாழவும் விரும்பவில்லை. நீ வேண்டுமானால் மறுமணம் செய்துகொள்'' என்று பொன்னாச்சியைக் கடிந்துகொண்டான். அவளிடமிருந்து விலகித்தனித்து வாழவும் முற்பட்டுவிட்டான் உறங்காவில்லி.

அதனை அறிந்த உடையவர் அவர்களை அழைத்துச் சமாதானப்படுத்தத் திருவுள்ளம் கொண்டார். உறங்காவில்லியை விசாரித்தார். அவனும் நிகழ்ந்தவற்றைக் கூறினான். பொன்னாச்சி மறுமணம் செய்து கொள்வதில் தனக்கேதும் மறுப்பு இல்லை என மீண்டும் உரைத்தான். அவனது மனப்பக்குவத்தைப் பாராட்டினார் உடையவர். ஆனால் அவர்கள் பிரிந்து வாழ்வதை விரும்பவில்லை.

அங்குக் கூடியிருந்தோரிடம் ''உறங்காவில்லி தாசரின் விருப்பப்படி பொன்னாச்சிக்கு மறுமணம் செய்விக்க விரும்புகிறேன். அவளுக்கு ஏற்ற கணவர் உறங்காவில்லி தாஸரே எனத் தோன்றுவதால் அவருக்கே மறும்மணம் செய்விக்கிறேன்'' என்றார்.

அவரது பண்பான மொழிகளால் பிரிந்தவர் கூடினர். அனைவரும் உடையவரையும் உறங்காவில்லியின் உயர்வையும் உணர்ந்து போற்றினர்.

# கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு

யாழ்ப்பாணத்து நல்லூர் **ஆறுமுக நாவலர்**

## கடவுள்

உலகமாவது சித்தும் அசித்துமென இரு வகைப்படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள். அசித்து அறிவில்லாதபொருள். அசித் தென்றாலும், சடமென்றாலும் பொருந்தும். உலகம் தோன்றி நின்று அழியுங்காரியமாய் உள் ளது. ஆதலினால், உலகத்தைப்படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில் களையுஞ் செய்தற்கு ஒரு கடவுள் இருக்கின் றார் என்பது நன்றாக நிச்சயிக்கப்படும்.

கடவுள் என்றும் உள்ளவர். அவருக்குப் பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர். அவர் அறியாதது ஒன்றுமில்லை. அவருடைய அறிவு இயற்கை யறிவு. ஒருவர் அறிவிக்க அறிபவரல்லர். அவர் எல்லாம் வல்லவர். அவரால் இயலாத கருமம் ஒன்றுமில்லை. அவர் அளவிடப்படாத ஆனந் தமுடையவர். தம்முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவ ரல்லர். அவர் தம்முடையவர்; பிறர் வயமுடை யவரல்லர். அவர் உயர்வும் ஒப்பும் இல்லாதவர். அவரின் மேலானவரும் இல்லை; அவருக்குச்சம மானவரும் இல்லை. அவர் சகலலோகத்துக்கும் ஒரே நாயகர். அவர் செய்யுந்தொழில்களுள் ஒன்றாயினும் அவருடைய பிரயோசனத்தைக் குறித்ததன்று. எல்லாம் ஆன்மாக்களினுடைய பிரயோசனத்தைக் குறித்தவைகள். அவர் ஆன் மாக்களிடத்துள்ள கைம்மாறில்லாத அளவு கடந்த திருவருளே திருமேனியாக உடையவர்.

கடவுள் ஆன்மாக்கள் பொருட்டு வேதம் ஆகமம் என்னும் முத ல்களை அருளிச் செய் தார். அவைகளிலே விதிக்கப்பட்டவைகளெல் லாம் புண்ணியங்கள், விலக்கப்பட்டவைகளெல் லாம் பாவங்கள். அவர் புண்ணியத்தைச் செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவத்தைச் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். துன்பத்தைக்கொடுப்பதனால் அவரை வன்கண்ணரென்று கொள்ளலாகாது. தீமை செய்த பிள்ளைகளைப் பிதா மாதாக்கள் தண்டித்தலும், சில வியாதியாளர்களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும், இருப் புக்கோல் காய்ச்சிச் சுடுதலும், கண்ணிற்பட லத்தை உரித்தலும் அவர்களிடத்துள்ள இரக் கத்தினாலன்றி வன்கண்மையினால அல்லவே. அதுபோலக் கடவுள் பாவஞ்செய்த ஆன்மாக் களைத் தண்டித்தல், அப்பாவத்தை ஒழித்து மேலே பாவஞ்செய்யாவண்ணம் தடுத்து அவர் களை நல்வழியில் செலுத்தி உய்வித்தற்கு ஏது வாதலினால், அதுவும் கருணையேயாம்.

## ஆன்மா

ஆன்மாக்கள், நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடையுடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவை களாய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவை களாய், தங்களுக்கு ஒரு தலைவனை உடைய வைகளாய் இருக்கும்.

ஆன்மாக்கள் நல்வினை தீவினை யென் னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத்தோற் றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண் பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதத்தையும் உடையவகளாய்ப் பிறந்திறந் துழலும்.

நால்வகைத் தோற்றங்களாவன; அண்ட சம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என் பவைகளாம். அவைகளுள், அண்டசம் முட்டை யிற்றோன்றுவன. சுவேதசம் வேர்வையிற் றோன்றுவன. உற்பிச்சம் வித்து, வேர், கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற்றோன்றுவன. ஏழு வகைப் பிறப்புக்களாவன; தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். தாவரங்களென்றது மரம் செடி முதலியவைகளை.

கருப்பையிலே தேவர்களும், மனிதர் களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட் டையிலே பறவைகளும், ஊர்வனவும், நீர் வாழ்வனவும் பிறக்கும். வேர்வையிலே கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும். வித்தினும் வேர் கொம்பு கொடி கிழங்குகளிலும் தாவ ரங்கள் பிறக்கும். தாவரமென்றாலும், நிலை யியற்பொருளென்றாலும், அசரமென்றாலும் பொருந்தும். தாவரமல்லாத மற்றை ஆறு வகைகளும் சங்கமங்களாம். சங்கமமென்றா லும், இயங்கியற்பொருளென்றாலும், சரமென் றாலும் பொருந்தும்.

தேவர்கள் பதினொரு நூறாயிரம் யோனி பேதம், மனிதர்கள் ஒன்பது நூறாயிரம்யோனி பேதம், நாற்கால் விலங்கு பத்து நூறாயிரம் யோனிபேதம், பறவை பத்து நூறாயிரயோனி பேதம், நீர்வாழ்வன பத்து நூறாயிர யோனி பேதம், ஊர்வன பதினைந்து நூறாயிர யோனி

பேதம். தாவரம் பத்தொன்பது நூறாயிர யோனிபேதம், ஆகத்தொகை எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதம்.

ஆன்மாக்கள், தாம் எடுத்த சரீரத்துக்கு ஏற்ப, மெய், நாக்கு, மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளினாலும், சித்தத்தினாலும், அறியும் அறிவின் வகையினாலே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என அறுவகைப்படும். புல்லும் மரமும் முதலியவை பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள். இப்பியும் சங்கும் முதலியவை அதனோடு இரதத்தையும் அறியும் ஈரறிவுயிர்கள். கறையானும், எறும்பும் முதலியவை அவ்விரண்டினோடு கந்தத்தையும் அறியும் மூவறிவுயிர்கள். தும்பியும் வண்டும் முதலியவை அம்மூன்றினோடு உருவத்தையும் அறியும் நாலறிவுயிர்கள். விலங்கும் பறவையும் அந்நான்கனோடு சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும் மனிதர்களும் அவ்வைந்தனோடு சித்தத்தாலறியும் அறிவுமுடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள், தாம் பூமியிலே செய்த நல்வினை தீவினை யென்னும் இருவகைவினைகளுள்ளும், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், திவினையின் பயனாகிய துன்பத்தைத் நரகத்திலும், அனுபவிக்கும். அப்படி அனுபவித்துத்தொலைத்து, தொலையாமல் எஞ்சிநின்ற இருவினைகளினாலே திரும்பவும் பூமியில் வந்து பிறந்து, அவைகளின் பயன்களாகிய இன்பதுன்ப மிரண்டையும் அனுபவிக்கும். இப்படியே, தமக்கு ஒரு நிலைமை இல்லாத கொள்ளிவட்டமும் காற்றாடியும் போல, கடவுளுடைய ஆஞ்ஞையினாலே கருமத்துக்கு ஈடாக, மேலே உள்ள சுவர்க்கத்திலும், கீழே உள்ள நரகத்திலும், நடுவே உள்ள பூமியிலும், சுழன்று திரியும்.

இப்படிப் பிறந்திறந்துழலும் ஆன்மாக்கள் தாவரயோனி முதலிய கீழுள்ள யோனிகளெல்லாவற்றினும் பிறந்து பிறந்திளைத்து, புண்ணியமேலீட்டினாலே மனிதப்பிறப்பிலே வருதல் மிகுந்த அருமையாம். அவ்வருமை, ஆராயுங்காலத்து, கடலைக்கையினாலே நீந்திக்கரையேறுதல் போலும். இத்தன்மையையுடைய மனிதப்பிறப்பை எடுப்பினும், வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசத்தை விட்டு அவை வழங்கும் புண்ணியதேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியம்.

இவ்வருமையாகிய மனிதப்பிறப்பை உண்டாக்கியது உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்குக்காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும். பத்துமாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும். பிறந்தபின் சில காலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயதுக்கு மேற் பதினாறு வயசு வரையிலுள்ள பாலாவத்தையின் அழியினும் அழியும். அதற்குமேல் நாற்பது வயசு வரையிலுள்ள தருணாவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தாவத்தையின் அழியினும் அழியும். எப்படியும் இந்தச்சரீரம் நிலையின்றி அழிவது உண்மையாமே. அழியுங்காலமோ தெரியாதே. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாது வருமோ, அதுவும் தெரியாதே. ஆதலால் இந்தச்சரீரம் உள்ளபொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங்கருணைக்கடலாகிய கடவுளை வழிபட்டு உய்யவேண்டும்.

## கடவுள் வழிபாடு

திருக்கோயிலுள்ளிருக்கும் இலிங்கம் முதலிய திருமேனியும் தமது மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்திலே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், இங்குள்ளவர் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம்.

கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களில் மாத்திரம் தயிரில் நெய்போல விளங்கி நிற்பார். மற்றையிடங்களெல்லாவற்றிலும் பாலில் நெய்போல விளங்காது நிற்பர். கடவுளுக்குச்செய்யும் வழிபாடுகளாவன. அவரை மனசினாலே தியானித்தலும், வாக்கினாலே துதித்தலும், கைகளினாலே பூசித்தலும், கால்களினாலே வலம்வருதலும், தலையினாலே வணங்குதலும், செவிகளினாலே அவருடைய புகழைக்கேட்டலும், கண்களினாலே அவருடைய திருமேனியைத்தரிசித்தலுமாம்.

அன்பில்லாத வழிபாடு உயிரில்லாத உடம்புபோலும். அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. கடவுளிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்களாவன: அவருடைய உண்மையை நினைக்குந்தோறும் கேட்குந்தோறும் காணுந்தோறும் தன்வசமழிதலும், மயிர்க்கால் தோறும் திவலை உண்டாகப் புளகங்கொள்ளலும் ஆனந்த வருவி பொழிதலும், விம்மலும் நாத்தழுதழுத்தலும், உரைதடுமாறலும், அவரால் விரும்பப்படுபவைகளைச் செய்தலும், வெறுக்கப்படுபவைகளைச் செய்யாதொழிதலும், அவருடைய மெய்யடியார்களைக் காணும் பொழுது கூசாது வணங்குதலும் பிறவுமாம்.

கடவுளால் விரும்பப்படுபவைகளாவன இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன கொலை, புலா

லுணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்.

ஆன்மாக்களாகிய நாம், பிறர்வயமுடையவர்களும், சிற்றறிவுசிறு தொழிலுடையவர்களுமாய் இருத்தலினாலே, நன்மை தீமைகளை உள்ளபடி அறியவும் தீமைகளை ஒழித்து நன்மைகளையே செய்யவும் வல்லேமல்லம். ஆதலால், தம்வயமுடையவரும் முற்றறிவு முற்றுத்தொழிலுடையவரும் ஆகிய கடவுளை வணங்கி, அவருடைய திருவருள்வசப்பட்டு ஒழுகுவோமானால், நாம் தீமைகளினின்று நீங்கி நன்மைகளைச் செய்து தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் நமக்கு அருள் செய்வார்.

[அமரர் ஆறுமுகநாவலரின் ''பாலபாடம்'' என்ற சமய நூலிலிருந்து இக்கட்டுரைப் பகுதி வெளியிடப்பட்டுள்ளது.]

## வாசகர் எண்ணங்கள்

திருக்கோயில் மார்ச்சு, ஏப்ரல் மற்றும் மே, ஜூன் இதழ்களைக் கண்ணுற்றேன். இதழ்களை வேகமாகக்கொண்டு வருவதோடு, சிறப்பாகவும் கொண்டு வரும் ஆசிரியருக்கு என் மனமார்ந்த பாராட்டுதல்கள். தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாச் சிறப்புரையில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ''அந்தணர் என்போர் அறவோர்'' என சிறந்த முறையில் விளக்கியிருப்பதைப் பல முறையும் படித்து படித்து மகிழ்ந்தேன்.

ஏ. சம்பத்,
சேலம்—636006

தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் அறநிலையத்துறை நிகழ்த்திய சேக்கிழார் விழாவை, நேரில் காணாத என்னைப்போன்ற எண்ணற்றோர் குறையைத் தீர்த்து வைத்தது திருக்கோயில் மார்ச் மற்றும் ஏப்ரல் இதழ். மிக்க நன்றி.

இரா. காந்தி,
கோயமுத்தூர்—2.

திருக்கோயில் மே-ஜூன் இதழைப் படித்தேன். பஞ்சபூதத் தலங்களின் சிறப்பை அமைச்சர் ஆர். எம். வீ. அவர்கள் எடுத்து விளக்கியிருப்பது அற்புதம். 'இருபது வயது பெண்ணுக்கு 25 வயது இளைஞரைத்திருமணம் முடிக்கிறோம்! அதிலிருந்தே 25 வயது ஆண் மகனின் அறிவாற்றலுக்கு நிகர் 20 வயது பெண்ணின் அறிவு என்று தானே நமது முன்னோர்கள் நினைத்திருக்கிறார்கள்' என்று பெண்களைப் பாராட்டிப் 'புதிய சிந்தனைகள்' படைத்திருக்கும் அமைச்சருக்குப் பெண்ணுலகம் நிச்சயம் நன்றி பாராட்டும்.

எம். இராஜேஸ்வரி,
சென்னை—5.

டாக்டர் சிலம்புச்செல்வர் அவர்களின் ''மானம் காத்த மகாகவி சேக்கிழார்'' கட்டுரை சாதிகளிடை சமத்துவமே பெரிய புராணத்தின் கருப்பொருள் ஆவதை மிக நன்றாக விளக்கிக் காட்டியது.

கே. இராசமணிக்கம்,
வேளச்சேரி.

''வாலிவத நியாயம்'' என்ற திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் கட்டுரை அற்புதமான விளக்கங்களைக்கொண்டு விளங்குகிறது. 'கிருட்டிணர் தூது' நயமாக உள்ளது. தொடர்ந்து இதிகாசக் கட்டுரைகளைத் திருக்கோயிலில் வெளியிட வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

சி. கந்தசாமி,
அறங்காவலர்,
சுப்பிரமணியசுவாமி
கோயில், சென்னை.

படங்களுடன் 'திருக்கோயில்' இதழ்கள் புதுப்பொலிவுடன் வெளிவர ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியாய் இருக்கிறது. டாக்டர் ஏ.என். பெருமாள் எழுதியிருந்த 'திருக்கோயில்கள் ஓர் ஆய்வு' சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை.

டி. ஆறுமுகம்,
காஞ்சிபுரம்.

எத்தனையோ சமய இதழ்கள் கடைகளில் வைத்து விற்கப்படும்போது, சிறந்த விஷயங்களுடன் வெளிவரும் 'திருக்கோயில்' இதழையும் கடைகளில் வைத்து விற்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்தால் என்ன? என்போன்ற வாசகர்கள் 'திருக்கோயில்' இதழைத் தவறாமல் வாங்கிப் படிப்பார்கள் என உறுதி கூறுகிறேன்.

இராமலிங்கம்,
பெங்களூர்—9.

# விவேகானந்தர்

**கவிஞர் மதிவண்ணன்**
சென்னை

அந்திவான முகிலிடையே ஆதவன்தான்
அழகுமுக மலரொளியைக் காட்டுதல்போல்
அந்திவானக் காவியுடைக் குள்ளிருந்தே
அறிவுமுக மலரொளியைக் காட்டிச்சென்ற
இந்துமதக் கதிரவனே விவேகா னந்தர்!
இலட்சியத்தின் நடைப்பயணம்! சிறந்த
உண்மைச்
சிந்தனையின் சந்திப்பு! நமது நாட்டின்
சரித்திரத்தில்தனித்திருக்கும் அவரின் வாழ்க்கை.

வெட்டவெளி கிழிக்கின்ற பார்வை! பெற்ற
மேன்மையினை வெளிக்காட்டும் முகத்தின்
தோற்றம்!
கட்டுடம்பு! சுற்றியவோர் காவி யாடை!
கல்திண்மை வாய்ந்தஇரு தோள்கள்! கையில்
நட்டபடி இருக்கின்ற செங்கோல்! உண்மை
நிகழ்த்துகின்ற சொற்பொழிவின் சொந்தக்
காரர்!
நிட்டையிலே ஒளியேறி நிற்கும் கண்கள்!
நிச்சயமாய் அவர் 'ஆண்மைக்கவிதை' என்பேன்.

தைப்பெற்ற பொங்கலிலே அவரைப்
பெற்றோர்
தவம்பெற்று பெற்றார்கள்! அன்னையாரே
கைப்பெற்ற பலன்பெற்றார்! அவரைக்கொஞ்சிக்
கண்ணுக்குள் மணிபோல வளர்த்து வந்தார்!
மைபெற்ற மேகத்தின் மழையைப் பெற்ற
மணிக்கதிரின் வயலைப்போல மகிழ லானார்.
நெய்பெற்ற சோறூட்டிக் கதைகள் சொல்லி
நிறையுடம்பை நெஞ்சத்தை வளர்த்து வந்தார்.

அரும்பான சிறுவயதில் விவேகானந்தர்
அலைத்துடிப்புக் கொண்டிருந்தார்! அங்கும்
இங்கும்
எறும்பைப்போல் சுறுசுறுப்பாய் இயங்கி
வந்தார்!
இளங்காற்றில் தளிரசைவைக் கண்டே உள்ளம்
விரும்பாதார் யாருமில்லை! அவரை விட்டே
விலகுகின்ற சிறுவரில்லை! கணுக்கள் இல்லாக்
கரும்பைப்போல் அவர்வளர்ந்தார்! இளமை
தொட்டே
கடவுளைக்காண அவர் ஆர்வம் கொண்டார்!

வீரத்தில் அவர் புலியாய் இருந்து வந்தார்!
விவேகத்தில் அவர் அன்னப் பறவை ஆனார்!
ஈரத்தில் தாய்ப்பசுவாய் ஆனார்! என்றும்
இலங்குநினை வாற்றலிலே யானை ஆனார்!
சாரமிகு கீதத்தில் குயிலாய் ஆனார்!
தத்துவத்தில் சகோரப்புள் போலே ஆனார்!
பாரத்தைத் தாங்குவதில் எருதாய் ஆனார்!
பணிந்தவரோ புகழாலே நிமிர்ந்து நின்றார்.

நாடகத்தில், இசைக்கலையில், மூங்கில் கம்பு
நடவுசெய்யும் சிலம்பத்தில், படிப்பில் தேர்ந்த
ஆடகப்பொன் இளைஞரவர் நெஞ்சைப்
பன்னாள்
அலைக்கழித்த இறையுண்டா? என்னும் கேள்வி
பூடகமாய்ப் பலர்பதிலைப் பெற்ற தன்றிப்
பொறுப்பான பதில்பெறவே இல்லை ஆக
நாடுவது யாரையென நரேந்திரர்தான்
நெருப்பினிடை மெழுகாக உருகிவந்தார்!

மழைத்துளியை எதிர்பார்க்கும் முத்துச் சிப்பி
வாயினிலே துளிவந்து வீழ்ந்தாற் போல
பிழைத்துளியும் இல்லாத ஞான தாகப்
பெற்றியினை பெற்றவராம் நரேந்தி ரர்தான்
இழைக்கின்ற நல் வினையால் இராம கிருஷ்ணர்
இடம்சென்றார்! 'இறையுண்டா' என்னும்
கேள்வி
தலைசாய்க்கவிட வில்லையந்த உண்மை ஞானி!
தான் பார்த்தேன்! உனக்கும்நான் காட்டு
கின்றேன்.

என்றுரைத்தார் அப்பெரியார்! புதுமைஎண்ணம்
இலங்குகின்ற நரேந்திரர்தான் மோன ஞான
குன்றுரைத்த அச்சொல்லைக் கேட்டே உள்ளம்
குளிர்ந்திட்டார்! வலக்கையை நெஞ்சில்
வைத்தே
ஒன்றுரைக்க முடியாத அருளின் உச்சி
உணர்த்திவிட்டார் மாமுனிவர்! அதுவரைகுடி
நின்றிருந்த சந்தேகம் எல்லாம் தீர்த்த
நிலைதன்னை தொட்டுவிட்டார் விவேகா
னந்தர்.

ஆசானின் பூத உடல் மறைந்த பின்போ
அருள்மொழியின் பொருள் இந்த அகலம்காட்ட
தேசசஞ் சாரத்தில் இறங்க லானார்
சீர்திருத்த எண்ணங்கள் சிறக்கும் ஞானி!
வாசமெனப் போகின்ற இடங்கள் எல்லாம்
வரலாறு படைத்திட்டார் விவேகா னந்தர்!
காசிக்கும் அயோத்திக்கும் இமய வெற்பின்
காட்சிக்கும் அவர்தனது கண்ணைத் தந்தார்!

அடர்ந்திருக்கும் காடுகளும், நிலத்தை நோக்கி
அப்படியே கவிழ்கின்ற அருவி நீரும்,
கொடிபோல பனி விளங்கும் மலைகள் சற்றே
கொட்டாவி விடுவது போல் குகையும், எங்கும்
படர்ந்திருக்கும் மலர்த்தருவும் அங்கே தங்கிப்
பாடுகின்ற பறவைகளும் கண்ட ஞானி
தொடர்ந்த நிலைதவமியற்றி மனம் ஒடுங்கி
சுடர்வழிகள் பெற்றுபயன் பெற்று வந்தார்.

பல இடங்கள் பல ஊர்கள் சென்றே சிந்தைப்
பக்குவத்தை அனுபவத்தைப் பாடம் கற்றார்!
அலைகடலைத் தாண்டியப்பால் விளங்கு கின்ற
அமெரிக்கா, இங்கிலாந்து, கொழும்பு போன்ற
உலகத்தின் பல பகுதி எல்லாம் வெல்லும்
உரைநிகழ்த்தி இந்துமதத் தத்து வத்தைப்
பலப்படவே நிறுவிவிட்டார் விவேகா னந்தர்!
பார்தனையே இந்துமதம் கொள்ள வைத்தார்!

பொங்குகின்ற புனிதநதி கங்கை யாற்றின்
புனலுண்டு வளர்ந்தவொரு தருவில் பூத்த
மங்காத ஒளிமலராம் விவேகா னந்தர்
மதத்திற்குத் தூதுவராய் அமெரிக்காவில்
சிங்கமென ச்சொற்பொழிவு நிகழ்த்தும் போதில்
சிலிர்க்காத உள்ளமில்லை அன்றோ அந்த
வெண்கலத்தின் ஓசைகேட்ட மக்கள் மூக்கில்
விழுந்தவிரல் எடுக்காமல் வியக்க லானார்.

கடல்கடந்த வெளிநாட்டில் இரவு நேரம்
கனகப் பொன் கட்டிலிலே அவர்தம் தூல
உடல்கிடந்த தேஅன்றி உள்ளம் எல்லாம்
உருகியது தாய்நாட்டின் ஏழ்மை எண்ணி!
'அடைவதென்றோ! தாய்நாடு மீண்டும் முன்னாள்
அருஞ்சிறப்பை' என்றேதான் நினைத்திருந்தார்
உடைமட்டும் தான்காவி! அவருடைய
உள்ளமெல்லாம் எந்நாளும் பளிங்குவெண்மை!

பாரதிபோல் முப்பத்தொன் பதாண்டே இந்தப்
பார்மீது வாழ்ந்திருந்த விவேகா னந்தர்
வீரங்கொள் மேனிவிட்டே அனைவர் உள்ள
விளக்கானார்! அவர்காண நினைத்தி ருந்த
பாரதத்தைக் காண்பதற்கே நமது வாழ்க்கைப்
பயணத்தைச் செலவிடுவோம் என்றே சொல்லி
நேரத்தின் அருமையினைக் கருதி என்றன்
நெஞ்சத்தின் அருவியினை நிறுத்து கின்றேன்!

## காரணீஸ்வரர் பெயர் விளக்கம்


''காரணீஸ்வரர்' என்னும் பெயரில் மகிமையும் தத்துவ ரீதியான பொருளும் உண்டு.

'காரணம்' என்பது அனைத்திற்கும் 'மூலமான வன்' என்பதைக் குறிக்கும். 'ஈஸ்வரன்' என்றால் தலைவன். அனைத்திற்கும் மூலமான தலைவனாக, இலிங்கத் திருவடிவில் சிவபெருமான் அருள்மிகு மயிலையில் கண்கொள்ளா அழகில் காட்சி அளிக்கிறான். இறைவனை அடியார்கள் சிறப்பாகக் ''காரணன்'' என்று பாடி மகிழ்கிறார்கள்.

''தக்கோர்க்கெல்லாம் காரணம் காண்'' என்று திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் குறிப்பிடுகிறது. ''ஆழியிடைத் துயிலும் காரண'' என்று பாரதம் திருமாலை அழைக்கிறது.

எல்லா உலகங்களையும் தானே படைத்து அழித்து மறைத்து அருள வல்லவன் சிவப் பரஞ்சுடரேயாகும். எம்பெருமானைக் 'காரணீசன்' என்று அழைப்பது மிகவும் பொருத்தமே.

—சி. சுரேஷ்குமார்



மயிலை பொற்கொடி சமேத
ஸ்ரீ காரணீஸ்வரர் மகா பிரதோஷ
← ரிஷப வாகனக் காட்சி

# கிருட்டிணன் தூதுச் சருக்கம்

டாக்டர் த. அமிர்தலிங்கம்

(முன் தொடர்ச்சி)

இரண்டுநாள் தேர்ப் பிரயாணத்திற்குப் பிறகு உபப்பிலாவியத்திலிருந்து தர்மரின் தூதுவராய்ப் புறப்பட்ட கண்ணபெருமான் தம் பரிவாரங்களுடன் அத்தினாபுரத்து எல்லையில் அமைந்திருந்த ஒரு அழகிய பூஞ்சோலைக்கு வந்து சேர்கிறார். உம்பர் நாயகனின் வர வினைக்கண்டு தும்பிகள் பாடுகின்றன. மயில்கள் ஆடுகின்றன. அவ்வழகிய இயற்கைக்காட்சி யில் கண்ணபெருமான் மனம் மகிழ்ந்திருந்த வேளையில், அவருடைய வரவினை தூதர்கள் போய் துரியோதனனுக்கு அறிவிக்க, துரியோத னன் நகரத்தை அலங்கரிக்குமாறு ஆணையிட, மக்களும் அவ்வாறே தொல்லைநாயகன் வந்த னன் என்று மனமகிழ்ந்து நகரை அலங்கரிக் கின்றார்கள். மேகங்களின் பெரிய முழக்கம் போல, இசைக்கருவிகள் பல ஒலிக்க, துரி யோதனன் தானே சென்று கண்ணனை எதிர் கொண்டு வரவேற்கப் புறப்படுகிறான். ஆனால் அங்கே தான் விதி துரியோதனனுக்கு எதிராக வும், கண்ணபெருமானுக்கு ஆதரவாகவும்சகுனி யின் வடிவிலே வேலை செய்ய ஆரம்பிக்கிறது. ''நீ எதற்காக அவனைப்போய் எதிர்கொண்டு அழைக்க வேண்டும்; அவ்வளவு பெரியவனா கண்ணன்?'' என்று சகுனி, துரியோதனனைத் தடுத்துவிட, அவனும் கண்ணபெருமானை எதிர்கொண்டு வரவேற்கச் செல்லவில்லை. கங்கையின் மைந்தர் ஆகிய வீடுமரும், துரோண ரும், வில்வித்தையில் வல்லவராகிய விதுரரும் அசுவத்தாமனும், கிருபனும் முதலான அறுபது இலட்சம் அரசர்களும் இரண்டு யோசனை தூரம் நடந்துபோய் கண்ணபெருமானை எதிர் கொண்டு வரவேற்கிறார்கள்.

தம்மை எதிர்கொண்டு வரவேற்ற மன்னர் களையெல்லாம் அருள்பொங்கப் பார்த்து, வர வேற்பினை ஏற்றுக்கொண்ட கண்ணபெருமான் அத்தினாபுரிக்குள் அடியெடுத்து வைக்கிறார். ஆனால் மன்னன் துரியோதனனின் அரண் மனைக்குச் செல்லாமல், அறிவிலே சிறந்த விதுரர் வாழ்கின்ற மனைக்கு அவருடைய விருந்தாளியாக அவரும் எதிர்பாராமலே கண்ண பெருமான் சென்றார் என்றால் அதற்குக் கார ணம் இல்லாமலா இருக்கும்? கண்ணன் தூது தருமரின் விருப்பப்படி சமாதானத்தால் நாடு பெறுவதற்காக அல்ல. கண்ணனின் எண்ணப் படி யாவரையும் நீறாக்கிப் பூபாரத்தைத் தீர்க்கும் பொருட்டுத்தான். பாஞ்சாலியின் அவிழ்ந்த கூந்தலை அழகுபடுத்தி முடிந்து வைப்பதற்குத்தான் என்று முன் இதழில் குறிப்பிடப்பட்டது அல்லவா! அதன் பொருட்டே, அத்தினாபுரி நுழைந்த கண்ண பெருமான் துரியோதனனின் அரண்மனைக்கு நேரே செல்லாமல், விதுரர் மனைக்கு சென் றார் என்பதை இன்னும் சற்று நேரத்தில் நீங் களும் தெரிந்து கொள்ளலாம்.

கண்ணபெருமான் தம் மனைக்கு விருந் தாக வந்ததனால் விதுரர் கொண்ட மன மகிழ்விற்கு அளவே இல்லை. கண்ணபெரு மானின் திருவடி மலர்களைப் பலமுறையும் தம் தலைகளால் சூடிக்கொண்ட விதுரர் ஆனந்த மிகுதியால் துள்ளிக்குதித்ததோடு, 'கண்களால் கண்ணனைக் கண்ட யான் பிறப்பினைத் தொலைத்தேன், வீடுபேறும்கொண்டேன். இனி பெறத்தக்கதாம் பேறு ஒன்றும் இல்லை' என்ப தாகப் பெருமிதமும் கொண்டு

முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ?
பன்னகாதிபப் பாயலோ? பச்சையாலிலையோ?
சொன்ன நால்வகைச் சுருதியோ?
கருதிநீயெய்துதற்கு
என்னமாதவஞ் செய்ததிச் சிறுகுடில்?

(கிருட்டிணன் தூது 80)

என்று வியந்து வினவிப் போற்றுகிறார். இது வரை வெறும் குடிசையாக இருந்த தம்மனை, கண்ணபெருமான் எழுந்தருளப் பெற்றதால் திருப்பாற்கடல் போலவும், ஆதிசேஷனாகிய திருப்பள்ளி மெத்தை போலவும், ஊழிக்காலத் தில் உலகம் அழியும்போது திருமால் குழந்தை வடிவில் துயில் கொள்ளும் பச்சை ஆலிலை போலவும், நால்வகை வேதம் போலவும் பெருமை பெற்று விளங்குவதை எடுத்துக்கூறி மகிழ்ந்த விதுரர், தேவாமிர்தம் போன்ற அறுசுவை விருந்தை அண்டர்நாயகனுக்கு ஆக்கிப் படைத்து மகிழ்கின்றார். பயணக் களைப்புடன் பசிக்களைப்பும் நீங்கப் பெற்ற பரந்தாமனாகிய கண்ணபெருமான் இரத்தின சிங்காதனத்தில் அமர்ந்திருக்க, புண்ணிய விதுரர் அவரைப்போற்றி, அத்தினாபுரிக்கு

எழுந்தருளிய காரணத்தை எடுத்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார். பஞ்ச பாண்டவர்களுக்காக நாடுகேட்டுத்தாம் தூது வந்ததாகக் கண்ணபெருமானும் காரணத்தை தெரிவிக்க துரியோதனனின் துர்க்குணத்தை அறிந்திருந்தவராகிய விதுரர் 'நிமலரே'! நீதி நீர் எடுத்துரைத்தபோதும் கொடியன் நாடுவழங்கான்! போர் செய்து வாட்டினால் அன்றி துரியோதனனுக்கு அறிவு வராது'' என்று கண்ண பிரானிடம் கூறுகிறார். போர் நடப்பது உறுதி என்பதை தெளிவுபட தெரிந்திருப்பவராகிய கண்ணபெருமானும், ''துரியோதனின் வாய் வழியாக மூளை வெளியே வரும் வண்ணம் நடக்கத்தான் போகிறது வெம்போர்'' என்று கூறுகிறார். பின் விதுரர்க்கு விடை கொடுத்து மலர்ப்படுக்கையின் மீது, நாளை நடப்பதையும் முன்னமே அறிந்தவராய் மாயக்கண்ணன் அமைதியாக உறங்கலாயினார்.

மறுநாள் காலை கண்ணபெருமான் துரியோதனன் அவையை நோக்கிப் புறப்பட்டார். அதே நேரத்தில் தம் அரசவைக்கு வரும் கண்ண பெருமானை அவமதிக்கவேண்டும் என சகுனியுடன் ஆலோசனை செய்து கொண்டிருந்தான் துரியோதனன். தமக்கு அடங்கிய சிற்றரசர்களை எல்லாம் ஆணவத்துடன் துரியோதனன் நோக்கி ''பாண்டவர்களின் தூதுவனாக வரும் இடையன், நம் அரசவைக்குள் நுழையும்போது எவரும் எதிர்கொண்டோ அல்லது எழுந்து நின்றோ மரியாதை தரக்கூடாது. மீறிச் செய்வீர்களேயானால் உங்கள் ஊர்களை எல்லாம் தீயிட்டுக் கொளுத்தி விடுவேன் என்று அதிகார மமதையில் ஆணை பிறப்பிக்கலானான். விதிவலியாற் கெடுமதிக்கண் நல்லது தோன்றாதல்லவா? ஆகவேதான் துரியோதனனுக்குக் கெட்ட நினைவே தோன்றுகின்றது. 'இடையன்' என இறைவனையே பழித்துக் கூறிப் பாதகஞ்செய்யவும் முற்பட்டுவிடுகிறான் அவன். ஆனால் அவன் பிறப்பித்த ஆணை நீர்மேல் எழுத்தாய் நொடி நேரத்தில் மறைந்து போனதை அவனே கண்டு மனம் புழுங்க நேரிடுகிறது! ஆம்! கண்ணபெருமான் அரசவையில் கால் எடுத்து வைத்தவுடன், வீடுமர், துரோணர், விதுரர் மற்றும் அவ்வவையில் இருந்த அரசர்கள் எல்லோருமே எதிர்சென்று வணங்கி கண்ணனை வரவேற்கலாயினர். துரியோதனனும், சகுனியும், செஞ்சோற்றுக்கடனுக்காய் நெறி மறந்த கர்ணனும் ஆகிய மூவர் மட்டுமே கண்ணனை வணங்காதவர்கள்.

கண்ணபெருமான் தமக்குரிய ஆசனத்தில் போய் அமர்ந்து கொள்கிறார். அவரைத் துரியோதனன் வினவும் முதல்வினாவே இது தான். ''நேற்றே அத்தினாபுரிக்கு வந்துவிட்ட நீ, எதற்காக என் மனைக்கு வராமல், விதுரன் மனையில் தங்கினாய்?'' இந்தக் கேள்வியைத் துரியோதனன் கேட்கவேண்டும் என்பதற்காகத்தானே திட்டமிட்டுக் கண்ணபெருமான் விதுரர் மனைக்குப் போய் தங்கினார். அவருக்குத் துரியோதனன் கேட்ட கேள்வி மிகுந்த மகிழ்ச்சியையே அளித்தது. இருந்தாலும், தாம் விதுரர் மனையில் தங்கியதற்குக் காரணம் எதுவும் இல்லை என்பதைப் போல, 'எனக்கு எல்லா மனைகளுமே ஒன்று போலத் தான். அத்தினாபுரியில் இருக்கும் இந்த உன் மனை, என் மனை. துவாரகையில் இருக்கும் என் மனை, உன் மனை. எனக்கு எந்த பேதமும் இல்லை. விதுரர் மனையையும், என் மனைபோல் எண்ணித் தங்கினேன். மேலும் விதுரர் என்னை எதிர்கொண்டு வந்து வரவேற்ற பெருந்தன்மையை மதித்தும், விதுரர் மனையில் தங்கினேன். இவை மட்டுமல்ல, நானோ பாண்டவர்களின் பொருட்டு வந்த தூதுவன். அவர்களுக்குத் தூதுவனாக வந்து விட்டு, உன் வீட்டில் தங்கி உன் உபசாரத்தை ஏற்றுக்கொண்டுவிட்டால், அவர்களின் பொருட்டு நீதியை உன்னிடத்தில் எப்படி எடுத்துரைக்க முடியும்? அதனை எண்ணியும்தான் நான் விதுரர் மனையில் தங்கினேன்'' என்று விளக்கம் கொடுத்த கண்ணபெருமான், நரகத்தில் வாடுதற்கு உரியவர் எவர் எவர் என்பதையும் அப்பொழுது எடுத்துக் கூறினார். அந்தப் பாடல்:

''அரவமல்கிய பதாகையாய்! மதியமைச்சராய்!
அரசழிப்பினும்
குரவர் நல்லுரை மறுக்கினும் பிறர்புரிந்த
நன்றியது கொல்லினும்
ஒருவர்வாழ் மனையிலுண்டு பின்னுமவருடன்
உழன்றுபொர உன்னினும்
இரவியுள்ளளவும் மதியமுள்ளளவும் இவர்களே
நரகில் எய்துவார்

(கிருட்டிணன் தூது., 109)

''மந்திரிகளாக இருந்து அரசாட்சியைக் கெடுப்பவர், பெரியோர்களின் நல்ல உபதேச மொழிகளைக் கேளாதவர், செய்த நன்றி மறந்தவர், உண்ட வீட்டிற்கே இரண்டகம் நினைப்பவர்—இந்த நான்குக் கொடியவர்களே நரகத்தில் உழல்பவர்கள்; இல்லையா துரியோதனா? அப்படியிருக்க உன் வீட்டிலே உண்டு உனக்குத் துரோகம் செய்யலாமா? என்று துரியோதனனுக்கு கண்ணபெருமான் எடுத்துரைத்தார். பெரியவர்களின் உபதேசங்களைக் கேளாதவனாகிய துரியோதனன் நரகமே அடைவான் என்பதையும் குறிப்பாக அவர் உணர்த்தியது மட்டும் அல்ல. உன் சிறிய தந்தையாயினும் விதுரர் நீதிமானாய் நினக்கு மாறுபட்டவராய் விளங்கும் காரணம் பற்றியே அவருடைய வீட்டிலே நான் தங்கினேன் என்பதையும் சொல்லாமலே சொல்லிவிடும் கண்ண பெருமானின் சொற்சாதுரியத்தையும் தான் மேற்கண்ட பாடலில் காணுகின்றோம்.

நரகத்திலே நிச்சயம் இடம் பெறப் போகின்றவனாகிய துரியோதனனுக்கு 'நரகிற்குரியார் யார்?' என்ற கண்ணபெருமானின் உபதேச விளக்கம் இனிக்கவா செய்யும்? இனிக்கவில்லை. அவன் முகம் சுளித்துக் கொண்டவனாகி ''சரி சரி வந்த விசயத்தைச் சொல்'' என வெடுப்பாகக் கூறக் கண்ணபெருமானும்,

''சூதினால் அரசிழந்து நின் துணைவர்
சொன்னசொல்லும் வழுவாதுபோய்
ஏதிலார்களென நொந்து
தண்ணிழலல்லாத கானிடை யெய்தியும்
தீதிலாவகை குறித்தநாள்பல
கழித்துவந்தனர் செகத்தினிற்
கோதிலாத குருகுலமகிப! அவர்
உரிமை நண்பொடு கொடுத்தியே''

(கிருட்டிணன் தூது. 111)

என்று கூறினார்.

''பாண்டவர்க்கு உரிமை உடையநாட்டை நட்பொடு கொடுப்பாயாக. கொடுத்தால் உலகோர் உன்னைப் போற்றுவர். இல்லையேல் பழிப்பர்'' என அறிவுறுத்தினார் கண்ண பெருமான். முன்னம் பேசியது நரகம் பற்றிய பேச்சு. இப்பொழுது பேசுவது நகரம் பற்றியதும் நாடு பற்றியதுமான பேச்சு. துரியோதனுக்கோ எரிச்சல்மேல் எரிச்சல். எதிர் அமர்ந்திருக்கும் கண்ணன்மேல் வெறுப்பின்மேல் வெறுப்பு.

''யார் பழித்தாலும் என்ன? யார் திகைத்தாலும் என்ன? சூதாட்டத்தினாலே அன்று நாடு நகரங்களைப் பாண்டவர்கள் இழந்தது இழந்ததுதான். மீளக்கொடுக்க எனக்கேதும் அறிவு மழுங்கிவிடவில்லை. நான் வாக்குறுதி அன்று கொடுத்திருப்பேனேயானாலும், இன்றைக்கு அதைக் காப்பாற்ற வேண்டுமென்று என்னை யாரும் கட்டாயப்படுத்த முடியாது. பாண்டவர்கள் மீண்டும் காட்டிற்கே போக வேண்டியதுதான்! வேண்டுமானால் என்னுடன் போர் செய்து வலுவிருந்தால் நாட்டை மீட்டுக்கொள்ளட்டும். ஒரு ஈ அமரும் இடம் கூட அவர்களுக்கு நான் கொடுக்க மாட்டேன்'' என்பதாகத் துரியோதனன் சினந்து கண்ண பெருமானை நோக்கிக் கூறினான். அவ்வாறு அவன் கூறியதைக் காட்டும் பாடல் பின்வருமாறு:

''நீ வெறுக்கிலென்? இருந்தமன்னவர்
திகைக்கிலென்? பல நினைக்கிலென்?
போய்நகைக்கிலென்? உரைத்தவுண்மைமொழி
பொய்த்ததென்று அமரர்புகலிலென்?
வேய்மலர்த்தொடையல் ஐவர் என்னுடன்
மிகைத்து வெஞ்சமர் விளைக்கிலென்?
ஈயிருக்கும் இடமெனினும் இப்புவியில்
யானவர்க்கு அரசினிக்கொடேன்''

(கிருட்டிணன் தூது. 114)

துரியோதனன் இப்படித்தான் சொல்வான் என்பது கண்ணபெருமானுக்கு தெரிந்திருந்த உண்மைதான். ஆனால் தூதுவனாய் நடிக்க வந்த வேடத்தில் நல்லபடி முழுதும் நடித்துவிட வேண்டும் அல்லவா! ஆகவே துரியோதனனை வேண்டுகிறார் ''பாண்டவர்களிடம் சூதினால் கவர்ந்து கொண்ட நாட்டின் உரிமையை முழுமையாகத் தர மனம் இல்லாவிட்டாலும் பாதியாவது வழங்கு; பாதி வழங்க உனக்கு மனம் இல்லையா? பரவாயில்லை. ஐந்து ஊர்களையாவது வழங்கு'' என்று துரியோதனனிடம் கெஞ்சி இரக்கின்றாராம். யார் அவர்? எத்தனைச் சிறப்புக்கொண்டவர்? இந்த உலகங்கள் அனைத்தையும் உலக உயிர்கள் எல்லாவற்றையும் படைத்தருளும் உந்தியை உடையவராகிய கண்ணபெருமான்.

அதற்குத் துரியோதனன் என்ன பதில் சொல்கிறான்?

''காட்டிலே நேற்றுவரை அலைந்து திரிந்து கொண்டிருந்தவர்களுக்கு ஊர் கொடுத்தால் வேண்டாம் என்றா மறுக்கப் போகிறார்கள்! ஊர் நான் தர முடியாது என்று மறுத்து, வீட்டைத் தருவேனேயானால், அந்த வீட்டையும் அவர்கள் என்ன மறுக்கவா போகிறார்கள்? அவர்கள் எது கொடுத்தாலும் ஏற்பார்கள். ஆனால் நானோ எதையுமே கொடுக்க மாட்டேன். போகட்டும் அவர்கள். மீண்டும் வனத்திற்கே'' என்று இறுமாப்புடன் துரியோதனன் பேச கண்ணபெருமான் ஆணவத்தின் உச்சிக்கே போய்விட்ட அவனுக்குத் தம் அருள்மனம் மாறாது அறிவுரை கூறுகிறார். அந்தப் பாடல் வீடுமரின் பெருமை கூறும் வீறுமிக்கபாடல்:

''தந்தைகாதலுறு தன்மைகண்டிளைய
தாய்பயந்த இரு தம்பியர்க்கு
இந்தவாழ்வும் அரசும் கொடுத்தவனும்
நின்குலத்தொருவன் இங்குளான்
முந்தமா நிலமனைத்தினுக்கும் உயர்
முறைமையால் உரிய அரசருக்கு
ஐந்துமாநகரும் நீ கொடாதொழியின்
என்னதாகும் உனதரசியல்''

(கிருட்டிணன் தூது 117)

பாண்டவர்க்கும், துரியோதனனாதியர்க்கும் பாட்டனார் ஆகிய வீடுமர், சந்தனுமா மன்னனுக்கும், கங்கைக்குப் பிறந்த குருகுலச் சான்றோர். கங்கை மறைந்தவுடன் சந்தனுமா மன்னன் செம்படவர் குலத்தில் தோன்றிய பரிமளகந்தி எனும் பாவையைக் கண்டு மனம் பறிகொடுத்தார். பரிமளகந்தியின் தந்தையோ பரிமளகந்தியின் வயிற்றில் பிறக்கும் மக்களுக்கே அரச உரிமை தருவதாக உறுதி கூறினால் தான் பரிமளகந்தியை மணம் முடித்துத் தருவேன் என்றான். கங்கையின் மைந்தனாகிய தேவ விரதனுக்குத் துரோகம் இழைக்க விரும்பாத சந்தனு, அத்தகைய உறுதிமொழியைத் தரத் துணியவில்லை. நடந்ததெல்லாம் அறிந்துகொண்ட தேவவிரதன் ''நான் இப்பிறவியில் திருமணமே செய்து கொள்ளமாட்டேன். அரசுரிமையை என் சிற்றன்னையின் மக்களுக்கே உரிமை ஆக்குவேன். இது உறுதி'' என யாவரும் அஞ்சத்தக்க விரதம் பூண்ட காரணத்தினாலே ''பயங்கரமான விரதம் உடையவன்'' என்ற பொருள் படும் 'வீடுமன்' என்ற காரணப் பெயரையும் கொண்டு தமக்குரிய அரசைத் தியாகம் செய்த தியாகசீலராய் வாழ்ந்துகொண்டிருக்கிறார். இத்தகைய அவருடைய தியாகத்தை அவையறிய எடுத்துக் கூறிப் பாராட்டும் கண்ணபெருமான் 'அப்படிப்பட்ட உத்தமரும் இங்கிருக்க, உரிமையுடைய அரசை உரியவர்க்குத்தர மறுக்கும் நீயும் இருக்கிறாயே! என்னே உன் நீதி!'' என்று இடித்துக் கூற, துரியோதனன் மேலும் கோபத்தில் கண்

களில் நெருப்புப் பொறி பறக்க ''நாடு, வீரர்களின் உரிமை. வீரமிருந்தால் பாண்டவர்கள் போர்செய்து பெற்றுக் கொள்ளட்டும்'' என்று கடுமையாகக் கூறுகிறான். முன்பு இதே துரியோதனன் ''பன்னிரண்டு ஆண்டு வன வாழ்வும், ஓராண்டுக் காலக்கரந்துரை வாழ்வும் முடித்து வந்தால் நாட்டை மீள நல்குகிறேன்'' என உறுதி கூறியவன் தான். இப்பொழுதோ ''போர் செய்து பெற்றுக்கொள்ளட்டும்'' என்கிறான். பின்னால் இந்த மொழியும் பொய்யாகப் போருக்கும் வரமாட்டேன் என்று விட்டால் என்ன செய்வது?'' என்று எண்ணியவராகக் கண்ணபெருமான்; ''சரி அவர்கள் போர் செய்தே அவர்களுக்கு உரிமை உடைய நாட்டைப் பெற்றுக் கொள்வார்கள். அவர்களுடன் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் போர்நிகழ்த்த நிச்சயம் இசைகிறேன் எனக் கையிலடித்துச் சத்தியம் செய்'' என்று துரியோதனனிடம் கேட்டுத்தம் கையை நீட்டினார். துரியோதனனோ கண்ணனின் கைமேல் கையடித்துச் சத்தியம்செய்துதராமல்,எதிர்இருந்த தூணைக் கோபத்துடன் கையினால் அறைந்தவனாய் கடும் வார்த்தைகளால் கண்ணனை வைய லானான்.

''இடையர்களோடு காட்டிலே மாட்டு மந்தைகளை மேய்த்துத் திரிந்தவனாகிய நீயா அரசர்களுக்கு அரசனாகிய என்னைக் கையடித்துச்சத்தியம் செய்து தரச்சொல்லுகிறாய்? அன்றைக்குப் பாஞ்சாலியைத் துகில் உரிந்து அவமானப்படுத்தியபோது, ஒன்றும் செய்யமுடியாமல் பக்கத்தில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாண்டவர்களுக்கு மானம் வேறு இருக்கிறதா? வனங்களிலே விலங்குகளைப் போல வாழ்ந்து அலைந்து, எடுபிடி வேலை செய்து பிறர் இட்ட சோற்றையும் உண்டு உயிர் தாங்கிய அவர்கள், சிங்கமாகிய என்னை எதிர்த்துப் பொருது போரில் வெற்றி கொள்ளப் போகிறார்களா? நான் அதற்குக் கையிலடித்துச் சத்தியம் செய்து தரவேண்டுமா? பாண்டவர்களா எனக்குச் சரி நிகரானவர்கள்? அவர்களுக்குத் தாயார் இருவர், தந்தைமார் ஐவர். தாரமோ ஒருத்தி. அப்படிப்பட்டவர்கள் எனக்கு ஈடு! நான் கையிலடித்து சத்தியம் செய்து தரவேண்டும்!'' என்று துரியோதனன் கடுமையான மொழிகளால் பாண்டவர்களையும், பாண்டவர்களின் தூதுவனையும் பழித்து பேசிக்கொண்டே சென்றபோது, கண்ணபெருமான் எதிர் ஒன்றும் பேசவில்லை. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். தாம் கருதிய போர் இனி நலமாக முடியும் என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். தாம் இனியும் அங்கிருக்கத் தேவையில்லை என்பதாக எழுந்து, விதுரர் வீட்டிற்கே திரும்பிவிட்டார். 'சீல மற்றவர் சினந்தபோது ஒரு தீதிலாதவர் செயிர்ப்பரோ?'' என வில்லிப்புத்தூராழ்வார், கண்ணனின் கனிவுக்கு நியாயம் கற்பிப்பதைக் காண்கிறோம்.

கண்ணபெருமான் அவையைவிட்டு வெளியேறியதும், துரியோதனனின் கோபம் கண்ணபெருமானைத் தம் வீட்டில்தங்க வைத்து உபசரித்த விதுரர் மேல் திரும்புகிறது.

''கண்ணனுக்கு ஏன் நீ விருந்து வைத்தாய்? என் இராச்சியத்தைப் பாண்டவர்கள்பறித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் தானே! என் உப்பைத் தின்றுவிட்டு எனக்கே துரோகம் புரிகிறாயே!'' என்று அவையில் பல மன்னர்கள் முன்னர் விதுரரைச் சாடும் துரியோதனன், அவருடைய பிறப்பையும் இழித்துக் கூறி

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

''முதல்விழைந் தொருவனுடன் இயைந்த
பொருள் பற்றி இன்புற முயங்கினும்
அதிகமென்றபொருள் ஒருவன்வேறுதரின்
அவனையே ஒழிய அறிவரோ?
பொதுமடந்தையர் தமக்கு மண்ணிலிது
புதுமையல்ல அவர் புதல்வனாம்
விதுரன் இன்றவனொடு உறவு கொண்டதோர்
வியப்பை யென்சொலி வெறுப்பதே''

(கிருட்டிணன் தூது. 168)

எனப்பேசுவதைக் காண்கின்றோம். பொது மடந்தையின் வயிற்றில் பிறந்ததனால் விதுரர்க்குப் பொதுமடந்தையின் புத்தியே இருப்பதாக தகாதவார்த்தைகளால் துரியோதனன் பேசி ஏச, தாங்கமுடியாத கோபத்தில் எழுகிறார் விதுரர். ''என் பிறப்பைப் பழித்த உன் வாயை வாள்கொண்டு அறுத்து, உன் தலையையும் கொய்துவிடுவேன். ஆனால் குருகுலத்தில் மகனையே ஒரு தந்தை கொன்றுவிட்டான் என்று வையத்தவரும் வானத்தவரும் பழிப்பார்களே என்பதனால் அவ்வாறு செய்யாமல் விடுகிறேன். பாண்டவர்க்கு தூதாக வந்த கண்ணபெருமானுக்கு விருந்திட்டேன் என்பதனால் என்னைப் பழிகூறுகிறாயே! நேர்மையில் சிறந்தவர்களாகிய பாண்டவர்களுக்கே நான் துணையும் ஆவேனேயானால் என்னை யார் பழித்துக்கூற முடியும்'' என்று அவனையே திருப்பிக்கேட்ட விதுரர், பாண்டவர்க்குத் தாம் துணையாயினும் பார்பழிக்காது என்பதை அறிந்திருந்தும், துரியோதனனின் உப்பை உண்ட அந்த செஞ்சோற்றுக் கடனால் அவ்வாறு செய்ய எண்ணாது, தம்முடைய மிகச் சிறந்த வில்லாற்றல் கொடியவன் துரியோதனனுக்கு இனிப் பயன்படாமல் போகட்டும் என்பதாக முடிவுசெய்து,

''சொல்விரண்டு புகலேன் இனிச் சமரில் நின்று
வெங்கணை தொடேன்''

(கிருட்டிணன் தூது 131)

என்பதாகக் கூறித் தம் கையில் இருந்த திருமாலின் வில்லைவெட்டிக்கீழே எறிந்துவிட்டு அவைக்களத்தை விட்டுவேகமாகச் சென்று விடுகிறார்.

விதுரர் முறித்த விஷ்ணு வில்லின் சிறப்பென்ன? அவ்வில்லை முறிப்பதற்குக் கண்ணபெருமான் ஆடிய நாடகத்தின் சிறப்பென்ன? தூதராக வந்த கண்ணபெருமான் மேலும் மேலும் ஆற்றப்போகும் மாயா விநோதங்கள் என்னென்ன? என்பனவற்றையெல்லாம் அடுத்த இதழில் காண்போம்.

# இலக்கியங்களில் காவேரி

டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ.,பி.எச்.டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ.வ.அ. கல்லூரி, மயிலாடுதுறை

## வடமொழி நூல்களில்

அழியாத பொன்னியின் பெருமையை வேதத்திலேயே காணலாம். இருக்கு வேதம் 1-179-1; 1-179-3: 1-179-4; ஆகிய இடங்களில் அகத்தியரும் உலோபாமுத்திரையும் பேசும் உரையாடற்பகுதி காவிரியின் பெருமையை எடுத்துரைக்கின்றது. அகத்திய முனிவர் உலோபாமுத்திரையை நோக்கி உரைக்கின்றார்; ''ஏ தேவி! நீ என்னுடைய கருணையால் எவ்வுயிர்களுக்கும் அறிந்தோ அறியாமலோ ஏற்பட்ட பழம் பிறப்புகளில் உண்டாகிய வினைத்துன்பங்களை எளிதிற் போக்குவாயாக. மேலும், தாய், பசியினால் வருந்தும் குழவிக்குப் பால் கொடுத்து அதனை இன்புறுத்துவது போன்று ஆற்று வடிவாக நின்று தென் இந்தியப் பகுதியினை இன்பூட்டி நிற்பாயாக''

உலோபாமுத்திரை கவேர முனிவரின் பெண்ணாகப் பிரம்மனாற் கொடுத்தருளப் பட்டுப் பின்னர்ப் பொன்னியாறாகப் பெருக்கெடுத்தாள் என்பது இவ்வேதத்தாலறியப்படும்.

பாகவதத்தில் பத்தாவது பிரிவாக வரும் பலதேவர் தீர்த்த யாத்திரைப் பகுதியில், காஞ்சியையும், காவிரித்தீர்த்தத்தையும், திருவரங்கனின் திருக்காட்சியையும் கூறுகின்ற மாட்சியைக் காணலாம். பதினோராவது பிரிவில், ஐந்தாம் படலத்தில், கலியுகத்தில் காவிரிநீரை எவர் குடிக்கின்றனரோ, அவர் தூய சிந்தை கூடியவராகி வாசுதேவனிடத்தில் அன்புள்ளவர்களாகி விடுவர்'' எனக் கூறப்பட்ட செய்தி மறக்கவியலா மாண்பினது.

பாகவதத்தை ஒட்டி, மலையாள மொழியில் புகழ்பெற்ற நாராயணபட்டதிரி என்பார் தமது நாராயணீயம் என்ற நூலில் (92-7) தென்னிந்தியப் பகுதியையும், பொன்னியாற்றின் பெருக்கையும் புகழ்ந்துரைக்கின்றார்; அது மட்டுமின்றி, அங்குள்ள மக்களின் இறையன்புப் பெருக்குத்தன்மையும் ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டுகின்றார் அவ்வருளாளர்.

''கலியுகத்தில் மெய்யடியார் பலரிருப்பர்; அதிலும் திராவிடத் திருநாட்டில் மிகப்பலர் இருப்பர். மிக்க புண்ணியச் சிறப்புடைய பொன்னிக்கரையிலும், தாமிரபரணிக்கரையிலும், வைகையாற்றுக்கரையிலும், மேலைத்திக்கை நோக்கி ஓடுகின்ற ஆற்றுக்கரையிலும் மிகப்பலர் இருப்பர். என் இறைவ! இப்பகுதிகளிற் பிறந்து நின்னிடத்தில் சிறிய அளவு அன்பு உடையவனாகிய என்னை அவா என்னும் கயிற்றால் இறுகக்கட்டிச் சுழற்றவிடாது காத்தருள்க. நின்னிடம் எனக்குள்ள அன்பை நிறைவு செய்தருள்க'' என்பது அவ்வருளாளர் வரம் வேண்டும் பகுதியின் பொருள் உரையாகும்.

வான்மீகி இராமாயணத்தில், கிட்கிந்தா காண்டம் 41ஆவது சருக்கத்தில், சுக்கிரீவன் அனுமனிடத்தில் கூறும் பகுதியில், ''தெய்வப் பிறவியானவளும், மங்கலமான புனிதநீருடன் கூடியவளுமான காவிரி தெய்வப்பெண்டிரால் சூழப்பட்டுத் தெள்ளிய நீருடன் செல்கின்றாள்'' எனவரும் கருத்துடைய செய்யுட்பகுதி உளது. இது பொன்னியைத் தெய்வப் பாவையாகக் கவின்பெற உருவகம் செய்து உரைப்பதாதல் நோக்கி இன்புறத்தக்கது.

''மற்ற ஆறுகள் தம்மில், மூழ்கும் மக்களின் பாவங்களையும் பழிகளையும் கழித்துச் செல்கின்றன. அந்தப் பாவக்குவியல்களைப் போக்கித் தம்மைத் தூய்மைப்படுத்திக்கொள்ளக் காவிரியாற்றில் துலாமாதத்தில் அவை கலந்து ஒன்றாகி நீராடுகின்றன.''

''எவன் காவிரிப்பேராற்றில் எவ்விடத்திலாவது முழ்கிச் சிவபிரானை உள்ளத்தே வைத்து வழிபடுகின்றானோ அவனது வினைகள் அவனைவிட்டு விலகி விடுகின்றன. உலகப் பற்று அவனை விட்டு நீங்குகின்றது. அவன் இறைவனைக் காண்கின்றான்'' என்று வடமொழிப் புராணங்கள் வகுத்துரைக்கின்றன. பிரும்மபுராணம், எட்டாவது படலத்தில், ''காவிரி முதலில் இரு கிளைகளாகவும் பின்னர் மூன்று நான்கு கிளைகளாகவும் பிரிந்து உலகம் உய்யப்பெருக்கெடுக்கின்றாள். எவன் திங்கள்தோறும் நிறைமதிநாளில் காவிரியில் நீராடுகின்றானோ அவன் அனைத்துப்பாவங்களினின்றும் விடுபட்டு முக்தி பெறுகின்றான்'' எனக் கூறும் பகுதி உள்ளது.

''கங்கைநீர் நோயைப்போக்கும்; ஆனால் காவிரி நீரோ மனிதர்களுக்கு அறிவு, அன்பு அமைதி முதலிய நற்பயன்களை அளிக்கவல்லது'' என்று துண்டிராச வியாசர் தம்முடைய காவிரித் தோத்திர நூலிற்பாடியிருக்கின்றார். இவர் மேலும், ''ஏ காவிரி! என் ஐயனான சிவபிரான் உன்னையேபெரிதும்விழைகின்றார். வேறேதோ காரணத்தைக்கொண்டு கங்கையை தம் சடைமுடிக்குள் அடக்கிக்கொண்டாரே யொழிய நீ பெருக்கெடுத்தோடும் இடங்களில் எல்லாம் திருக்கோயில் கொண்டு நிற்கின்றார்; ஆதலால் நீயே சிவபிரானுக்கு மற்ற ஆறுகளை காட்டிலும் விருப்பத்திற்குரியவள்'' என்று பாடும் பகுதியையும் காணலாம்.

நீலகண்ட தீட்சதர் தமது 'சிவலீலார்ணவம்' என்னும் நூலின் 21வது சருக்கத்தில் இப்பேராற்றைப் பலபடப்புகழும் பகுதியைக் காணலாம். ''தேவர்கள், கின்னரர்கள், வித்தியாதரர்கள் தாங்கள் வாழும் உலகங்களை வெறுக்கின்றார்கள்; காவிரி பாயும் பகுதி நல்ல பனுவல்களை ஓதுவதற்கும், ஓதுவிப்பதற்கும், வாழ்விற்குத் தேவையான பொருள்களை இயற்றித்தொகுப்பதற்கும் துய்ப்பதற்கும், வானுலக இன்பங்களை மண்ணிலேயே அடைவதற்கும், மேலான இடம் ஆகும். ஆதலால் காவிரி தன்னிகரற்றது; காவிரிக்கு நிகர் காவிரி தான். அக்காவிரி பாயும் நாட்டில் பிறப்பது ஒன்றே போதுமானது'' என்பது அவர் கருத்துரை. பிரும்ம புகைவர்த்த புராணம் என்னும் பெயரிய நூல், 'காவிரி' என்ற சொல்லிற்குப் பொருள் விரிப்பது புதுமையானது. 'கா' என்ற எழுத்து பாவங்களைப்போக்கும் என்றும், 'வே' என்ற எழுத்து விரும்பியவற்றைக் கொடுக்கும் என்றும், 'ரி' என்பது முத்தியின்பத்தைத் தரும் என்றும் இந்நூல் அறிவிக்கின்றது.

வடமொழிக் கந்தபுராணத்தில், துலாக் காவேரி மான்மியத்தில் காவிரியின் பெருமையைத் துலக்கும் வகையில் பல கதைகள் காணப்படுகின்றன.

ஆக்னேயபுராணத்தில், துலாக்காவேரி மான்மியம் 23ஆவது படலம் முதல் 75 ஆவது படலம் வரை கூறப்பட்டுள்ளது. அகத்தியர் அரிச்சந்திரனுக்குக் கூறுவதாக உள்ள பகுதி இவ்வாறு தொடர்கின்றது; ''காவேரி என்று கூறுகிறவனும், இப்பேராற்றை நோக்குகின்றவனும், நீரைத் தொடுகின்றவனும், நீராடுகின்றவனும் பல பிறப்புக்களில் நல்வினை செய்து மேம்பட்டவனாயிருத்தல் வேண்டும்; மேலும் துலாத்திங்களில் இந்நீரில் நீராடுகின்றவர்கள் பெறும் நலங்களை நவின்று முடித்தல்இயலாது. பன்னெடுங்காலம் தவம் செய்வதனாலும், மறைகளை ஓதுவதனாலும், நோன்புகளை மேற்கொள்வதனாலும், பல தெய்வீகத் திருப்பதிகளைச் சென்று காண்பதனாலும், விளையும் நலன்களை ஒருவன் ஒருமுறை காவிரிநீரில் நீராடுவதனால் எளிமையாய் அடைவான்'' என்றும், ''திருமாலுக்கு நிகராக விளங்குவான்'' என்றும் அகத்திய முனிவர் கூறி முடிக்கின்றார்.

காசிகண்டபுராணம், பிரும்ம கைவர்த்தன புராணம், ஆகிய நூல்களிலும் காவிரி நீராட்டின் நல்ல விளைவுகள் பல்வேறு கிளைக்கதைகளால் விளக்கப்பட்டுள்ளன.

கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த 'சத்ஃயசா நவரத்ன மாலிகா' என்னும் தோத்திரநூலின் பன்னிரண்டு செய்யுட்கள் இப்பேராற்றின் தெய்வீகச் சிறப்பைத் துலக்கும். 'காவேரி அட்டகம்' 'காவேரி புசங்கம்' என்பனவும் இவ்வகையில் அமைந்த சில வடமொழி நூல்கள். பராசர பட்டர் என்பவரால் எழுதப்பட்ட 'அரங்கராசர் தோத்திரத்தில்' காவிரியின் தெய்வீகச்சீர்மையை விளக்கும் சில செய்யுட்கள் உள்ளன.

## தமிழ் நூல்களில்

சிலப்பதிகாரம்:

சேரன் தம்பி இசைத்த சிலம்பிலே புகார்க் காண்டம் என்னும் முதற்காண்டமே காவிரி கடலொடு புகும் இடத்தமைந்த பூம்புகார் பற்றிய பகுதி. இக்காண்டத்தில் பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன. மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரு பகுதியாக அமைந்த பூம்புகார்ச் செய்திகளை இளங்கோ வடிகள் மிக அழகுறக் கூறிச்செல்கின்றார்.

கானல்வரியில் ஆற்றுவரி காவிரியின் பெருமையைப் பெரிதும் பாடுகின்றது.

கோவலன் பாடும் பாடல்கள், கங்கையைப் புணர்ந்தாலும் சோழன் மீது காவிரி நங்கைக்கு ஊடல் இல்லை என்று கூறும் கருத்துடையன:

''திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி''

என்பது முதலான மூன்று பாடல்களும், கண்ணகியின் பெருங்கற்புத்திறத்தை உணர்த்திப்பாடும் உள்ளுறை கொண்டவையாய் உள்ளன என்றும் உரைக்கலாம். காவிரி கோவலன் நெஞ்சத்தில் கண்ணகியை நினைப்பிக்கும் திறம் நோக்கத் தக்கது.

''வாழியவன்றன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி
ஒழியாய் வாழி காவேரி''

என்ற பகுதி அன்னையாகிச் சோழநாட்டை அன்புக்கரங்களில் தாங்கிப் புரக்கும் பொன்னியின் கருணைக்கு விளக்கம்.

''உழவர் ஓதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி''

என்ற பகுதி வேளாண்மைக்கு பொன்னித்தாய் பெருக்கும் கருணைத்திறத்தைக் காட்டுவதாக உள்ளது. சோழநாட்டின் மகிழ்ச்சிக்கும் இன்ப வாழ்க்கைக்கும் அடிப்படை காவிரி நீர்ப் பெருக்கே என்பதை எவ்வளவு நுட்பமாக அடிகளார் விளக்கி விடுகின்றார்:

மாதவி பாடும் பாடல்கள் மிக இனிமை பொருந்தியவை. சோழனது செங்கோன்மையைப் புகழ்கின்றாள் இக்கலைப்பாவை.

''மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூவாடை யதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி''

''பூவார் சோலை மயிலாடப்
புரிந்துகுயில்கள் இசைபாடக்
காமர்மாலை யருகசைய
நடந்தாய் வாழி காவேரி''

எனவரும் வரிகள், பொன்னியன்னையின் இயற்கைச் சூழலை, சோலைகளின் நடுவே விரிந்த நீர்பெருக்கை, ஓவியமாக்குவன எனக் கூறின் மிகையாகாது.

**மணிமேகலை:**

தண்டமிழாசான் சாத்தனுக்கும், மணிமேகலையில் பொன்னியைப்போற்றும் வாய்ப்புப் பன்முறை நேர்ந்துள்ளது. பூம்புகார் பற்றிய செய்திகள் அனைத்தும் பொன்னியன்னையின் மடிமீதமர்ந்த குழவிபற்றியன அன்றோ!

''கோள் நிலை திரிந்து கோடைநீடினும்
தான்நிலை திரியாத் தண்டமிழ்ப்பாவை''

என்று இப்பேராற்றின் வற்றாத பெருங்கருணைக்கு வடிவம் கொடுக்கும் மணிமேகலை ''தண்டமிழ்ப்பாவை'' என்று பொன்னியைப் போற்றுவதை மறக்கவியலுமா?

காவிரியாற்றின் புராண வரலாற்றுத்தோற்றத்தை,

''செங்கதிர்ச்செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்சவேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை
ஆண விசும்பின் ஆகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளக்கு''

என்ற வரிகளில் மணிமேகலை பாடுகின்றது. ஆம்; மேட்டூரில் அணையிட்டு மின்சக்தி தோற்றி நாட்டின் இருளை ஓட்டி நல்லொளி பாய்ச்சப்பொன்னியின் கருணை அடிப்படையன்றோ? ''வேணவாத்தீர்த்த விளக்கு'' என்று வருணனை செய்தது எத்துணைப் பொருத்தமானது! மெய்யானது!

**இராம காதை:**

கம்பனது இராமகாதையிலும் காவிரி வளம் போற்றப்படும். ஆம், கம்பன் காவிரிபாயும் சோணாடு தந்த காப்பியச் செல்வன் ஆவன்; ஆதலின் அப்பெருங்காப்பியப் பெரும் புலவன் மனத்துக்காவிரி நீர்பெருக்குக்கவிப்பெருக்காகப் பாய்ந்தோடியதில் வியப்பில்லைதான். இராம பிரான் பிறந்த, சரயுநதி பாயும் கோசல நாட்டை இக்கவிஞன் விளக்குவது எப்படி?

''காவிரிநாடன்ன கழனிநாடு''

காவிரியன்னையைக் கண்ணில் கண்டு பரவிய படியே சரயுவைக் கருத்தாரப்பாடுகின்றான் இப்பண்பட்ட கவிஞன்.

அகத்தியப்படலத்தில் காவிரியையே நேரிடையாகக் குறிக்கும் வாய்ப்புக் கிட்டுகின்றது கவிஞனுக்கு:

''கன்னியிள வாழைக்கனி ஈவகதிர் வாலின்
செந்நெலுள தேனொழுகு போதுமுள
தெய்வப்
பொன்னியென லாயபுன லாறுமுள
போதா
அன்னமுள பொன்னிஇவளோ டன்பின்
விளையாட''

'தெய்வப்பொன்னி' என்ற சொற்றொடரைப் புனைந்து போற்றுகின்றான் இம் மாகவிஞன். ''நளிநீர்ப்பொன்னிச் சேடுறு தண்புனற் தெய்வத் திருநதி' என்று பின்னரும் புகழ்வான். 'எண்டிசையும் ஏழுலகும் எவ்வுயிரும் உய்யக் குண்டிகையினிற் பொருவில் காவிரிகொணர்ந்தான்'' என்று அகத்தியனைப் போற்றும் போது அப்பெருமுனிவனே தமிழ்நாட்டிற்குக் காவிரியைக் கொணர்ந்த அருஞ்சிறப்பினன் என்று குறிக்கின்றார் கம்பர்.

**பெரியபுராணம்:**

பன்னிரண்டாம் திருமுறையாகச் சைவ சமயம் போற்றும் திருத்தொண்டர்புராணத்தில் சேக்கிழார்க்குப் பொன்னியைப் புகழும் வாய்ப்புப் பரவலாக உள்ளது. சோணாட்டுச் சிவநேசச் செல்வர்களது அருள் வரலாறுகளைப் பாடும்போது, அந்நாட்டின் நீர்வளம் புனைய வேண்டிய நிலை அவ்வருட்புலவர்க்கு வருகின்றது.

திருநாட்டுச் சிறப்பு என்னும் பகுதி காவிரி பாயும் சோணாட்டைப் பற்றியது.

காவிரியைச் ''சோழர் காவிரி'' என்று ஆட்சியுரிமையுடைய அரசமரபினை ஒட்டிச் சேக்கிழார் புகழ்கின்றார்.

''ஆதிமாதவ முனி யகத்தியன் தரு
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி''

என்று காவிரியின் புராண வரலாற்றுத் தோற்றத்தைத் திட்பநுட்பம்செறிய வழங்குகின்றார். இத்தெய்வப்புலவர். ''மண் மடந்தையின் பொன் மார்பிற்கு அழகு செய்யும் முத்துமாலை'' என்றும் புகழ்வார்.

'சையமால் வரைபயில் தலைமைசான்றது
செய்யபூ மகட்கு செவிலிபோன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித்தூட்டு நீரது''

என்று போற் வர். நான்முகனோடு காவிரிக்கு ஒப்புமை காட்டுவார். சிவபிரானின் திருமுடியிலிருந்து இழியும் கங்கையோடு ஒப்புமை உடையதென்பார். இறைவன் இடத்திருப் பாகத்தில் இருக்கும் அம்மையின் கருணை பெருகி உயிர்க்குலங்கட்கு உய்திகாட்டியின்பம் ஊட்டுவது போலக் காவிரிநீர் உலகுபுரந்தூட்டும் திறம் உடையது என்று இசைப்பார்;

''வண்ணநீர் விரைதர வந்த மேன்மையால்
எண்ணில் பேரறங்களும் வளர்க்கு மீகை
யால்
அண்ணல் பாகத்தை யாளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம்
போன்றது''

காவிரித்தாய் பெருக்கெடுத்தோடிப் பாய்வதனாலேயே அறங்கள் செழிக்கின்றன என்பது உணர்ந்தின்புறுதற்குரியது.

காவிரிக்கரையில் எண்ணற்ற சிவன் திருக்கோயில்கள் உள்ளன. கால்வாய்கள் வழியே நாடு முழுதும் பரவிப்பெருக்கெடுக்கின்றனள் பொன்னி என்றெல்லாம் பரவிப் ''பழுதில் காவிரிநாடு'' என்று முடிப்பார் தெய்வச்சேக்கிழார்.

பூம்புகார் நகரை இளையான்குடி மாறர் புராணத்தில் விளக்கும்போது, புனிதமே உருவாகிய பொன்னியின் நன்னீர் பாய்ந்து அந்நகரிற்கடலையும் புனிதமடையச் செய்யும் என்று பாராட்டுவார்.

''பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெடும்பெருந் தீர்த்தமுன்னுடைய
நலஞ்சிறந்தது வளப்புகார் நகரம்''

''சீரின்நீடிய செம்பியர் பொன்னிநன்னாடு'' என்றும் புகழ்வார். (அமர்நீதி.1) ''சோழநாடு'' என்று, சொல்லுவதைவிடப் 'பொன்னி நாடு' என்றும் 'காவிரிநாடு' என்றும் கூறுவதே சேக்கிழார் திருவுள்ளத்திற்குப் பெரிதும் இசைந்தது எனில், இப்பேராற்றின் மீது இப்பெரும்புலவர் வைத்திருந்த அன்புக்கு வேறு சான்றும் உண்டோ?

''நன்னீர்ப்பொன்னித்திருநாட்டு''
(வெள்ளானை-4)

''பொன்னி நீர் நாட்டு தஞ்சாவூர்''
(செருத்துணை.1)

''வளவர் பொன்னித்திருநாட்டு''
(முனையடுவார்.1)

''வளவர் காவிரிநாட்டு விரிஞ்சையூர்(சத்தி1)

''வரும்புனற் பொன்னிநாட்டு''(அரிவாட்டாயர்.1)

''பொன்னித்திருநாட்டு..பூம்புகார்''
(முருக.1)

''பொன்னி நன்னாட்டுத்....தலையூர்''
(உருத்திர.1)

''பொன்னித்திருநாட்டு'' (நமிநந்தி.1)

''பொன்னிவளம் தருநாடு பொலிவெய்த
நிலவியதால்'' (திருஞான.2)

''நீடுவண்புகழ்ச் சோழநீர் நாட்டிடைநிலவு
மாடுபொன் கொழி காவிரி வடகரைக்
கீழ்பால்
(ஏயர்கோன்.1)

''பொன்னிநீர் நாட்டு'' (சிறப்புலி.1)

''காவேரித்திருநாட்டு வளங்காட்டும்
செங்காட்டங்குடி''(சிறுத்தொண்டர்.1)

''பொன்னிநாடெனும் கற்பகப்பூங்கொடி''
(அதிபத்தர்.1)

காவேரி பற்றிய சிறந்த கற்பனை ததும்பிடச் சேக்கிழார் பாடுமிடங்கள் பல. அவற்றுள் ஒன்று திருமூலநாயனார் புராணத்தே வருவது. இறைவன் திருவமுது செய்யும்படியாக விடத்தை அளித்தது கடல்; ஆதலால் அக்கடலின் மீது காவிரிக்கு வெறுப்புண்டாயிற்றாம். அதனால்தான் வையமெல்லாம் வளம்பொங்கும் தன்நீர்பெருக்கை உதவிக்கடலொடு கலக்கும்போது சிறிய அளவினதாகித் தன் நீர்வளத்தைச் சுருக்கிக்கொண்டதாம். ஆம்; புராண வரலாறு தழுவிய இக்கற்பனை கருத வினியது. அவ்வரிகள் இதோ.

''அடல்விடையின் மேல்வருவார் அமுது
செய அஞ்சாதே
விடமளித்த தெனக்கருதி மேதினிக்கு வள
நிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரி''

''காவிரிநீர்ப் பெருந்தீர்த்தம் கலந்தாடிக் கரையேறினார் திருமூலர்'' எனப்பாடி இவ்வாற்றின் தெய்வீகத்தன்மை திருமூலர் போ்ற யோகிகளாலும் உணரப்பட்டிருந்தமையைத் தெளிவாக்குகிறார். என்றென்றும் நீர்வளம் குறையாது பாய்வது காவிரி என்ற குறிப்பைப் பல இடங்களிற் குறிப்பாரேனும் சிறந்த ஓரிடமாகப் பின்வருமிடத்தைக் குறிப்பது பொருந்தும்:

''வருநாள் என்றும்பிழையாத்
தெய்வப்பொன் வளம்பெருக்க
வளவர் குலம் பெருக்கும் தங்கள்
திருநாடு'' (மங்கையர்க்கரசி.3)

'அலையிற்றரளம் அகிலொடு சற்று
அணிநீர்ப்பொன்னி மணி கொழிக்கும்''
(கோச்செங்கட்சோழர். 1)

என்று நீர்ப்பெருக்கில் வரும் பொருள்களைத் திருமுறைகள் பாடியது போலப்பாடுவதும் உண்டு.

**பத்துப்பாட்டு:**

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடும் பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தை விரித்துரைக்கும் அழகிய பனுவல் ஆகும். அதன்கண் காவிரியாற்றின் பொய்யாவளம் இனிது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குற்றமில்லாத புகழை உடையதாய் விளங்குகின்ற வெள்ளிக்கோள் தான் நிற்றற்குரிய வடதிசைக்கண் நில்லாமல் தென்றிசைக்கண்ணே போயினும், வான் பொய்த்தாலும் தான் பொய்யாமல் நீர்ப்பெருக்கெடுத்து ஓடும் காவிரி என்றும், குடமலையிடத்தே தலையைஉடையதாய் கடலிடத்தே புகுகின்ற காவிரி என்றும் ,நீர் பரந்து கரையிலே பொன்னைச்சேர்க்கும் காவிரி என்றும் பட்டினப் பாலைத் தொடக்கத்திலேயே உருத்திரங்கண்ணனார் காவிரியின் சிறப்பை உரைத்துத் தொடங்குவார்.

''வசையில்புகழ் வயங்கு வெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புள்தேம்ப புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்'' (1-7)

இங்கு கண்ணனார் குறித்த கருத்திற்கு இசைய வரும் ஏனைய இலக்கியப்பகுதிகளும் ஒப்பு நோக்கி இன்புறத்தக்கன.

''இலங்கு கதிர் வெள்ளி தென்புலம்படரினும்
அந்தண் காவிரி வந்துகவர்பூட்ட''
(புறம்.35)

''கரியவன் புகையினும் புகைக்கொடி
தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
காவிரிப்புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை''
(சிலம்பு;10:103-108)

''கோணிலை திரிந்து கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப்பாவை''
(மணி. பதிகம் 24-25)

சேக்கிழாரடிகளார், ''பூந்தண் பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல்நாடு'' என்று கூறியதும் இக்கருத்தைத் தழுவியதே எனில் மிகையாகாது. சோழப்பெருவேந்தரது செங்கோன்மைச் சிறப்பு விளங்குவதற்கு இப்பகுதியை எடுத்துக்காட்டினார் எனலாம். கோள் நிலை திரியினும் கோனிலை திரியாது நின்று மழைதரும் சிறப்பினர் சோழமன்னர் எனக் கூறுவது அவரது அறநெறிமாறா அருமைப் பாட்டினை விளக்குதற்கே. காவிரி பொய்யாமைக்குச் சோழனது செங்கோன்மையே அடிப்படை யெனற்கு இளங்கோவடிகளின் பின் வரும் கானல்வரிப்பாட்டு சான்று ஆகும்.

''மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூவாடை யது போர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழிகாவேரி
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தவெல்லாம் நின்கணவன்
திருந்துசெங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழிகாவேரி'' [கானல்-35]

புலால் நாற்றத்தை உடைய காவிரிப்பூம் பட்டினத்து மணற்பரப்பில், தெளிந்த நீரை உடைய கடலில் காவிரி கலக்கும் புகார் முகத்துச்சிறப்பைக் கண்ணனார் சுவை பொருந்தப் பாடும் பகுதியும் உண்டு. கரியமலையை யணைந்த முகிற்றிரளைப் போன்றும், தாயின் முலையைத் தழுவிய பிள்ளை போன்றும் காவிரி கடலொடு கலக்கும் என்பார். கடலிலே தீவினை போக நீராடியவர்கள் கடலாடியதனால் உண்டாகிய உப்பு நீங்கக் காவிரியில் நீராடுவர் என்பார். காவிரி கடலொடு கலத்தற்குக் கண்ணனார் தரும் இவ்விரு உவமைகள் கருதுதற்கு இனியவை. கரிய உயர்ந்த திரைமீது சிவந்த ஆற்றுநீர் பரந்ததற்கு மாமலையணைந்த கொண்மூவை உவமையாக்குதல் தலையாய உவமை எனில் மிகையன்று. தாயும்பிள்ளையும் ஒன்று படுதல் போன்று ஆற்றுநீரும் கடல்நீரும் ஒன்று படுதல் அமைந்ததெனல் அழகுமிக்க உவமையாதல் காணலாம்.

''மாமலையணைந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவிபோலவும்
தேறுநீர்ப் புணரியோடியாறுதலை மணக்கும்''
(95-97)

இவ்வாறே திருமாவளவன் மீது பாடப் பட்ட பொருநராற்றுப் படையில் காவிரி யாற்றினாற் புரக்கப்படும் சோணாட்டின் வளம் இனிது கூறப்பட்டுள்ளமை உணரத்தக்கது. ஒரு வேலி நிலம் ஆயிரம் கலம் நெல் விளையும் படிக்காவிரியாற்றால் பேணப்படும் சோழநாட்டினை உடையவன் என்று கூறிப்பொருநராற்றுப்படையினைக் காவிரியாற்று நினைவுடன் முடிக்கின்றார் முடத்தாமக்கண்ணியார்.

''சாலி நெல்லின் சிறைகொள்வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோனே''
(346-348)

**முடிவுரை:**

இன்னும் மூவர் தேவாரங்களிலும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களிலும் கூட காவிரியின் பெருமை மிக விரிவாகப் பாராட்டிப் பேசப்பட்டிருக்கிறது. அவற்றை விரிக்கப் புகுந்தால், காவிரியின் பெருமையைப் போலவே கட்டுரை மிக விரியும். வேறெந்தப் பேராறும் பெறாத இலக்கியச் சிறப்பை காவிரி பெற்றுள்ளது என்பதை எண்ணும்போதே நமக்கு மகிழ்வு உண்டாகிறது. ''திருமேனி செழித்த தமிழ்நாடு'' என்று கனிந்து பாடும் பாரதியின் கருத்திலே பொங்கிப் பெருகும் பேராறு காவிரிதான். ஆம்! ''காவேரி தென்பெண்ணை பாலாறு'' என்று காவிரியை முன்வைத்துத்தானே புதுமைக் கவியின் பாடலே தொடங்குகிறது.

# நெற்றிக் கண்ணனும் வெற்றிச் செல்வியும்

திருமதி வ. உமாபார்வதி, எம்.ஏ.,
துணைப் பேராசிரியை, மீனாட்சி மகளிர் கல்லூரி,
கோடம்பாக்கம், சென்னை

தமிழில் தொன்மை பொருந்திய நூல்களாகத் திகழ்பவை சங்க இலக்கியங்கள். கி.பி. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலமே சங்க இலக்கியங்கள் தோன்றிய காலம் என்பர். இப்பொழுது இந்துமகா சமுத்திரம் இருக்கும் இடம் அக்காலத்தே கடலுள் மூழ்கிய 'லெமூரியா' கண்டமாகும். இக்கண்டமே ''குமரிக்கண்டம்'' என்ற பெயரில் மனித இனத்தின் பிறப்பிடமாகத் திகழ்ந்தது என்பர் வரலாற்றாசிரியர். அங்கேதான் தமிழ்க்குடிமக்கள் முதன் முதலில் தோன்றினர். முச்சங்கங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். அச்சங்க காலத்திலே தோன்றிய பாடல்களும், அதற்கு முன்னர் தோன்றிய பாடல்களுமே சங்க இலக்கியங்களாகத் தொகுக்கப்பட்டன என்பர்.

### இந்து சமயத்தின் தொன்மை:

இந்து சமயம் எப்போது தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? என்ற வினாவிற்கு விடை காணல் அரிது. ஏனைய சமயங்கள், தோற்றுவித்தவர்களின் பெயரால் வழங்க இந்து சமயத்தை தோற்றுவித்தவரின் பெயர் அறியப்படாமையே அதன் தொன்மைக்குச் சான்று பகரும். 'இந்து சமயம்' என்பது பொதுப் பெயர். இதன் உட்பிரிவுகள சைவம், வைணவம் என்று கடவுள் பெயரால் அழைக்கப் பெறுகின்றன. பிற சமயங்கள் தோன்றுவதற்கு முன்னரே, இந்து சமயம் மட்டும் இருந்தமையால் அதற்குத் தனிச் சிறப்புப் பெயர் அமையவில்லை என்ற கருத்துகள் உள.

குமரிக்கண்டத்தில் நெற்றிக் கண்ணையுடைய மாந்தரைக் குறிக்கும் உருவச் சிலைகளைத் தொல் பொருள் ஆய்வாளர் கண்டு பிடித்துள்ளனர். அமெரிக்காவில் சிவலிங்கங்களையும், மலேசியா, ஜாவா, போர்னியா தீவுகளில் இந்து கலாச்சாரச் சின்னங்களையும் கண்டெடுத்துள்ளனர். வியட்நாம் நாட்டில் சிவலிங்கம் அமைந்த கோயில்களும் கம்போடியா, தாய்லாந்து நாட்டில் இராமாயண, பாரதக் காட்சிகள் ஓவியமாக வரையப்பட்டுள்ளமையும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காட்டுவனவே.

தொல்காப்பியத்தில் 'சமயம்' என்ற சொல்லே இல்லை. முதன் முதலில் மணிமேகலையிலே 'சமயம் என்ற சொல் காணப்படுகின்றது. பின்னர் திருமந்திரத்திலும் பிற்கால சமய இலக்கியங்களிலுமே 'சமயம்' என்னும் சொல் இடம் பெறுகிறது.

### தொல்காப்பியர் காட்டும் சமயம்:

சங்க நூல்களில் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். தமிழர்கள் நிலங்களை ஐவகையாகப் பிரித்து, ஐவகை நிலங்களுக்கும் தெய்வங்களை வரையறை செய்திருந்தனர். மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். காடும் காடு சார்ந்த இடமான முல்லை நிலத் தெய்வம் திருமால். வயலும் வயல் சார்ந்த இடமான மருத நிலத் தெய்வம் இந்திரன். கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல் நிலக் கடவுள் வருணன்; பாலை நிலக் கடவுள் கொற்றவை என்கிற காளி..

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்''

(தொல். அகம்.5.)

### உருவமற்றவன் இறை:

இறைவன் தனக்கெனத் தனி உருவம் இல்லாதவன். கடவுளின் உண்மை நிலை யாதென ஒருவராலும் கூற இயலாது என்கிறார் திருமூலர்.

''யார் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யார் அறிவார் அந்த அகலமும் நீளமும்
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்று அதன்
வேர் அறியாமல் விளம்புகின்றேனே''
(திருமந்திரம் பொதுப்பாயிரம் பாடல் 127)

காரைக்கால் அம்மையார் இறைவனின் திரு உருவம் காணாது அல்லலுறுகின்றார்.

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றும்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட்கு என் உரைக்கேன்
எவ்வுருவோ நின் உருவம் எது?
(அற்புதத்திருவந்தாதி பாடல் 61)

**சங்க இலக்கியங்களில் கடவுள் வழிபாடு:**

பண்டைத் தமிழர் உருவ வழிபாடு இயற்றவில்லை. இயற்கையை கடவுளாக வழிபட்டனர். நிலம், நீர், தீ, காற்று, விசும்பு முதலான பஞ்சபூதங்களை வழிபட்டனர். வைதிக சமய நெறியின் கலப்பால் சங்ககாலத்தில் கடவுள் வழிபாடு இரண்டு முறைகளில் நடைபெற்றதாகத் தெரிகிறது. ஒன்று தமிழர்கள் வழிபாடு செய்த தனிப்பட்ட வழிபாட்டு முறை, மற்றொன்று வைதிக நெறியோடு சார்ந்த வழிபாட்டு முறை.

மரத்தைத் தெய்வமாக வழிபட்ட மக்கள் நாளடைவில் அம்மரத்தின் அடியில் கடவுள் உருவச் சிலையை அமைத்து வழிபட்டனர். அச்சிலையைச்சுற்றி மரத்தால் கோயில் அமைத்தனர். காலப்போக்கில் செங்கல்லாலும், கருங்கற்களாலும் கோயில் கட்டினர். கோயில் அமைத்த பிறகு ஆதியில் அவ்விடத்திலிருந்த மரம் 'ஸ்தல விருட்சமாக' அமைந்தது.

**சிவன்:**

சிவனைக் குறிப்பிட்ட ஒரு நிலத்தின் தெய்வமாகச் சங்க இலக்கியங்கள் கூறவில்லை. மொகஞ்சதாரோ-ஹரப்பா அகழ்வாராய்ச்சியில் சிந்துவெளி நாகரிகத்தில் சிவலிங்கங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதனால் சிவலிங்க வழிபாடு மிகத்தொன்மையான காலத்திலிருந்தே இருந்ததாகத் தெரிகிறது.

திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது தோன்றிய ஆலகால விடத்தினை உண்டதனால் கண்டங்கறுத்தவன் என்பதை, ''நீலமணி மிடற்று ஒருவன்'' (புறம் 91: 6), மூன்று கண்களையுடையவன் என்பதை ''முக்கட் செல்வர்'' (புறம் 6; 18) ''பிறைநுதல் விளங்கும் ஒருகண்'' ( புறம் 55: 5 ) ''பிறை நுதலான்'' (புறம் 22: 3) எனப் புறநானூற்றுப் பாடல்கள் சிவனைக் குறிப்பிடுகின்றன.

சிவபெருமான் முப்புரம் எரித்த பெருமை பூண்டவன். நான்முகனே தேர்ப்பாகனாக, நான்கு மறைகள் பரிகளாக, நானிலம் தேராக, வாசுகி நாணாக, இமயம் வில்லாக, ஞானத்தீ அம்பாகக் கொண்டு சென்று வெள்ளி, பொன், இரும்பாலான மதில்களாலாகிய திரிபுரங்களை எரித்தழித்து, தேவர்கள் செய்த யாகத்தின் கண் கொடுக்கப்படும் அவிர்பாகத்தினை உண்ட பசுமையான கண்களையுடைய சிவன் என்று பரிபாடல் பேசுகிறது.

''ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ
வேத மாபூண் வையத்தேர் ஊர்ந்து
நாகம் நாணா மலை வில்லாக
மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின்முனிய
மாதிரம் அழல எய்து, அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைங்கண் பார்ப்பான்''
(பரிபாடல் 5: 22-27)

''வெற்றி தரும் போர்க்களத்தில் அவன் உயர்ந்த இடபக் கொடியை ஏந்தி யுள்ளான். ஒருபாகத்தில் உமையம்மை வீற்றிருக்கின்றாள். அனைவரும் புகழும் திரண்ட தோள்களை உடையவன். இமைத்தல் இல்லாத மூன்று கண்களை உடையவன். முப்புரங்களை அழித்தவன் எனச் சிவபெருமான் திருமுருகாற்றுப்படையின் கண்புகழப் படுகிறான்.

''.........................வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும்இமையாமுக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்''
(திருமுருகாற்றுப்படை 151-154)

பழைய வரலாற்றைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்திக் கதைகள் வாயிலாகத் தெரிவிப்பதே புராணம். சங்க இலக்கியங்களில் புராணக் கதைகளின் வாயிலாகவும் சிவனது பெருமைகள் தெரியவருகின்றன.

திருக்கைலாயமலையை இராவணன் பெயர்த்தெடுக்க முயன்று வருந்திய புராணச் செய்தி கலித்தொகையில் கூறப்படுகிறது.

''இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையில் கீழ்ப்புகுந்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன்போல''
(குறிஞ்சிக்கலி 2: 1-5)

**கொற்றவை:**

கொற்றவை திராவிடர்களின் வெற்றித் தெய்வமாகக் குறிக்கப்படுகின்றாள். கொற்றவை பெண் தெய்வம். கொற்றவைக்கும் பலி கொடுத்து வெறியாட்டு வழிபாடு நடைபெற்றதைக் ''கொற்றவை நிலை'' எனத் தொல்காப்பியம் கூறுகிறது.

''மறங்கடைக் கூட்டிய துடிநிலைசிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே''
(தொல். புறம். 59)

அயிரை மலையில் உறைகின்ற கொற்றவைத் தெய்வத்தைச் சேர மன்னர்கள் வழிபட்டு வந்தனர் என்று பதிற்றுப்பத்து உரைக்கிறது. மேலும் பிளவுகள் குகைகள் இவைகளையுடைய மலைச் சாரலில் எழுந்தருளியுள்ள திரிசூலத்தைக் கையிலே கொண்ட கொற்றவைக்குப் பலிக்கடனை நிறைவேற்றுதல் பற்றிக் குறுந்தொகை குறிக்கிறது.

''விடர்முகை அடுக்கத்து விறல் கெழு
சூலிக்குக்
கடனும் பூணாம்'' (குறுந்.218; 1-2)

இந்து சமயத்தின் அறுவகை உட்பிரிவுகளில் சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் 'சாக்தம்'. இந்தியாவிலுள்ள 'சக்திப் பீடங்கள்' சக்தியின் பெருமையை நினைவூட்டுவன.

சைவ சித்தாந்தத்தில் சக்திக்கே முதலிடம் உண்டு. இறைவன் அம்மையப்பனுமாகக் காட்சியளிக்கிறான் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. சிவபெருமான் ஐந்தொழிற் செய்வதற்கு உறுதுணையாக நிற்பவள் சக்தி.எனவே தான் ''சக்தியில்லா விட்டால் சிவனே என்றிரு' என்று சொல்கிறார்கள்.

கொற்றவைதன் அருள் வடிவங்களால் காளி, துர்க்கை, பவானி, சாமுண்டி,சியாமளா தேவி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றாள். காளிதாசர்,காளமேகப் புலவர், குமரகுருபரர், அபிராமபட்டர், வீர சிவாஜி, இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியோர் அம்பிகையின் திருவருள் பெற்றவர்களே.

தெய்வத்திற்கடுத்தபடியாக மழையைக் குறிக்கும் 'மாரியை' வழிபட்டு வந்தனர் நம் முன்னோர். இம்மாரியே நாளடைவில் 'மாரியம்மன்' தெய்வமாக மாறி, ''மாரியம்மன் வழிபாடு'' ஏற்பட்டது. சங்ககாலத்தில் சிறு தெய்வமாக வழிபாடு செய்யப்பட்ட அவள் வைதிக சமயக்கலப்பால், சக்தியாக, உமா தேவியாக, அம்பிகை ஆனாள். சிவன் கோயில்களில் சிவனோடு சேர்ந்து பெருந்தெய்வம் ஆனாள்.

## காலனுக்குரைத்தல்

—மகாகவி பாரதியார்

பல்லவி

**காலா, உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன் - என்றன்**
**காலருகே வாடா, சற்றேஉனை மிதிக்கிறேன்.**
(காலா உனை)

சரணங்கள்

1. **வேலாயுத விருதினை மனதிற் பதிக்கிறேன் - நல்ல**
**வேதாந்த முரைத்த ஞானியர் தமையெண்ணித் துதிக்கிறேன்-ஆதி**
**மூலா வென்று கதறிய யானையைக் காக்கவே - நின்றன்**
**முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ கெட்ட மூடனே - அட**
(காலா உனை)

2. **ஆலால முண்டவ னடி சரணென்ற மார்க்கண்டன் - தன**
**தாவி கவரப்போய் நீ பட்ட பாட்டினை யறிகுவேன் - இங்கு**
**நாலாயிரம் காதம் விட்டகல்! உனை விதிக்கிறேன்! ஹரி**
**நாராயணனாக நின்முன்னே உதிக்கிறேன்! - அட**
(காலா உனை)

# பகவான் இராமகிருஷ்ணரின் பொன்மொழிகள்

1. இரவில் வானில் பல விண்மீன்களைக் காண்கிறாய். ஆனால் சூரியன் உதித்ததும் அவை தென்படுவதில்லை. ஆதலால் பகற் பொழுதில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே! உனது அஞ்ஞான காலத்தில் நீ இறைவனைக் காணமுடியாததனால் இறைவனே இல்லை என்று சாதிக்காதே.

2. படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகினுள் நுழையக்கூடாது. மனிதன் உலகத்தில் வாழலாம். ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக்கூடாது.

3. ஒருவன் பன்றி இறைச்சியைத் தின்பவனாயினும், இறைவனிடம் அன்பு கொண்டவனாக இருந்தால் அவன் உயர்ந்தவனே. பால் கலந்த அன்னம் அல்லது ஹவிஷ்யான்னம்இவைகளைச் சாப்பிட்டுக்கொண்டிருப்பவனாயினும், பெண்ணாசை பொன்னாசை கொண்டவனாக இருந்தால் மிகவும் இழிந்தவனாகிறான்.



4. தண்ணீரை சிலர் 'ஜலம்' என்றும், சிலர் 'வாரி' என்றும், சிலர் 'வாட்டர்' என்றும் சிலர் 'பானி' என்றும் வேறு வேறு வார்த்தைகளால் அழைக்கின்றனர். அதுபோல ஒரே சச்சிதானந்தப் பொருளை, சிலர் கடவுளென்றும், சிலர் அல்லா என்றும், சிலர் ஹரி என்றும் சிலர் பிரம்மம் என்றும் வேறு வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்.

5. சூரியன் பூமியைக் காட்டிலும் பன் மடங்கு பெரிதாயினும் வெகு தூரத்துக்கப் பால் இருப்பதால் ஒரு சிறிய தட்டைப்போலக் காணப்படுகிறது. அதுபோலவே இறைவன் அளவற்ற மகத்துவமுடையவனாய் இருந்தும், நமக்கும் அவனுக்குமிடையே உள்ள தூரத்தினால் நாம் அவனுடைய உண்மையான மகத்துவத்தை அறியச் சக்தியற்றவர்களாக இருக்கிறோம்.

6. என் அருமைக் குழந்தைகளே! உண்மையாகவே இறைவனைக் காண முடியும். நாம் எப்படி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறோமோ, அதுபோலவே கடவுளைக்கண்டு அவரோடு பேச முடியும். நான் இப்படிச் சொல்வது வெறும் வார்த்தைகள் அல்ல, சத்தியமான வார்த்தைகளேஆகும்.

7. கடவுளை அடைவதற்குப் பல பாதைகள் உள்ளன. பல்வேறு பாதைகளின் வழியாகக் காளிகோயிலுக்கு வந்து சேருவது போன்றதுதான் இது. ஆனால் ஒன்று கூற வேண்டும். சில பாதைகள் தூய்மையாக உள்ளன. சில பாதைகள் அசுத்தமாக உள்ளன. தூய்மையான பாதையில் பிரயாணம் செய்து கோவிலுக்கு வருவது நல்லதாகும்.

8. கிணற்றுத் தவளையைப் போன்றிராதே. தன் கிணற்றைக் காட்டிலும் பெரிதும் மேன்மையானது வேறொன்றும் இல்லை என்பதாக அது நினைக்கிறது. அதே போன்று பிடிவாதமும் மூட பக்தியும் உடையவர்கள் தங்கள் மதம் தவிர மற்றவையெல்லாம் பொய்யென்று கருதுகின்றனர்.

9. வேகவைத்த நெல்லை பூமியில் விதைத்தால் அது மறுபடியும் முளைக்காது. வேக வைக்காத நெல்தான் முளை விடும். அது போல உண்மை ஞானமாகிய தீயால் வெந்த ஒருவன் பரிபூரணமாக இறப்பானானால், அவனுக்கு மறு பிறவி கிடையாது. அஞ்ஞானத்துடன் மரணமடைந்தால், மீண்டும் பிறக்க வேண்டியதுதான்.



மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் மாலை அணிவிக்கிறார்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் 15.8.85 அன்று நடைபெற்ற பொதுவிருந்து நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார். தக்கார் V. N. சிதம்பரம் உணவு பரிமாறுகிறார்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமீர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.